# தென்னை மரத் தீவினிலே

கே. பி. நீலமணி

சாரதி பதிப்பகம்
37, மந்தவெளி தெரு
சென்னை-600 028

# தென்னைமரத் தீவினிலே...

(இளம் உள்ளங்களில் அன்பையும், மனித நேயத்தையும், ஒருமைப்பாட்டையும், பதிய வைக்கும் விறுவிறுப்பான சிறுவர் நாவல்.)

கே. பி. நீலமணி

சாரதி பதிப்பகம்
37, மந்தவெளி தெரு,
சென்னை - 600 028.

# நூல் அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தென்னைமரத் தீவினிலே |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிப்பு, டிசம்பர் 1992 |
| ஆசிரியர் | : | கே. பி. நீலமணி |
| மொழி | : | தமிழ் |
| நூலின் வகை | : | சிறுவர் நாவல் |
| நூலின் அளவு | : | கிரவுண் 1×8 |
| (C) உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாளர் | : | சாரதி பதிப்பகம்,<br>37, மந்தவெளி தெரு<br>சென்னை-600 028 |
| தாள் | : | 10.7 **KG** வெள்ளைத்தாள் |
| எழுத்து | : | 12 Pt |
| பைண்டிங் | : | கார்டுபோர்டு |
| பக்கங்கள் | : | 144 |
| விலை | : | ரூ 22-00 |
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்<br>91, டாக்டர் பெசன்ட் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-600 014 |

# குதூகலமாகப் படிக்க...

சிறுவர்களுக்கு எழுதுவது ஒரு தவம். அவர்களின் மனோநிலை, வார்த்தைகள், கபடறியா சிந்தனை என்பன வற்றை உள்வாங்கி அவர்களின் அபிமானத்தைப் பெறுவ தென்பது இலகுவில் ஆகக்கூடிய காரியமல்ல.

தமிழில் சிறுவர் இலக்கியம் வறுமை கொண்டது. வறுமை ஒழியவேண்டும். குழந்தை இலக்கியம் நிறையவே உருவாக வேண்டும்,

பிறமொழிகளில் பேர்பெற்ற எழுத்தாளர்களெல்லாம் குழந்தைகளுக்கு எழுதுவதில் ஆர்வம் காட்டியவர்கள். இவ்வழியில் திரு. கே.பி. நீலமணியும் உள்ளார்.

'புல்லின் இதழ்கள்' போன்ற பெரியவருக்கான நூலை எழுதிய இவர் சிந்தனையூட்டும் நல்லநூல்களின் ஆசிரியர். குழந்தைகளுக்கும் நிறைய எழுதியிருப்பவர் இவர்.

இவரது குழந்தை நூல்களுக்காக, தங்கம், வெள்ளி பதக்கங்களையும், தமிழக அரசின் பரிசு, இலக்கியச் சிந்தனை பரிசு ஆகியவற்றையும் பெற்றவர். இவரது இந்த நாவல், தினமலர் சிறுவர் மலரில் வெளியாகி எண்ணற்ற குழந்தைகளை மகிழ்வித்துள்ளது.

விறுவிறுப்பான இந்த சிறுவர் நாவல், இவர்க் கெல்லாம் நல்ல விருந்து. சிறுவர்கள் குதூகலத்தோடு இதைப்படித்து மகிழ்வார்கள். ஆசிரியரை இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

சென்னை

**செ. யோகநாதன்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உல்லாசப் பயணம் | 5 |
| 2. | இருவேறு உலகம் | 13 |
| 3. | அம்மா டாட்டா! | 19 |
| 4. | உலகம் தெரிந்தவன் | 28 |
| 5. | தங்கமணியின் தங்க மனசு | 35 |
| 6. | உரிமைக் குரல் | 44 |
| 7. | ஆகாசக் கடையா அதிசயக் கடையா | 50 |
| 8. | சிவப்பு ஆற்றில் வள்ளி மலர் | 59 |
| 9. | மனைவியைத் தேடி | 67 |
| 10. | ஒரு மலர் உறங்குகிறது | 73 |
| 11. | இலங்கைச் சுற்றுலா | 78 |
| 12. | தாமரைக் குளத்தில் தங்கமணி | 88 |
| 13. | ஒரு புதிய லட்சாதிபதி உருவாகிறான் | 97 |
| 14. | உயிர் காத்த உத்தமன் | 105 |
| 15. | தாயில்லாப் பிள்ளை | 111 |
| 16. | இதயம் வெடித்தது | 116 |
| 17. | வேட்டை | 124 |
| 18. | வள்ளியம்மை வந்தடைந்தாள் | 134 |

# தென்னைமரத் தீவினிலே...

## 1

## உல்லாசப் பயணம்

பாபுவுக்கும், ராதாவுக்கும் ஏகக் குஷி. இலங்கைக்கு தங்களையும் அழைத்துச்செல்ல தந்தை சம்மதித்ததே அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

பாபுவின் தந்தை பரமகுரு சென்னையில் ஒரு தொழிலதிபர். இலங்கையில் நடைபெறும சர்வ தேச வர்த்தக மாநாட்டில் கலந்துகொள்ள கம்பெனி விஷயமாக அவர் மட்டுமே முதலில் செல்வதாக இருந்தது. ஜூலை மாத மத்தியில் பயண டிக்கெட் வாங்கும் நேரத்தில் பரமகுருவின் தாயார் லட்சுமி, தானும் இலங்கை வருவதாகக் கூறினாள்.

"குரு, நான் இறப்பதற்கு முன் இலங்கை கதிர்காம முருகனை ஒருமுறை தரிசனம் செய்துவிட வேண்டும்," என்று ஓயாமல் கூறிக்கொண்டே இருந்தார் லட்சுமி.

ஆகவே இப்போது தாயாரின் உடல் நலம் சற்று தேறி இருக்கும்போது அவரது ஆசையை நிறைவேற்றி விடவேண்டும் என்று எண்ணிய பரமகுரு, "சரி அம்மா," என்று சொல்லி விட்டார்.

தன் தாயாரை அழைத்துச் செல்வதென்றால் அம்மாவுக்கு உதவியாக தன் மனைவியும் வர வேண்டும். எனவே, குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு, குடும்பத்தோடு போய் வரலாமே என எண்ணினார்.

இதைக் கேட்ட பாபுவும், ராதாவும் "தாங்க்யூ டாடி..." என்று மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினர்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு புறப்படுகிற 'ஏர்லங்கா' விமானத்தில் குடும்பத்தோடு செல்வதற்கு பரமகுரு டிக்கெட் வாங்கி விட்டார்.

பாபுவும், ராதாவும் பள்ளிக்கு ஒரு வாரம் லீவ் எழுதி அனுப்பி விட்டனர். பயணம் நிச்சயமான உடனேயே பரமகுரு கொழும்பில் உள்ள தன் மாமா பொன்னம்பலம், சகோதரி வள்ளியம்மை,

மற்றும் அங்குள்ள உறவினர்கள் எல்லாருக்கும் தாங்கள் குடும்பத்துடன் இலங்கை புறப்பட்டு வருகிற தேதியை குறுப்பிட்டு எழுதினார்.

நாளை இலங்கை புறப்பட வேண்டும். ஒரு வருக்கு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு தங்களுக்கு வேண்டிய வித விதமான அழகிய துணிமணிகளாகப் பார்த்து, தங்கள் பெட்டியில் நிரப்பிக் கொண்டிருந்தனர் பாபுவும், ராதாவும்.

அன்று வியாழக்கிழமை

விமானம் புறப்படுவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே தமது காரில் பரமகுரு குடும்பத்துடன் மீனம்பாக்கம் விமான நிலையத்தை அடைந்துவிட்டார். அவரை வழியனுப்ப அவரது கம்பெனியின் உயர் அதிகாரிகள் வந்திருந்தனர்.

திருமணம் ஆன புதிதில், காந்திமதி கணவருடன் சேர்ந்து ஜப்பான், அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கெல்லாம் உல்லாசப் பொழுது போக்காகப் போய் வந்திருக்கிறார். ஆனால் பாபுவுக்கும், ராதாவுக்கும் இதுதான் முதல் விமானப் பயணம்.

பஸ்; ரயில் டிக்கெட் போலல்லாமல், விமானப் பயண டிக்கெட்டே பெரிதாக பார்ப்பதற்கு அழகாக இருந்தது. காரிலிருந்து, டிரைவர் இறக்கி வைத்திருந்த அவர்களது சாமான்கள், பெட்டிகள் எல்லாம் ஒவ்வொன்றாக எடை போடப்பட்டு.

பரிசோதிக்கப்பட்டு, அதில் ஒரு லேபிள் தொங்க விடப்பட்டது.

சாமான்களை தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அவர்கள் எண்ணியதற்கு மாறாக அவைகள் ஒரு அலுவலரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டு உள்ளே எடுத்துச் செல்லப் பட்டன. பயணிகள் அனைவரும் இப்படித்தான் செய்தார்கள்.

அடுத்தபடியாக அவர்கள் வேறொரு அறையின் முன்பாக நகர்ந்து கொண்டிருந்த வரிசையில் சேர்ந்து கொண்டனர்,

விமான நிலையத்தில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள், பயணிகள் ஒவ்வொருவரையும் முழுமையாக சோதனையிட்டனர். பின்னர் அவர்கள் விமானத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

பாபு தன் தந்தையிடம், "நம்மையும் சோதனை செய்வார்களா!" என்று கேட்டான்.

"ஆமாம்," என்று அவர் தலையசைத்தார்.

"ஏன்? எதற்காக இங்கு இப்படிச் செய்கிறார்கள்?" என்று மெல்ல தந்தையின் காதருகே கேட்டான்.

"விமான பயணிகள் விதிவிலக்கான பொருள்களையோ, சட்டவிரோதமான சாமான்களையோ உரிய முறையின்றி கொண்டு செல்கிறார்களா என்பதை பரிசோதிக்கிறார்கள்", என்றார்.

"விதி விலக்கு; சட்ட விரோதமானது அப்படி என்றால் என்ன அப்பா?"

"சில குறிப்பிட்ட சாமான்களை, பயணிகள் சுங்க வரி செலுத்தாமல் கொண்டு செல்ல முடியாது, அதற்கு உரிய வரியைச் செலுத்தி எடுத்துச் செல்லலாம். அப்படியன்றி, தெரியாமலோ, முறையின்றியோ கொண்டு போனால் அதை சோதித்து, அதற்கு அபராத வரி விதித்து கட்டணம் வசூலிப்பார்கள். சில பொருட்களை எடுத்துச் செல்வது சட்ட விரோதமாகக் கருதப் படும். இப்படி இங்கு சோதனை செய்யும் உரிமை பெற்றவர்கள் இந்த சுங்க இலாக்கா அதிகாரிகள்," என்று விளக்கினார் பரமகுரு.

"நாம் அப்படிப்பட்டவர்கள் இல்லையே!" பாபு லேசான கவலையோடு கேட்டான்.

"யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைப்பற்றி எல்லாம் அவர்களுக்கு அக்கறை இல்லை விமானத்திலுள்ள அத்தனை பயணிகளும் பத்திரமாக அவரவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர வேண்டும். யாருக்கும், எவராலும், எந்தவித அபாயமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டியது அதிகாரிகளின் கடமை அல்லவா? அதற்காகவே ஒவ்வொரு பயணியின் உடமைகளும், உடலும், கவனமாய்ப் பரிசீலிக்கப்படுகின்றன" என்றார் பரமகுரு.

பின் எல்லாரும் விசாலமான அந்த விமான தளத்தில் இறங்கி நடந்தார்கள். அவர்களை

ஏற்றிச் செல்லவேண்டிய 'ஏர்லங்கா' விமானம் தயார் நிலையில் இருந்தது. அப்போது பாபு, கிளம்பிக் கொண்டிருந்த ஒரு விமானத்தையும்; ஆகாயத்திலிருந்து மெல்ல கீழே இறங்கித் தரையில் ஒரு சுற்றுச் சுற்றிவந்து தங்கள் எதிரில் வந்துநின்ற வேறு ஒரு விமானத்தையும் பார்த்தான்.

பாபு எல்லோருடனும் தங்கள் விமானத்தை நெருங்கியபோது, "இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் இலங்கை செல்லும் விமானம் புறப்படும்" என்கிற அறிவிப்பு ஒலித்தது.

சட்டென்று நினைத்துக் கொண்டவனைப் போல் பாபு, "நம்முடைய பெட்டிகள் எல்லாம் எங்கே அப்பா," என்றான் பரபரப்புடன்.

பரமகுரு அமைதியாக பாபுவிடம், 'ஏர்லங்கா' வின் வால் பகுதியைக் காட்டினார்.

விமானத்தை ஒட்டினாற்போல் நின்றுகொண்டிருந்த ஒரு டிரக்கிலிருந்து எல்லாருடைய பெட்டிகளும், சாமான்களும் ஒரு கன்வேயர் (மூட்டைகளை ஏற்றிச் செல்லும் இயந்திரம்!) மூலம் விமானத்திற்குள் நகர்ந்து கொண்டிருந்தது. அத்தனை சாமான்களையும் ஏற்றி முடிந்ததும் அந்த டிரக் நகர்ந்தது. உடனே அந்த வால்பகுதியும் மூடப்பட்டது.

இலங்கை செல்லும் பயணிகள் அனைவரும் விமானத்திற்குள் ஏறி தங்களுக்கென்று குறிப்பிட்

டுள்ள இருக்கையில் அமர்ந்து கொண்டனர். பரமகுருவின் குடும்பத்திற்கு இடதுபக்கம் உள்ள வரிசையில் சேர்ந்தாற்போல் இடம் கொடுக்கப் பட்டிருந்தது.

பாபுவும், ராதாவும் ஜன்னல் அருகே அமர்ந்து கொண்டனர். சற்று நேரத்திற்கெல்லாம் விமானத்தின் முன்புறமுள்ள விசிறி பலத்த இரைச்சலுடன் சுழல ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து—

"வணக்கம் நண்பர்களே!"

விமானப் பணிப்பெண் அறிவித்துக் கொண்டிருந்தாள்—

"விமானம் இன்னும் சில வினாடிகளில் புறப்படும். பயணிகள் தங்கள் பாதுகாப்பு பெல்டை அணிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்!"

பாபுவுக்கும், ராதாவுக்கும் பரமகுரு பெல்டை மாட்டிவிட்டார். அப்போது, மெல்ல அவ்விமானம் ஊர்ந்து, பின்னர் படுவேகமாக ரன்வேயில் ஓடி ஜம்மென்று முன் காலை உயர்த்தி நிற்கும் குதிரையைப் போல தரையிலிருந்து எழும்பி வானவெளியில் உல்லாசமாகப் பறக்கத் துவங்கியது.

பாபுவும், ராதாவும் கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தனர். சென்னை மாநகரத்து வானளாவிய கட்டிடங்கள்

எல்லாம் சிறிய சிறிய சோப்புக் கட்டிகளை அடுக்கி வைத்தாற்போல் காட்சியளித்துக் கொண்டிருந்தன. நிமிஷ நேரத்திற்குள் இந்த காட்சி மறைந்தது.

இப்போது அந்த விமானம் பரந்த நீலக் கடலின் மேலே அழகிய ஒரு பறவையைப்போல பறந்து சென்றுகொண்டிருந்தது.

# 2

# இருவேறு உலகம்

கொழும்பு விமான நிலையத்திற்கு வெளியே படகு போன்ற பல வெளிநாட்டுக் கார்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. தங்கள் குடும்பத்துடன் அந்தக் கார்களில் வந்திறங்கிய பரமகுருவின் உறவினர்கள், அவரை வரவேற்க விமானதள வரவேற்பறையில் காத்திருந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் கொழும்பு நகரத்தின் பிரதான இடங்களில், பிரபலமான தொழில்கள் செய்து செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவர்கள்.

அவர்களது மனைவிகள் விலை உயர்ந்த பட்டுப் புடவைகள் அணிந்து கொண்டு பளிச் சென்று காட்சி அளித்தனர். அவர்களது கழுத்திலும், காதிலும், கைகளிலும் அணிந்திருந்த தங்க, வைர நகைகள் மாலை நேரத்து சூரியனின் பொற்கிரணங்களில் மின்னி ஜொலித்தன.

செல்வச் செழுப்பில் வளர்ந்திருந்த அவர்களின் குழந்தைகள் உல்லாசமாக அந்த ஹால் முழுதும் சுற்றிச் சுற்றி ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

இந்தச் செல்வச் சூழல் நிறைந்த கூட்டத்தில் இருந்து சற்று தூரத்தில் ஒதுங்கினார் போல் வள்ளியம்மை தன் ஒரே மகனான அருணகிரியின் கையைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள். அருணகிரி ஒன்பதாவது வகுப்பு மாணவன். அவனும், அவன் தாயும், பரமகுருவைப் பார்க்கத் தான் வந்திருந்தார்கள்.

வள்ளியம்மை பரமகுருவின் ஒன்றுவிட்ட தங்கை. அவரது தாய் லட்சுமி அம்மாளின் மூத்த சகோதரி மகள். பரமகுருவும், அவர் தாயாரும் வள்ளியம்மையிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தனர். அவளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் லட்சுமி அம்மாள் கண் கலங்குவாள்.

வள்ளியம்மை நன்கு படித்தவள். மிகவும் புத்திசாலியான பெண். செல்வம் கொழிக்கும் பரம்பரையில் பிறந்த அவளை, சீரும் சிறப்புமாய் திருமணம் செய்து கொடுக்க எண்ணியிருந்த வேளையில்—

வள்ளியம்மை தன்னுடன் படித்த ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த கனகவிஜயனை விரும்பி மணந்து கொண்டாள் இதற்காக வள்ளியம்மையின் தாய் அவளை வெறுத்து ஒதுக்கி விட்டாலும்

லட்சுமி அம்மாளும், பரமகுருவும் அவளிடம் அன்போடு பழகினர்.

ஆயினும், உள்ளூரில் இருக்கும் பணக்கார உறவினர்கள் பலருக்கும், இதனால் வள்ளியின்மீது வருத்தமும், விஜயன்மீது கோபமுமே மேலோங்கி இருந்தது.

இப்போதுகூட,

பரமகுரு தன் குடும்பத்துடன் இலங்கை புறப்பட்டு வருகிற விபரத்தை வள்ளிக்கு எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்ததுமே கனகவிஜயன் வள்ளியம்மையிடம், 'யார் நம்மிடம் எப்படி இருந்தாலும், உன் அண்ணன் பரமகுரு நல்லவர். என்னால் இன்று மாலை கொழும்புவர இயலாது கூட்டம் இருக்கு. நீ அருணகிரியை அழைத்துக் கொண்டு விமான நிலையத்திற்குப் போ. அங்கேயே அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வந்துவிடு, கூட யார் வீட்டுக்கும் போக வேண்டாம்" என்று தன் மனைவியிடம் சொல்லி அனுப்பியிருந்தான். அதன் பேரிலேயே அவளும், மற்றவர்கள் போல விமான நிலையத்திற்கு வந்திருக்கிறாள்.

மவுனமாக நின்று கொண்டிருக்கும் தன் தாயிடம் அருணகிரி, "அவர்கள் எல்லாம் யாரும்மா?' எதுக்காக நம்மைப் பார்த்துப் பார்த்துப் பேசிக்கறாங்க," என்று கேட்டான்.

"அவர்களெல்லாம் நம்ம உறவுக்காரங்கதான். நம்மைப் போலவே அவர்களும் உன் மாமாவை

வரவேற்கத்தான் வந்திருக்காங்க," என்று கூறிய வள்ளியம்மை அங்குள்ள ஒவ்வொருவரையும் அடையாளம் சொல்லி அவர்கள் எந்த வகையில் தங்களுக்கு உறவினர்கள் என்பதையும் அருண கிரிக்கு விளக்கினாள்.

உடனே அருணகிரி "அப்படீன்னா ஏன் அம்மா அவங்க நம்ம கூட பேசல்லே?" என்றான்.

"அவஙகளுக்கெல்லாம் உன் அப்பாவைப் பிடிக்கலே; அது தான் காரணம்," என்றாள் வள்ளி யம்மை. இந்த வார்த்தைகளைக் கூறும் போது துக்கம் தொண்டையை அடைத்தது, கண்களில் நீர் முட்டச் செய்தது

வள்ளியம்மை மிகவும் தாழ்ந்த குரலில் தன் மகனைப் பார்த்து, "இவர்களில் யாராவது, ஒரு காலத்தில் உன் அப்பாவை வெறுக்காமல் உதவி செய்திருந்தால், நம்முடைய வாழ்க்கையும் எவ்வள வோ உயர்ந்திருக்கும். ஆரம்பத்தில் உன் அப்பாவை ஏழை என்று பிடிக்கவில்லை.

என் அம்மாவே என்னை விட்டுக் கொடுத்து விட்ட பிறகு மற்றவர்களைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?" என்றாள்.

பொங்கி வந்த துக்கத்தை அடக்க மாட்டாமல் வள்ளியம்மை தன் மகனையும் அழைத்துக் கொண்டு, மற்றவர்கள் கண்ணில் படாத

இடத்தைத் தேடி அமர்ந்து கொண்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

"அழாதே அம்மா!" என்று தன் தாயின் கண்ணீரை கைகளால் துடைத்த அருணகிரி, "நம்ம விமானம் எப்போ வரும் அம்மா?" என்று கேட்டான்.

"இன்னும் ஏழு நிமிஷத்தில்; நான்கு இருபத்தி ஐந்திற்கு வருமென்று விளக்கு போட்டிருக்கிறார்களே," என்று வள்ளியம்மை ஒரு அறிவிப்பைச் சுட்டிக் காட்டினாள்.

அப்போது அவனுக்கு, தன் தந்தையின் நினைவு வந்தது அருணகிரி வீட்டு முற்றத்தில் ஒரு கயிற்றுக் கட்டில் போடப்பட்டிருக்கும் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு அருணகிரி அதில் தன் தந்தையோடு அமர்ந்திருப்பான், அப்போதெல்லாம் அவனது தந்தை அவனை அணைத்தபடி எதிர்கால ஈழத்தைப் பற்றிப் பேசுவார். இலங்கையின் தமிழரின் நிலை பற்றிப் பேசுவார் தன் தாயைப்பற்றிப் பேசுவார், சில சமயம் தன்னைத்தானே மிகவும் நொந்து கொண்டு, "அருணா உன் அம்மா பெரிய பணக்காரர் வீட்டிலே பிறந்தவள்; என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதினால்தான் இப்படி கஷ்டப்படுகிறாள்.

'ஒருவன் நாட்டுக்காக உழைக்க முன் வந்து விட்டால், பின் தன் சொந்த சுக துக்கங்களைப்

பார்க்க முடியாது. உனக்கும் உன் அம்மாவிற்கும். உணவிற்கும், உடைக்கும் தான். என்னால் சம்பாதிக்க முடிகிறது. மீதி நேரமெல்லாம் ஈழத் தமிழர் நிலை உயர உழைக்கிறேன். எனது இந்த லட்சியத்தை விட்டு விட்டு என்னால வாழ முடியாது. இலங்கையின் காட்டையும் மேட்டையும் திருத்தி செல்வம் கொழிக்கும் பூமியாக; தேயிலைக் காடாக மாற்றியது தமிழனின் பட்டுக்கரங்கள் தான் தமிழர்கள் இங்கு சிந்திய ரத்தமும், வியர்வையும், கண்ணீரும் வீண்போகக் கூடாது." என்பார்.

அப்போது விமான நிலையத்திலிருந்து அறிவிப்பு ஒலிக்கவே கூர்ந்து கேட்டான் அருணகிரி.

"சென்னையிலிருந்து வந்து கொண்டிருக்கும் 'ஏர்லங்கா' விமானம் இன்னும் சில நொடிகளில் விமான நிலையத்தை வந்தடையும்!"

# 3

# அம்மா டாட்டா!

**ரோ**ஜா இதழ்களால் நெய்த அழகிய விரிப்பு விரித்தது போல கொழும்பு விமான நிலையத்தின் வரவேற்பு அறை காட்சியளித்தது. தரையே தெரியாதபடி ரோஜா மலர்கள் பரப்பிக் கிடந்தன.

ஆண்கள் தங்கள் மாலைகளை பரமகுருவின் கழுத்திலும்; பெண்கள் தங்கள் மாலைகளை லட்சுமி அம்மாள், காந்திமதி இவர்கள் கழுத்திலும்; சிறுவர்கள் பாபு, ராதாவின் கழுத்திலும் போட்டுக் கட்டித் தழுவிக் கொண்டனர்.

பரமகுரு எல்லாருடனும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார். அழகான பாபுவையும், ராதாவையும் வந்திருந்தவர்கள் மாறி மாறி முத்தமிட்டனர்.

பரமகுரு தன் குடும்பத்துடன் மாமா பொன்னம்பலம் வீட்டில் தங்க ஏற்பாடாகி இருந்ததால், மற்ற உறவினர்கள் எல்லாம் விடை

பெற்றுக் கொண்டு அவரவர் காரில் ஏறி புறப் பட்டனர்.

இந்த காட்சிகளை வள்ளியம்மையும், அருண கிரியும் எட்டி நின்று பார்த்துக் கொண்டே இருந் தனர்.

அவர்கள் சென்றதும், பரமகுரு தன் தாயா ரோடு பேசிக் கொண்டு காரை நோக்கி நடத்தார். வழியில் பொன்னம்பலம் மாமாவும், பரமகுருவும், "நீங்கள் காருக்குப் போங்கள்; ஒரு நிமிஷத்தில் வருகிறேன்" என்று அவர்களிடம் கூறியபடி எங்கோ போனார்கள்.

இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்திற்காகவே அத்தனை நேரம் காத்திருந்த வள்ளியம்மை, அருணகிரியின் கரத்தைப் பற்றிக் கொண்டு வேக மாக நடந்து, லட்சுமி அம்மாள் அருகில் வந்து, "சின்னம்மா!" என்று மெல்ல கூப்பிட்டாள்.

சட்டென்று திரும்பிய லட்சுமி அம்மாள், தன் அருகில் நின்று கொண்டிருக்கும் வள்ளியம்மை யைப் பார்த்ததும், "வள்ளி..." என்று அன்போடு அழைத்தபடி அவளை தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

ஏழ்மையின் மொத்த உருவமாக வள்ளி யம்மை காட்சி அளித்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க லட்சுமி அம்மாளுக்கு இதயமே வெடித்து விடும் போலிருந்தது. மற்றவர்களோடு அத்தனை

நேரம் மகிழ்ச்சியில் திளைத்திருந்த லட்சுமி அம்மாளின் விழிகளில் இப்போது கண்ணீர் துளிர்த்து நின்றது.

“விஜயன் வரலியா?” என்று வள்ளியிடம் லட்சுமி அம்மாள் கேட்டபோது அவள் குரல் தழுதழுத்தது

வள்ளியம்மை தலையசைத்தாள்.

‘பட்டும் நகையுமாய் எப்படிச் செல்வத்திலே மிதக்க வேண்டியவளிவள்; எப்படி உருக்குலைந்து விட்டாள்,’ என்று உள்ளத்தில் ஒருகணம் எண்ணிய போது லட்சுமி அம்மாளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. ஆயினும் அதை அடக்கிக் கொண்டு,

“இது உன் மகனா வள்ளி! பெரியவனாயிட்டான். என்ன பேரு வெச்சிருக்கே?” என்று கேட்டாள்.

“அருணகிரி!” அவனே தன் பெயரைச் சொன்னான்.

“படிக்கறியா?” லட்சுமி அவனது கன்னத்தைத் தன் விரல்களால் தடவியபடி கேட்டாள்.

“ஒன்பதாம் வகுப்பு!” என்றான்.

பாபுவும், ராதாவும் பாட்டியின் அருகில் நின்று அவனையே பார்த்தபடி அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"கெட்டிக்காரன்! அப்பாவையும் கூட்டிக் கொண்டு வரக் கூடாதா?"

"அப்பாவுக்கு இன்னிக்கு ஒரு மீட்டிங் இருக்கு?"

"ம்...! இன்னும் அப்படியேதான் இருக்கிறான்!" லட்சுமி மெல்ல மனதிற்குள் சொல்லிக் கொண்டபடி, "நல்ல வேளை உங்களையாவது பார்க்கக் கிடைத்ததே; இன்னும் கொஞ்ச நேரம் தாமதமாக வந்திருந்தால் நாங்க போயிருப்போம். உனக்கும் ஏமாற்றமா இருந்திருக்கும்," என்ற லட்சுமி அம்மாள் வருத்தம் தோய்ந்த குரலில்;

"வள்ளி! நீ என் பேரனையும், பேத்தியையும் பார்த்ததில்லையே," என்று கேட்டபடி பாபுவையும், ராதாவையும் அவளிடம் காட்டி, "அத்தைக்கு வணக்கம் சொல்லுங்கள்," என்றாள்.

அப்போது அங்கு வந்த பரமகுரு, "தங்கச்சி, சவுக்கியமா? எப்ப வந்தே?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார். உடனே பாபு தன் தந்தையின் கையைப் பிடித்து இழுத்து காதருகே, "அப்பா, அருணகிரியாவது நம்ம கூட வரட்டும்; கூப்பிடு அப்பா," என்று கெஞ்சுவது போல் கேட்டான்.

பாபு அதை ஒரு ரகசியம் போல் கூறினாலும், அவன் பேசியது எல்லார் காதிலும் விழுந்தது.

உடனே பரமகுரு, "ஏன் வள்ளி! பாபு ஆசைப் படுகிறான். அவனோடு ஊரைச் சுற்றிப் பார்த்துக்

கொண்டு அருணகிரியும் ஒரு வாரம் எங்களுடன் இருக்கட்டுமே,'' என்று சம்மதம் கேட்டார்.

அருணகிரியும், 'அம்மா என்ன பதில் சொல்லப் போகிறாளோ,' என்று ஆவலோடு தன் தாயின் முகத்தைப் பார்த்தான். அந்தப் பார்வை அவளை நோக்கிக் கெஞ்சுவது போலிருந்தது.

பாவம் அருணகிரியும் இப்படி யார் கூட இருந்திருக்கிறான். அவனும் ஆசைப்படுகிறான் என்று ஒரு கணம் எண்ணிப் பார்த்தாள்.

வள்ளி மறுத்துப் பேசாமல் தலையசைத்தாள். பாவுக்கு ஒரே மகிழ்ச்சி. அருணகிரிக்கு தன் அம்மா இப்படி உடனே சம்மதித்தது ஆச்சரிய மாகவும் மகிழ்ச்சியாகவும இருந்தாலும்: அந்த மகிழ்ச்சி அவன் உள்ளத்தில் நிலைக்கவில்லை.

பாபுவோடு சேர்ந்திருப்பதில் உள்ள மகிழ்ச்சியை விட—தன் தாயைத் தனியே அனுப்பு வது அவனுக்கு வருத்தமாய் இருந்தது.

அம்மா பஸ்ஸையோ வண்டியையோ பிடித்து ஊர் போய்ச் சேர்வதற்குள் இருட்டினாலும் இருட்டிவிடும். அப்பா மீட்டிங் முடிந்து வந்ததும், என்னை எங்கே என்று கேட்பார். இதற்காக அம்மாவை ஒருவேளை கோபித்தாலும் கோபிக்க லாம்—என்றெல்லாம் எண்ணிப் பார்த்தபோது அருணகிரிக்கு, ''நான் வரவில்லை!' என்று சொல்லி விட்டு அம்மாவுடனேயே போய் விடலாம் என்றே ஒரு தடவை தோன்றியது

அதே சமயம்—

புதிதாக தன் நாட்டிற்கு வந்திருக்கும் பாபு வின் அன்பான அழைப்பைப் புறக்கணிக்கவும் மனம் வரவில்லை. எல்லோருடனும் காரில் அமர்ந்து கொண்டு; இப்படி அவன் இருவித எண்ணங்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த போது—

"அப்போ, நான் புறப்படுகிறேன் சின்னம்மா," என்று விடைபெற்றுக் கொண்ட வள்ளியம்மை தன் மகனைப் பார்த்து, "நான் போயிட்டு வர்றேன் அருணகிரி; யாருக்கும் தொந்தரவு இல்லாம கவனமா நல்ல பிள்ளையாக நடந்து கொள். மாமாதான் உனக்கு எல்லாம்," என்று மகனிடம் கூறி விட்டு எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.

பொன்னம்பலமாமாவின் இரு கார்களும் புறப்படத் தயாராய் இருந்தன.

ஒரு காரில் மாமாவும், லட்சுமி அம்மாளும் ஏறிக்கொண்டவுடன்; அது முன்னே புறப்பட்டுச் சென்றது. மற்றொன்றில் மாமியும், ராதாவும், பின் சீட்டில் இருந்தனர்; பாபுவும், அருணகிரியும் முன்புறம் டிரைவருக்கு பக்கத்தில் அமர்ந்திருந் தனர்.

காரில் ஏறுமுன் பரமகுரு வள்ளியம்மையைப் பார்த்து, "வள்ளி! நீயும் காந்திமதி பக்கத்தில்

ஏறிக்கொள். பஸ்சில்தானே போகிறாய்? ஸ்டாண்டில் இறக்கி விட்டு விடுகிறேன்,'' என்று அழைத்தார்.

அதற்கு வள்ளியம்மை, "இல்லேண்ணா, இப்படி குறுக்கு வழியா நான் நடந்து போயிடுவேன்... நீங்க புறப்படுங்க,'' என்று பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

அதற்கு மேலும் அவளை வற்புறுத்த முடியாமல், "இந்தா வள்ளி! இதை வைத்துக்கொள்,'' என்று ஒரு பையை தனியாக அவளிடம் கொடுத்தார்.

அதில் நிறைய பலவிதமான பழங்களும் மத்தியில் ஒரு கட்டு நோட்டும் இருந்தன.

பையைப் பெற்றுக் கொண்ட வள்ளியம்மை, "வழிச் செலவுக்கு என்கிட்டே பணம் இருக்கிறது அண்ணா,'' என்று அந்த கத்தை நோட்டுகளை திருப்பிக் கொடுத்தாள்.

உடனே பரமகுரு, "வள்ளி! நீ இதை எடுத்துக் கொள்ளாவிட்டால், நான் உன் வீட்டிற்கு வரமாட்டேன்,'' என்றார்.

"அவர் குணம் உங்களுக்குத் தெரியாதா அண்ணா?'' என்று உருக்கமாகக் கூறினாள் வள்ளியம்மை.

"இதை நான் விஜயனிடம் கொடுக்கவா சொன்னேன் வள்ளி,'' என்றார் பரமகுரு.

"அது தப்பு அண்ணா! எனக்கு அந்த மாதிரி நடந்து பழக்கம் இல்லே," இதை கூறும்போது வள்ளியம்மையின் குரல் தழுதழுத்தது.

"ஒரு தப்பும் இல்லை; ஊரிலிருந்து நான் அனுப்புகிற பணத்தைத் ஒவ்வொரு தடவையும் விஜயன் திருப்பி அனுப்புகிறான். இதற்கு நான் அங்கு வந்து அவனோடு தனியாக சண்டை போடப்போகிறேன். இப்போது கூட, உனக்கும் விஜயனுக்கும், அருணகிரிக்கும் துணிமணிகள் வாங்கி வந்திருக்கிறேன். நானும் காந்திமதியும் வருகிறபோது கொண்டு வருவோம், இந்த விஜயன் வாங்காமல் என்ன செய்வான் பார்க்கலாம்.

"சரி! இதை வைத்துக் கொள் வள்ளி; மறுக்காதே. இது உன் அண்ணனின் ஆசை," என்று பரமகுரு பிடிவாதமாகக் கூறியபோது, அதற்கு மேலும் அவளால அந்த இடத்திலிருந்து மறுத்துக் கொண்டிருக்கவில்லை.

"நான் வர்றேன் வள்ளி." அவர் விழிகள் பனித்தன.

பரமகுரு காரில் ஏறி மனைவி அருகில் வந்து அமர்ந்தார்: அவர் மனம் ஏனோ தவித்தது.

முன்சீட்டில் அமர்ந்திருந்த அருணகிரி தன் தாய் கண்ணுக்கு மறைகிறவரை கையை ஆட்டி

'டாடா' கூறிக் கொண்டே இருந்தான். அவளும் புறப்பட்டுச் சென்ற கார் சிறு புள்ளியாகக் கண்ணுக்கு மறையும் வரை நின்ற இடத்திலிருந்து கையை அசைத்தபடி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

பாவம்! அவளது வாழ்வு அன்றோடு முடித்து விடும் என்று யாருக்கும் அப்போது தெரியாமல் போயிற்று.

# 4

# உலகம் தெரிந்தவன்

விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட கார், பெரிய பெரிய தெருக்களையும், அழகிய பல கடை வீதிகளையும் கடந்து வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

அதே சமயத்தில், இவர்களோடு இருக்க வேண்டுமென்று தன் உள்ளத்தில் எழுந்த தவறான ஆசையினால்தான் தன் தாயை தனியே அனுப்பி விட்டதாக எண்ணி அருணகிரியின் மனம் மிகுந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தது.

இன்னும் எங்கோ தொலை தூரம் போவது போல் வேகமாக ஓடிக்கொண்டிருந்த கார், பட்டென்று வேகம் தணிந்து, ஒரு காம்பவுண்டிற்குள் நுழைந்து, போர்டிகோவின் முன் வந்து நின்றது.

முன்னதாக வந்து சேர்ந்துவிட்ட மாமாவின் கார் ஓரமாக நின்றுகொண்டிருந்தது.

காரிலிருந்து இறங்கிய எல்லோரையும் மாமாவும், மாமியும் வாசலில் நின்று வரவேற்றனர். பாபு ஒரு முறை அந்த அழகிய பங்களாவையும்; அதைச் சுற்றியுள்ள விசாலமான தோட்டத்தையும்; அதில் பூத்துக் குலுங்கும் மலர்களையும் ஆசை யோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்னர் அருணகிரியோடு உள்ளே நுழைந்து பார்த்தபோது, பாபு பிரமித்து போய் விட்டான். அதை ஒரு வீடு, பங்களா என்று சொல்லி அழைப்பதை விட, ஒரு சிறிய அரண்மனை என்றே சொல்லலாம்.

தரையிலும் சுவற்றிலும் விலை உயர்ந்த சலவைக் கற்கள் பதித்துப் பார்க்கும் இடமெல்லாம் பளபளப்பாய் இருந்தன. திரும்புகிற இடத்தில் எல்லாம் ஆள் உயர நிலைக் கண்ணாடிகள் கண்ணில் படுவோரையெல்லாம் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. தரையில் விரிக்கப்பட்டிருந்த அழகிய கம்பளம், மெல்லிய பூவின்மீது நடப்பதுபோல் இருந்தது. பல விருந்தினர் அறைகள். ஒவ்வொன்றிலும் விதம்விதமான அலங்கார மின் விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன.

இன்னும் எல்லா இடங்களையும் ஒரே மூச்சில் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கையில், "பாபு-அருணகிரி," என்கிற அன்பான குரலை கேட்டு திரும்பினர்.

"டிபன் சாப்பிட்ட பிறகு உங்களுக்கு வீடு முழுவதையும் சுற்றி காண்பிக்கிறேன். டிபன் சாப்பிடலாம் வாங்க, பாட்டி கூப்பிடறாங்க," என்று பொன்னம்பலத்தின் எட்டு வயது பேத்தி தங்கமணி கூறினாள்.

அருணகிரிக்கு அவளுடைய அன்பான பேச்சைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது.

பரமகுருவும், பொன்னம்பலமும் ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்துகொண்டு மனம் திறந்து உரக்க பேசிக் கொண்டிருந்தனர்

"இத்தனை வருஷம் கழித்து எல்லாரையும் கூட்டிக் கொண்டு வந்து ஒரு வாரத்திலேயே போகணும்னா எப்படிடா பரமு? கம்பெனி வேலை இருந்தா நீ புறப்படு. அம்மாவும் குழந்தைகளும் ஒரு மாசம் இங்கே இருந்துவிட்டு போகலாம்," என்று ஒரு முடிவு எடுத்து விட்டார் போல் கூறினார் பொன்னம்பலம்.

"அதற்கில்லை மாமா! பாபுவிற்கும், ராதாவிற்கும் கால் பரிட்சை வருகிறது. இப்ப கூட யாரையும் கூட்டிக் கொண்டு வருகிறதா இல்லை. நான் மாத்திரம்தான் வருவதாக இருந்தேன். அம்மாதான் புறப்படுகிற சமயத்தில், "கதிர்காமம் வந்து, கதிர்காமனை தரிசனம் செய்ய வேண்டும்," என்று கூறினாள். சரியென்று எல்லாருமாக கிளம்பினோம்."

"சரி... சரி! உன் சவுகரியம் எதுவோ அது தான் முக்கியம். மகாநாடு என்றைக்கு?"

"நாளைக்கு!"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு பணியாள், தாழ்ந்த குரலில் பொன்னம்பலத்திடம் டிபன் தயாராய் இருப்பதாய் தெரிவித்தான்.

"வா, குரு சாப்பிடலாம்," என்றவர், "ஆமாம் பாபு, ராதா, அருணகிரி எல்லாம் எங்கே?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தார்.

பரமகுருவும், மாமாவும் டைனிங் ஹாலை அடைந்தபோது, மற்றவர்கள் எல்லாருமே அங்கே இருந்தனர்.

'எங்களுக்காகவா காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று பொதுவாகக் கேட்டுவிட்டு மாமா ஒரு ஆசனத்தில் அமர்ந்தார்.

சாப்பாட்டு அறையில் போடப்பட்டிருந்த மேஜை வழவழப்பாகவும், பளபளப்பாகவும் இருந்தது. எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்களுடைய முகம் அதில் தெரிந்தது

பாபுவும் அருணகிரியும் சொற்ப நேரத்திற்குள் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய மனமில்லாதவர்களைப் போல் சேர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

சமையற்காரர்கள் இரண்டு மூன்று பேர் ஓடி ஓடிவந்து விதவிதமான பதார்த்தங்களையெல் லாம் அனைவருக்கும் பரிமாறினார்கள்.

'என்னுடைய வாழ்நாளில் இத்தனை ருசியன இனிப்புப் பண்டங்களையெல்லாம் நான் சாப்பிட் டதே இல்லை," என்று பாபுவிற்கு மட்டும் கேட் கும்படி மெல்ல அவன் காதருகே கூறினான் அருண கிரி.

"ஊருக்கு வந்ததுமே பாபுவிற்கு நல்ல ஜோடி கிடைத்து விட்டது," என்று கூறிய பொன்னம் பலம், அருணகிரியைப் பார்த்து, "ஏண்டா நீ பள் ளிக்கூடம் போறியா? எத்தனாவது படிக்கிறே?" என்று விசாரித்தார்.

"ஒன்பதாவது படிக்கிறேன்," அருணகிரி தாழ்ந்த குரலில் பதில் கூறினான்.

"பரீட்சை முடிந்து லீவு விடும்போதெல்லாம் ஏதாவது கடை வேலைக்குப் போவேன் பள்ளிக் கூடம் திறந்ததும் வேலையை விட்டுவிடுவேன்."

பரமகுருவும், காந்திமதியும், லட்சுமி அம்மா ளும் அசந்து போனார்கள்! ஆனால், பொன்னம் பலம் அதைச் சாதாரணமாகத்தான் எடுத்துக் கொண்டு பேசினார்.

"எப்படியோ புத்தியாய் படிச்சு முன்னுக்கு வந்தா சரி. அல்லாமெ, அப்புனைப்போல நீயும் கட்சி, தேசம்னு அலைஞ்சு அம்மாவை பட்டினி

போட்டுடாதே. உன் அம்மா, அப்பா எல்லாரும் சவுக்கியமா இருக்காங்க இல்லியா?" என்றார்.

"ஓ! விமான நிலையத்துக்கு நானும் அம்மாவும்தான் வந்திருந்தோம்," என்றான் அருணகிரி.

அப்போது, "பாட்டி, தாத்தாவுக்கு டிரங்கால் வந்திருக்கு," என்று தங்கமணி ஹாலிலிருந்து ரிசீவரை ஒரு கையால் பொத்திக் கொண்டு கத்தினாள்.

"தாத்தா இங்கே இல்லேம்மா, மாடியிலே இருக்காங்களா பாரு," என்றாள் கல்யாணி.

இதற்குள் கீழே இறங்கி வந்து கொண்டிருந்த பொன்னம்பலம் பேத்தியிடமிருந்து ரிசீவரை வாங்கிக்கொண்டு, "ஹலோ..." என்று குரல் கொடுத்தார், அதற்குள் பரமகுருவும் அங்கே வந்துவிட்டார்.

"எஸ்... ஸ்பீக்கிங். பொன்னம்பலம்தான் பேசறேன்; சொல்லுங்க."

"ஆமாம். அந்த 'பிசினஸ்' முடிந்து விடும் போலிருக்கா: சரி... சொல்லுங்க. என்ன? அறுபது லட்சத்துக்கு குறைக்க முடியாதாமா? சரி! முடிச்சுடுங்க. என்ன? நான் உடனே புறப்பட்டு வராட்டி கை மாறிடுமா? சரி! ராத்திரி ப்ளைட்டிலேயே புறப்பட்டு வர்றேன். வியாபாரத்தை விட்டுடாதீங்க தாங்க்யூ..."

பொன்னம்பலம் போனை வைத்துவிட்டு பரம குருவைப் பார்த்தார்.

"மலேசியாவிலே ஒரு ரப்பர் தோட்டம், சீப்பா வந்திருக்கு என்று நம்ம ஏஜன்ட் சொன்னான். ஒரு மாசமா பேரம் பேசி, இன்னிக்குதான் பார்ட்டியை சரிக்கட்டி முடிச்சிருக்கான். நான் அவசியம் உடனே சிங்கப்பூர் போயாகணும் பரமு. நீங்க எல்லாம் வந்திருக்கிற இந்த சமயம் பார்த்து கூட இருக்க முடியாமல்..."

"அதைப்பற்றி என்ன மாமா? பிசினஸ்தான் முக்கியம். உடனே புறப்பட்டுப்போய் முதல்லே முடிங்க. விஷ்யூ பெஸ்ட் ஆப் லக்," என்றார் பரமகுரு.

"ரொம்ப நன்றி பரமு. ஆனா இது, தவணையிலே வாங்கற பார்ட்டி இல்லே. இந்த ஒரு மாசமா இழுபறியிலே இருந்த பேரம் இப்பத்தான் படிஞ்சு வந்திருக்கிறது. நல்ல பிசினஸ். எங்கே கையை விட்டுப் போயிடுமோன்னு ரொம்ப கவலையா இருந்தேன். எல்லாம் நீ வந்த வேளைதான் கைகூடி வந்திருக்கு," என்றார் மாமா.

# 5

# தங்கமணியின் தங்க மனசு

அருணகிரி அம்மாவைப் பற்றிய சோக நினைவுகளுடன் தனது அறையில் அமர்ந்திருந்தான்.

அங்கு வந்த பாபு அவனைப் பார்த்ததுமே "ஏன் அருணகிரி என்னமோ போல் இருக்கிறாய்?" என்று அருணகிரியின் முகத்தை தூக்கிப் பிடித்து கண்களில் வழியும் கண்ணீரை துடைத்தான்.

"ஒன்றுமில்லையே!" என்று கூறிய அருணகிரி, துக்கத்தில் தடுமாறினான்.

இதற்குள் அங்கு வந்த தங்கமணியும், ராதாவும் அவ்விருவர்களையும் பார்த்து, "வீட்டைச் சுற்றிப் பார்க்கப் போகலாமா?" என்று கேட்டார்கள். இருவரும் அவர்கள் பின்னால் மாடிக்கு சென்றார்கள்.

தங்கமணி அங்குள்ள அறைகள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு பெயரை குறிப்பிட்டு கூறி

விளக்கினாள். பாபுவும், ராதாவும் ஆர்வத்தோடு அவளிடம் ஏதேதோ கேள்விகள் கேட்டுக் கொண்டே வந்தார்கள். அருணகிரி மட்டும் மவுனமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே வந்தான்.

"மேல் மாடிக்கு போகலாமா?" என்று அவள் கேட்டபோது, 'வேண்டாம் தங்கமணி காலெல்லாம் வலிக்கிறது. இந்த சோபாவில் உட்கார்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்," என்றான் பாபு.

உடனே அருணகிரி, "நீங்கள் இன்னும் இந்த ஊரில் எத்தனை நாள் இருப்பீர்கள்?" என்று கேட்டான்.

"ஒரு வாரத்திற்குள் திரும்பிவிட வேண்டும் காலாண்டு தேர்வு வேறு வருகிறது. மார்க்கு குறைந்தால் அம்மா லேசில் விடமாட்டாள். நானும், ராதாவும் சாலஞ்ச் பண்ணி அனுமதி வாங்கி வந்திருக்கிறோம். இல்லாவிட்டால், இந்த டிரிப் அப்பாவும், பாட்டியும் மட்டும்தான் வருவதாக இருந்தது," என்றான்.

"ஒரு வாரம் எதற்கு இந்த ஊரைச் சுற்றிப் பார்க்க? காரில் போனால் ஒரே நாளில் கூட எல்லாவற்றையும் பார்த்து முடித்து விடலாம்," என்றான் அருணகிரி. மகிழ்ச்சியில், பாபுவும், ராதாவும் கை தட்டி ஆர்பரித்தார்கள்.

சற்றைக்கெல்லாம் மேலே வந்த ஒரு வேலை யாள், "அருணகிரி! உன்னை பெரிய யசமான் கூப்பிடுகிறார்; வா கீழே போகலாம்," என்றான்.

"என்னை எதற்கு கூப்பிடுகிறார், ஏதாவது சொல்லித் திட்டவா?" என்று எண்ணிக்கொண்டே அருணகிரி கீழிறங்கி வந்தான். அருணகிரி, மாமா அருகில் வந்து நின்றபோது அவர் போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார்.

ஆமாம் "நான் தான் பொன்னம்பலம் பேசு கிறேன். கனகசபையை உடனே என் வீட்டுக்கு அனுப்பி வை. தாமதிக்கக் கூடாது," என்று ஒரு உத்தரவு போல் கூறி விட்டு போனை கீழே வைத்தார்.

கொழும்பு நகரத்திலுள்ள செல்வாக்கு மிகுந்த முக்கியமான பிரமுகர்களில் பொன்னம்பலமும் ஒருவர். அவருக்கு சொந்தமாக பல ஆலைகளும், தொழிற்கூடங்களும்,தோட்டங்களும், பங்களாவும் பல கார்களும் உள்ளன. இதனால்அவரது குரலில் எப்போதும் கம்பீரமும், அதிகாரத்தின் வாடையும் வீசிக் கொண்டிருப்பது வழக்கம்.

தன் அருகில் நின்று கொண்டிருந்த அருணகிரியை கண்டதும், 'அருணகிரி; காந்திமதி, பாபு, ராதா, தங்கமணி எல்லாருக்கும் கொழும்பு நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமாம். கைடு

கனகசபையை வரச்சொல்லி இருக்கிறேன். நம்ம காரில் நீயும் அவர்களுக்கு துணையாக சென்று எல்லா இடங்களையும் காட்டு. எனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கிறது, இந்தா இதைப் போகுமிடங்களில் கைச் செலவிற்கோ, ஏதாவது சாமான் வாங்கவோ வைத்துக் கொள்," என்று கூறி ஐந்து ரூபாயை அருணகிரியிடம் கொடுத்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் கனகசபை கை கட்டியபடி வந்து நின்றான்.

அவரைப் பார்த்ததும், "கனகசபை நம்ம வீட்டுக்கு மெட்ராசிலிருந்து உள்நாட்டுகாரர்கள் வந்திருக்கிறார்கள். நீ இவங்கள அழைத்துக் கொண்டி கொழும்பைச் சுற்றிக் காட்டிவிடு. நாளை காலையில் ஐந்து மணிக்கு இவர்களோடு நீயும் நம் ஊருக்குப் புறப்படுகிறாய். முடிந்த அளவு இலங்கையில் உள்ள எல்லா இடங்களையும் அவர்களுக்கு புரியும்படியாக நன்றாக விளக்கிக் காட்டி விட்டு பத்திரமாக அழைத்துக் கொண்டு வந்துவிடு. இதை உன் கைச்செலவுக்கு வைத்துக் கொள்" என்று கூறி இருநூறு ரூபாயைக் கொடுத்தார் பொன்னம்பலம்.

"ஆகட்டும் ஐயா, தங்கள் உத்திரவுபடியே செய்கிறேன்" என்றார் கனகசபை பணிவுடன். மாமா உடனே தன் காரிலே வெளியே சென்று விட்டார்.

"அருணகிரி! நீ டிரஸ் பண்ணிக்க நான், அம்மா, பாபு, ராதா எல்லாரும் சீக்கிரம் புறப்பட வேண்டாமா?" என்று துரிதப்படுத்தினாள் தங்கமணி.

அதற்கு மேலும் அருணகிரியால் மௌனமாக இருக்க முடியவில்லை. விமான நிலையத்திற்கு என் அம்மா பாபு எல்லோரையும் வர வேற்கத்தான் வந்தேன். அம்மாவோடு வீடு திரும்ப வேண்டிய என்னை பாபு அங்கிருந்த படியே அழைத்து வந்தான்

"இந்த டிரஸ்ஸோடு என்னை உங்களோடு அழைத்துப் போகச் சம்மதமானால் நான் வரு கிறேன். இல்லாவிட்டால் இங்கேயே இருக்கிறேன் எனக்கு கொழும்பு நகரம் ஒன்றும் புதிதில்லை. அங்குள்ள எல்லா இடங்களையும் என் அப்பாவே எனக்குச் சுற்றிக் காண்பித்து விட்டார்," என் றான்.

"சரி... சரி... தெரியாமல் கேட்டு விட்டேன். இதற்காக நீ கோபித்துக் கொண்டு எங்களுடன் வராமல் இருந்து விடாதே. வா, நாம் போய் முதலில் காரில் ஏறிக் கொள்ளலாம்" என்று தங்க மணி அழைத்தாள்.

உடனே அருணகிரி, "அவசரப் படாதே தங்க மணி எல்லோரும் ஏறிக் கொண்ட பிறகு இடத் திற்குத் தகுந்தாற் போல் நான் வந்து உட்கார்ந்து கொள்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் தங்கமணி கலகலவென்று சிரித்தாள். தாத்தாவிற்குச் சொந்தமாக ஐந்து கார்கள் இருக்கின்றன. வீட்டு உபயோகத்திற்கு மட்டும் மூன்று கார் இருக்கு. இப்போ, நாம் வெளியே போகப் போகிற காடிலாக் வான். கப்பல் மயதிரி பெரிசா இருக்கும். எல்லாரும் ஏறிக் கொண்டாலும், பாதி இடம காலியாகத் தான் இருக்கப் போகிறது. வா போகலாம்" என்று சிரித்தபடியே அவன் கையைப் பிடித்து அழைத்துப் போனாள்.

தங்கமணியின் வெள்ளை உள்ளமும், கர்வ மில்லாத, அன்பான பேச்சும் அருணகிரியின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அதற்கு மேலும் மறுப்பேதும் கூறாமல் அவளுடன் சேர்ந்து சென்று காரில் உட்கார்ந்து கொண்டான்.

இதற்குள், காந்திமதி, பாபு ராதா எல்லோரும் டிரஸ் செய்து கொண்டு தயாராக வந்து விட்டனர். கல்யாணியும், லட்சுமி அம்மாளும் வரவில்லை என்று சொல்லி விட்டார்கள். காந்திமதியிடம், குழந்தைகள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடு, திட்டாமல், அடிக்காமல், எல்லோரையும் கையைப் பிடித்து அழைத்துப் போய் பத்திரமாய்க் கூட்டிக் கொண்டு போய் விட்டு வா," என்றாள் லட்சுமி அம்மாள்.

கைடு, கனக சபையும், தங்கமணியும், அவளுடைய செல்ல நாய்க்குட்டி 'தும்பு' வோடு முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள்.

அருணகிரி, பாபு, ராதா தங்கமணி, காந்திமதி எல்லோரும் பின் சீட்டில் அமர்ந்தனர். கார் வீட்டை விட்டுப் புறப்பட்டு கடை வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்த போது. "டிரைவர் வண்டியை இங்கே கொஞ்சம் நிறுத்துங்கள்," என்று தங்கமணி கூறவே, கார் ஒரு ரெடிமேடு கடையில் நின்றது.

எதற்கு இவள் காரை நிறுத்தச் சொன்னாள் என்று மற்றவர்கள் யோசிக்குமுன், "ஐந்து நிமிஷம் அத்தை," என்று கூறியபடி இறங்கிய தங்கமணி அருணகிரியின் அருகில் வந்து "வா என்னோடு" என்று அவனது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, அந்த ரெடிமேட் கடைக்குள் நுழைந்தாள். அருணகிரி ஏதும் புரியாமல், அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

அந்த ரெடிமேடு கடைக்கு தங்கமணி, தன் தாயாரோடும் பாட்டியோடும் அடிக்கடி வருவது வழக்கம் அவர்களது வாடிக்கைக் கடை அதனால் அங்குள்ள அனைவருக்கும், பொன்னம்பலத்தின் பேத்தியான தங்கமணியைத் தெரிந்திருந்தது.

"வாங்க வாங்க," என்று கடைசிப் பந்திகளும், கல்லாவில் இருந்தவரும் வரவேற்றார்கள். தங்கமணி அருணகிரியைச் சுட்டிக் காட்டி "இவன் பேரு, அருணகிரி; எங்களுக்கு உறவு இவன் அளவுக்கு இரண்டு பாண்ட், இரண்டு, ஷர்ட்டு,

நல்ல உயர்ந்த ரகத்திலே எடுத்துக் குடுங்க" என்றாள்.

அப்பொழுதுதான் அருணகிரிக்குப் புரிந்தது. எதற்காக தங்கமணி தன்னை இங்கு அழைத்து வந்திருக்கிறாள் என்று.

அருணகிரி, சட்டென்று, "தங்கமணி' எனக்கு அப்படியெல்லாம் எதுவும் வேண்டாம், எல்லாம் இப்போது நான் போட்டிருப்பதே போதும்," என்று எவ்வளவோ மறுத்தான்.

"ஒன்றும் பதில் பேசக்கூடாது; உனக்குப் பிடித்தமான கலரை தேர்ந்தெடுக்கிற உரிமை மட்டும்தான் உண்டு. மறுத்துப் பேசினால் தாத்தா விற்கு போன் பண்ணி சொல்லிவிடுவேன்," என்று பயமுறுத்தினாள் தங்கமணி.

அத்தனையும் மிக விலை உயர்ந்த ரகங்கள். பள்ளிக்கூடத்தில் தன்னோடு படிக்கும் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள் சிலர் இம்மாதிரி டிரஸ் போட்டுக் கொண்டு வருவதும், மலிவு ரகத் துணி அணிந்திருக்கும் தன்னை அவர்கள் ஏளனமாக பேசுவதும் அவன் நினைவிற்கு வந்தன.

அருணகிரி தன் முன் பரப்பிக் கிடக்கும் உடைகளில் தனக்குப் பிடித்தமான இரண்டு செட்டை தேர்ந்தெடுத்தான்.

"அருணகிரி! இதில் ஒன்றை உள்ளே டிரஸ்சிங் ரூமில் போய் போட்டுக் கொண்டு வா," என்று தங்கமணி கூறினாள்.

அந்த பிரம்மாண்டமான கடையில் தங்களையே பார்த்துக் கொண்டிருக்கும் பல ஊழியர்கள்முன் பதில் ஏதும் கூற முடியாமல் உள்ளே போய் உடையை மாற்றிக் கொண்டு வந்தான் அருணகிரி.

கடை சிப்பந்தி ஒருவன், அருணகிரி கழற்றிப் போட்ட பழைய உடையையும், மற்றொரு புதிய செட் உடையையும் அழகாக 'பாக்' செய்து காரில் கொண்டு போய் வைத்துவிட்டு வந்தான்.

கவுண்டரில் எழுந்து நின்று கொண்டிருந்த காஷியரிடம், "இந்த பில்லை, பாட்டி கணக்கிலே எழுதிக்கிங்க," என்று கூறிவிட்டு அவசரமாக அருணகிரியை அழைத்துக் கொண்டு காரில் ஏறி விட்டாள்.

தங்கமணியின் புத்திசாலித்தனமான காரியத்தையும், எல்லாரிடமும் காட்டும் அன்பையும், பண்பையும் கண்டு மிகவும் வியந்தார்கள் காந்திமதியும், பாபுவும், ராதாவும்.

# 6

# உரிமைக் குரல்

மனைவி வள்ளியையும், மகன் அருணகிரியையும் கொழும்பிற்கு அனுப்பிவிட்டு கனகவிஜயன், கயிற்றுக் கட்டிலில் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

வேறு யார் வருவதாய் இருந்தாலும் விஜயன் மனைவியை அனுப்பியிருக்க மாட்டான். பரமகுருவின் மீதும், லட்சுமி அம்மாள் மீதும் வள்ளியம்மை மிகுந்த அன்பு வைத்திருந்தாள்.

பரமகுருவின் கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்பே, வள்ளியம்மையை அழைத்துக் கொண்டு கண்டிப்பாக வந்துவிடவேண்டும் என்று எழுதி விஜயன் பெயருக்கு ஆயிரம் ரூபாய் பணமும், அனுப்பி இருந்தாள் லட்சுமி அம்மாள்.

வள்ளியம்மைக்குக் கூட அண்ணன் கல்யாணத்திற்கு போக வேண்டுமென்று ஆசைதான். ஆனால் விஜயன்தான், "எனக்கு முக்கியமான

வேலை இருக்கிறது. நீ வேண்டுமானால் போய் விட்டு வா, என்று மனைவியிடம் கூறுவிட்டான். அதன் பிறகு கணவனை விட்டுத் தான் மட்டும் போக வள்ளி விரும்பவில்லை.

எனவே, "எனக்கு உடம்பு சரியில்லை மன்னித்துக் கொள்ளுங்கள்," என்று கடிதம் எழுதிவிட்டு பணத்தையும் திருப்பி அனுப்பி விட்டாள்

அதன்பிறகு பரமகுரு இலங்கை வந்துபோகும் போதெல்லாம் வள்ளியம்மையையும், கனக விஜயனையும் பார்த்துப் பேசி குசலம் விசாரிக்காமல் செல்லமாட்டார்.

இத்தனை வருஷங்களுக்குப் பிறகு பரமகுரு தன் குடும்பத்துடன், முதல் முதலாக இலங்கை வரும்போது அவர்களை வரவேற்க வள்ளியம்மை பெரிதும் ஆசைப்பட்டாள். அதே எண்ணத்தில் தான் விஜயனும் இருந்தான்.

ஆனால் கடைசி நேரத்தில் எல்லாமே மாறி விட்டது. அன்று நடக்கவிருக்கும் மலையகப் பொதுக் கூட்டத்தில் கனக விஜயன் பேசினால் தான் எடுபடும். விஜயனது பேச்சைக் கேட்க அங்குள்ள மக்கள் ஆவலாக இருப்பதாக கட்சிக்குத் தகவல் போகவுமே காரியதரிசி விஜயனை அங்கு போகும்படி பணித்து விட்டார்.

செய்வதொன்றும் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்த விஜயனுக்கு வள்ளிதான் ஆறுதல் சொன்

னாள். "நீங்கள் போய் உங்கள் காரியத்தைக் கவனியுங்கள். நானும் அருணகிரியும் போய் அண்ணனைப் பார்த்துப் பேசிவிட்டு உடனே திரும்பி வந்து விடுகிறோம். யாருமே போகாம இருந்தா நல்லா இருக்காது," என்றாள்.

விஜயனுக்கும் அதுவே சரியாகப்பட்டது. இப்படி சம்மதப்பட்டு மகனையும், மனைவியையும் அனுப்பிய பிறகு, ஏனோ அன்று அவன் மனம் குழப்பமாகவே இருந்தது.

"விஜய் அண்ணே!"

வாசலில் யாரோ கூப்பிடுகிற குரல் கேட்டு விஜயன் எழுந்து சென்றான். வெளியே குமரேசன் கூட்டத்திற்குப் போகிற தயார் நிலையில் நின்று கொண்டிருந்தான்.

"என்ன அண்ணே! மணி ஐந்தாகப் போகிறது இன்னும் நீங்கள் மீட்டிங்குக்கு ரெடியாகாமே இருக்கீங்க? அவ்வளவு தூரம் போய்ச் சேர வேண்டாம்? புறப்படுங்க போகலாம்; உங்க கூடத்தான் பாலஸ் கபேல டிபன் சாப்பிடப் போறதா வீட்டிலே சொல்லிட்டு காப்பித் தண்ணி கூட குடிக்காமல் புறப்பட்டு வந்து விட்டேன்!"

"சரி உள்ளே போகலாம்!"

விஜயன் உள்ளே சென்று அவசரமாக தன்னுடைய குளியலை முடித்துக் கொண்டு சலவை

செய்த வேஷ்டி சட்டைகளை அணிந்து கொண்டான். புறப்படும்போது மீண்டும் வள்ளியின் ஞாபகம் வந்தது திரும்ப வீட்டினுள் சென்று முருகன் படத்திற்கு எதிரில் இருந்த திருநீற்றை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான்.

வழக்கமாக விஜயன் இம்மாதிரி மீட்டிங்கிற்கு செல்லும்போது வள்ளியம்மை, விஜயன் நெற்றியில் திருநீறு இட்டு அனுப்புவது வழக்கம்.

இன்று அவள் இல்லை! அவள் கையால் திருநீறு இட்டுக் கொள்ளாமல் செல்லுகிற அன்றைய அனுபவம் அவனுக்குப் புதிது. இந்த ஒருநாள் புதிய அனுபவமே அவனுக்கு வேதனையாக இருந்தது.

அவர்களுடைய அத்தனை காலக் குடும்ப வாழ்க்கையில் ஒருநாள் கூட வள்ளியம்மையை விட்டுப் பிரிந்து இருந்ததில்லை. கூட்டம் கட்சி வேலை என்று பல நாட்கள் அவன் தன் வீட்டிற்கே வராமல் கூட இருந்ததுண்டு. ஆனால் வள்ளியம்மை வீட்டில் இருக்கிறாள் என்கிற தெம்பு அவனுக்கு இருக்கும்.

அவனுடைய கூட்டத்திற்கு வந்தவர்கள் பலர் தன்பேச்சை, அவளிடம் புகழ்ந்து கூறியதையெல்லாம் கேட்டு ஆனந்தப்பட்டு விஜயனிடம் கூறி பூரித்துப் போவாள்.

விஜயன், தான் பேசிய எத்தனையோ பெரிய கூட்டங்களுக்கு அருணகிரியையும், தன்னுடன்

அழைத்துச் சென்று முன் வரிசையில் அமர வைத்திருக்கிறான் உள்ளூரிலேயே நடக்கும் கூட்டமென்றால், வள்ளியம்மையே, அருணகிரியையும் அழைத்துக் கொண்டு பெண்கள் வரிசையில் வந்து உட்கார்ந்து கேட்பாள். வீட்டிற்கு வந்ததும், கூட்டத்தில் தன்னை பலரும் புகழ்ந்ததைக் கூறி திருஷ்டி கழிப்பாள் இன்று அவர்கள் இருவரும் இல்லை.

விஜயன் வீட்டைப் பூட்டி திறவு கோலை பக்கத்து வீட்டு மாரியம்மாளிடம் கொண்டுபோய் கொடுத்தான்.

திட்டப்படியே குமரேசனும், விஜயனும் பாலஸ் கபேயில் காபி, பலகாரங்கள் சாப்பிட்டு விட்டு பஸ்சை பிடித்து மீட்டிங் நடக்கிற இடத்திற்கு வேகமாகப் போனார்கள்.

குறித்த சமயத்தில் விஜயன் அங்கு வந்து சேர்ந்தான் அவனுடைய வருகையை அறிந்ததும் கூட்டத்தில் சலசலப்பு மூண்டது. சக தொண்டர்கள் அவனுக்கு வணக்கம் கூறி மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

கனக விஜயன் ஈழத் தமிழ் இயக்கத்தில் முக்கிய தொண்டன் என்பதோடு, சிறந்த பேச்சாளனாகவும் இருந்ததால் அவனுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. அவனது ஆவேசமான பேச்சுக்களையும், அனல்பறக்கும் உரைகளை

யும் கேட்க சுற்று வட்டாரங்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்து கூடுவார்கள்.

விஜயன் வந்து விட்டதை அறிந்ததும், மக்கள் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கூடியிருந்த மைதானத்தின் மத்தியில் போட்டிருந்த மேடையின் மேல் நின்று கொண்டு விஜயன் தனது உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தான். மகுடியில் மயங்கிய பாம்புகளைப் போல் மக்கள் அவன் பேச்சை மெய்மறந்து கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

# 7

## ஆகாசக் கடையா அதிசயக் கடையா!

அருணகிரி மற்றும் குழந்தைகள் காரில் கொழும்புவை சுற்றிப் பார்க்க சென்று கொண்டிருந்தனர்.

கொழும்பு நகரிலுள்ள கடை வீதிகளின் சில பகுதிகள் "பிரின்ஸ் வீதி" ஆகியவை லண்டன் மாநகரத்து அழகிய வீதிகளை நினைவூட்டும் வண்ணமிருந்தன. இவை அழகாகவும் பல மாடிக் கட்டிடங்கள் நிறைந்தனவாகவும் இருந்தன.

இலங்கையின் பழம்பெருமைகளை உணர்த்தும் கொழும்பு நகர மியூசியம் சிறப்பாக இருந்தது

"இதுதான் கண்டி மன்னர்களின் தங்க சிம்மாசனம், இவைகள் கண்டி மன்னர் அணிந்திருந்த உடைகள்; இவை வரலாற்றுச் சிறப்பு மிக்க பழங்காலத்து சிலைகள்" என்று கனகசபை குழந்தைகளுக்கு கூறினார்.

அடுத்து அவர் அனைவரையும் உயிர்க்காட்சி சாலைக்கு அழைத்துச் சென்றார். அது அன்றாட பொழுது போக்கு இடங்களில் ஒன்றாகவும் இருந்தது. இதற்கான நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி விட்டு எல்லோருக்குமாக டிக்கட் வாங்கி வந்தார் கனகசபை.

"வெளிநாட்டு பயணிக்களுக்காக மட்டுமின்றி, உள்நாட்டு பயணிகளுக்காகவும்; உள்ளூர் மக்களுக்காகவும் உயிர்க் காட்சி சாலைகளில் மிருகங்களை நன்கு பழக்கி வைத்து அன்றாடம் சர்க்கஸ் காட்சி போல் வியக்கத்தக்க பல நிகழ்ச்சிகளைக் காட்டி வருகிறார்கள்," என்றார் கனகசபை.

நன்கு பழக்கப்பட்ட யானை ஒன்று, மனிதனை அலக்காக மேலே தூக்கி எறிந்து விட்டு மனிதன் கீழே விழும் போது தாங்கிப் பிடித்தது. பின்னர் அவனை மிதிப்பது போலவும், அவனது தலை முழுவதையும் விழுங்கி கழுத்தைக் கடிப்பது போலவும் பாவனை செய்தபோது ராதா பயந்து நடுங்கி கத்தியே விட்டாள்.

பின்னர் அந்த மனிதனை யானை எவ்வித ஆபத்துமின்றி கீழே இறக்கி அவனை தூக்கி தன் முதுகின் மீது வைத்துக் கொண்டு கூட்டத்தினரை பார்த்து வட்டமாக ஊர்வலம் வந்தது, இத்தனை அமர்க்களத்துக்கும் அந்த மனிதன் சிரித்துக் கொண்டே இருந்தான்!

"இப்படிப் பழக்கப்பட்ட யானைகளை வைத்துக் கொண்டுதான் காடுகளில யானைகளை பிடிக்கிறார்கள்," என்றார் கனகசபை

இவர்கள் செல்லும் காரை கடந்து அடிக்கடி மாடி பஸ்கள் பல ஓடிக் கொண்டிருந்தன, அவற்றின் வயிற்றிலும், முகத்திலும், 'சிலோன் டிரான்ஸ்போர்ட்' என்று எழுதி இருப்பதை பாபு படித்தான்

கொழும்பு நகரிலுள்ள கடைகள் பொதுத் துறை ஸ்தாபனங்கள், அரசு அலுவலகங்கள், இவற்றிலுள்ள பெயர் பலகைகளிலெல்லாம் 'சிங்களம், தமிழ், ஆங்கிலம்' ஆகிய மூன்று மொழிகளிலும பெயர்கள் எழுதப்பட்டிருந்தன இதைப் பற்றி காந்திமதி கேட்ட போது, "தமிழ் மொழி இடம் பெறாத இடமே இல்லை என்று சொல்லலாம். மைல் கற்கள் சாலையிலுள்ள கை காட்டி பலகைகள் அனைத்திலும் இம்மொழித் திட்டம் பயன்படுகிறது" என்று விளக்கினார் கனகசபை

கொழும்பு கடை வீதியிலுள்ள ஆகாசக் கடையை அடையும் போது இரவு மணி ஏழடித்தது.

பார்க்கும் போதே அந்த ஆகாசக் கடை அனைவருடைய கருத்தையும் கவர்ந்தது இந்தக் கடையின் மேல் தளத்திற்கு, கனகசபை அனைவரையும லிபடில் அழைத்துக் கொண்டு சென்றார்; அங்கு காண்டீன் மற்றும் பற்பல வணிக நிறுவனங்

களும் இருந்தன. பொது மக்கள் ஏராளம் பேர் வந்து சாமான்கள் வாங்கிச் சென்றனர்.

காண்டீனைப் பார்த்ததும், "பசிக்கிறதே அத்தை," என்றாள் தங்கமணி. காந்திமதி சிரித்தபடி அனைவரையும் காண்டீனுக்கு அழைத்துச் சென்றாள்,

"இங்குள்ள பொருள்களின் விலை மற்ற இடத்தை விட அதிகமாய் இருந்தாலும், பொருள் தரமாய் இருக்கும்," என்றார் கனகசபை.

எல்லோரும் அவரவர்களுக்குப் பிடித்தமான அயிட்டங்களை பெயர்ப் பலகையைப் பார்த்து ஆர்டர் செய்தனர்,

பில்லைக் கொடுத்துவிட்டு காண்டீனை விட்டு எல்லோரையும் கனகசபை, ஆகாசக் கடையின் மேல்தளத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கிருந்து பார்த்தபோது கொழும்பு நகர் முழுவதும் தெரிந்தது. அந்த இரவு வேளையில் அந்நகரின் தோற்றம்; வண்ண வண்ண விளக்குகளால் வைரப் பொட்டு வைத்து கோலம் போட்டது போல் அழகுடன் ஜொலித்தது. கீழே இறங்கியவர்கள், வரிசையாக இருந்து ஒவ்வொரு கடைகளிலும் ஏறி இறங்கினார்கள். வரும்போது ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பெட்டிகள் இருந்தன,

வெளியில் காரை எடுத்துக் கொண்டு போன பரமகுரு அப்போது தான் வீட்டினுள் நுழைந்

தார். ராதாவும், தங்கமணியும், தாங்கள் வாங்கிக் கொண்டு வந்த சாமான்களையெல்லாம், ஹால் முழுதும் பரப்பியபடி, வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''கடைத்தெருவை ஒரு அலசு அலசி விட்டீர்கள் போலிருக்கிறதே'' என்று வேடிக்கையாகக் கேட்ட பரமகுருவிடம் தங்கமணி, ''அப்பா, அப்பா, நம்ம வீட்டுக்கு புதிதா ஒரு விருந்தாளிப் பையன் வந்திருக்கான். பேரு அருணகிரி, ரொம்ப நல்லவன் அப்பா; அழகா இருக்கான். டிரஸ் பண்ணிக் கொண்டிருக்கான். உனக்கு அவனைத் தெரியுமா அப்பா'' என்று படபடவென்று பேசினாள்.

''அது...சரி...எங்கே உன்னுடைய அழகான அந்த அழகுப் பையன்?'' என்று பரமகுருபதிலுக்குக் கேட்கவே, மாடியிலிருந்து இறங்கி வந்த அருணகிரியைச் சுட்டிக் காட்டி, ''அதோ'' என்று பாபு காட்டினான். பரமகுரு கடகடவென்று சிரித்தார்.

''டிரஸ் பிரமாத செலக்ஷன். நீ பார்த்து வாங்கினியா அருணாகிரி'' என்று அவனை அணைத்தபடி அன்போடு கேட்டார் பரமகுரு.

''இல்லை மாமா நான் வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் கேளாமல், தங்கமணிதான் என்னைப் பிடிவாதமாகக் கடைக்கு அழைத்துப் போய், ஒன்றுக்குஇரண்டாக இதெல்லாம் வாங்கிக் கொடுத்தா. இதையெல்லாம் வீட்டுக்குக் கொண்டு போனா—அம்மா திட்டுவாள்; எனக்கு என்னோடு

பழைய டிரஸ்ஸையே தரச் சொல்லுங்க மாமா" என்றான்.

உடனே பரமகுரு செல்லமாக அவன் முதுகை தட்டிக் கொடுத்து, "அம்மா, ஒன்றும் சொல்ல மாட்டாள்; நான் பார்த்துக்கொள்கிறேன். மாமா வாங்கித் தந்தார்னு சொல்லு. உங்க அம்மாவுக்கு இந்த அண்ணன் என்றால் உயிர்," என்று ஆறுதலாகப் பேசி உள்ளே அழைத்துச் சென்றார்.

பரமகுரு தான் வாங்கி வந்த விமான டிக்கெட்டை மாமாவிடம் கொடுத்து விட்டு; "சரியாக பத்தே முக்கால் மணிக்கு உங்களுக்கு ஃப்ளைட்" என்றார்,

"அதற்கென்ன, இன்னும் ஏகப்பட்ட நேரம் இருக்கே! சாப்பிட்டு விட்டு; ஒரு குட்டித் தூக்கம் கூடப் போடலாம்" என்றார் பொன்னம்பலம் சிரித்துக் கொண்டே.

சமையற்காரர் எல்லோரையும் சாப்பிட அழைத்தார், டைனிங் ஹாலுக்குள் நுழைந்ததும் அழகான மேஜை மீதுஎல்லோருக்கும் சாப்பாடு பரிமாறப்பட்டிருந்தது. குழந்தைகள் எல்லருாம் ஒரு வரிசையாக பெரியவர்கள் எதிரில் தங்கள் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டனர்.

அவர்கள் சாப்பிடச் சாப்பிட கேட்காமலே சமையற்காரர் ஒவ்வொன்றாய், புதிது புதிதாய் எதையாவது போட்டுக் கொண்டே

இருந்தார். அருணகிரிக்கு அங்கு நடப்பது எல்லாமே அதிசயமாக இருந்தது.

"இவர்கள் எல்லோரும், தினமும் இப்படித்தான் சாப்பிடுவார்களா; அல்லது, ஒரு புது விருந்தாளி வந்திருப்பதற்காக, விசேஷ சமையலா?" என்று அவன் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. 'அதைப் பற்றிச் சாவகாசமாக தங்கமணி தனியாக இருக்கும் போது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று தன் ஆர்வத்தை உள்ளேயே பூட்டி வைத்துக் கொண்டான்.

பொன்னம்பலம் அடிக்கடி அருணாகிரியின் பக்கம் திரும்பி "அருணகிரி; சங்கோசப்படாமல் வேண்டியதையெல்லாம் கேட்டு வாங்கிச் சாப்பிடு; இதுவும் உன் வீடு தான்;" என்று உபசரித்தார். அதே சமயம் சமையற்காரரைப் பார்த்து, "பிள்ளை கூச்சப்படுவான்; அவனை நன்றாகப் பார்தது பரிமாறுங்கள்" என்று ஒரு உத்திரவு போலக் கூறினார்.

அவர்களை எல்லாம் பொறுப்போடு வெளியே அழைத்துப் போய்க் கூட்டி வந்த கனகசபையுடன் அவர்கள் வாங்கின சாமான்களையெல்லாம் குறித்துக் கொண்டு மீதி பணத்தை அணருகிரி கணக்கு பார்த்து தன்னிடம் ஒப்புவித்ததையும்; அதை நீயே வைத்துக்கொள் என்றதற்கு, "அது சரியான பழக்கம் அல்ல" என்கிற பெரிய வார்த்தை கூறி கணக்குப்படி பணத்தை திருப்பிக்கொடுத்து விட்ட

தையும் பொன்னம்பலம் மனம் திறந்து அருண கிரியை எல்லாரிடமும் பாராட்டினார்.

இரவு சாப்பாடு முடிந்ததும் எல்லோரும் படுக்கச் சென்றார்கள் பாபு, ராதா, தங்கமணி, அருண கிரி எல்லாரும் நீண்ட நேரம் ஊர் சுற்றிப் பார்த்ததைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்துவிட்டு சிறிது நேரத்தில் தூங்கி விட்டார்கள்.

. மறுநாள் காலை ஆறு மணிக்கே அவர்கள் எல்லோரும் இலங்கையை சுற்றிப்பார்க்க உல்லாசப் பயணம் கிளம்பப்போகின்றனர். அதற்கு, வழியில் உண்பதற்குத் தேவையான பலவித சித்ரான்ன உணவுவகைகள், வறுவல்கள், மற்றும் தின்பண்டங்கள் தயாரிப்பதில் சமையல்காரர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். லட்சுமி அம்மாள் அதை மேற்பார்வை இட்டுக்கொண்டிருந்தாள்.

முன் ஹாலில் பொன்னம்பலம், பரமகுருவுடன் பேசிக்கொண்டே சிங்கப்பூர் பயணமாவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். கல்யாணி தன் கணவருக்கு வேண்டிய துணிமணிகளை அவரது பயணப் பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

போர்டிகோ வாசலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விமான நிலையத்திற்கு புறப்படத் தயாராக காரை நிறுத்திக் கொண்டு டிரைவர் காத்து நின்றான். உள்ளே சமையற்கட்டுவரை சென்று மேற்பார்வை பார்த்துவிட்டு சரியாக பத்தேகால்

மணிக்கு பொன்னம்பலம் புறப்படத் தயாரானார் பூஜை அறையிலிருந்த சுவாமி படங்களை எல்லாம் வணங்கி திருநீறு இட்டுக் கொண்டு, லட்சுமி அம்மாளிடமும், மனைவியிடமும் விடைபெற்றுக் கொண்டு பொன்னம்பலம் காரில் ஏறிக்கொண் டார். பரமகுருவும் மாமாவின் அருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

கார் விமானநிலையத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. போகிற வழியில், "ஏஜண்ட் கூறிய அறுபது லட்சம் ரூபாய்க்கும் டிராவலர்ஸ் செக் வாங்கி வைத்துக் கொண்டிருக் கிறேன். அவள் கையில் மொத்தமாக பணத்தை கொடுத்து விட்டால் பேரம் முடிந்துவிடும்" என்று பரமகுருவிடம் மகிழ்ச்சியோடு கூறினார்.

உடனே பரமகுரு, "எல்லாம் முருகன்அருளால் நல்லபடியாகவே முடியும். அப்படியே பெரியம்மா ஞானாம்பாளையும்சென்று பார்த்துவிட்டு வாருங் கள். உடம்பு ரொம்ப சரியில்லை என்று போன மாதம் எனக்கு எழுதியிருந்தாள்," என்றார் பரம குரு. பொன்னம்பலமும், "அப்படியே செய் கிறேன்!" என்றார்.

# 8

# சிவப்பு ஆற்றில் வள்ளி மலர்...

வள்ளியம்மை அன்று எல்லையற்ற மகிழ்ச்சியில் இருந்தாள். விமான நிலையத்தில் அண்ணனையும், பெரியம்மாவையும் இப்படித் தனியே சந்தித்து, மனம் திறந்து உரையாடும் சந்தர்ப்பம் வாய்க்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. அண்ணன்தான் அப்படி என்றால், அண்ணன் குழந்தைகள் பாபுவையும், ராதாவைவும் அவளால் மறக்கவே முடியவில்லை. அருணகிரியையும் அல்லவா தங்களுடன் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்!

பை நிறைய பழங்களையும், பிஸ்கட்டுகளையும் போட்டுக் கொடுத்தது போதாதென்று, ஒரு கட்டு நோட்டையுமல்லவா சோப்புக் கட்டி மாதிரி அண்ணன் போட்டுத் தந்திருக்கிறார்.

அருணகிரி இப்போது அவர்களுடன் காரில் சென்று கொண்டிருப்பான். பாவம்! அவன் இப்படி என்னை விட்டு அவர்களுடன் போக

நேரிடும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டான். பாபு அவனைப் பிடிவாதமாக அழைத்தும் அருண கிரிக்கும் உள்ளூர அவர்களுடன் போக வேண்டு மென்கிற ஆசை இருந்ததை அவனது கண்கள் கூறின.

இல்லாவிட்டால் யார் கூப்பிட்டாலும் இப்படி என் மகனை அனுப்ப மாட்டேன். அவனும் தரா தரம் தெரியாமல் போக ஆசைப்பட மாட்டான்.

எல்லாவற்றையும்விட அருணகிரியை அவர்களு டன் அனுப்பி விட்டதற்காக அவர் என்னிடம் எவ்வளவு கோபித்துக் கொள்ளப் போகிறாரே; அவரை நான் எப்படி சமாதானம் செய்யப் போகி றேனோ தெரியவில்லை!

விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட வள்ளி யம்மை இப்படி வழி முழுவதும் பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டே வேகமாக நடந்தாள்.

குறுக்கு வழியில் அத்தனை வேகமாகச் சென்றும் நாலரை மணிக்குப் பட்டித் துறையி லிருந்து புறப்படும் பஸ் அவள் வந்து சேர்வதற்குள் புறப்பட்டுப் போய்விட்டது. வள்ளியம்மைக்கு ஏமாற்றமாகி விட்டது.

அடுத்த பஸ்ஸிற்கு இன்னும் ஒன்றரை மணி நேரம் காத்திருக்க வேண்டும். ஆறு மணிக்குத் தான் அடுத்த பஸ் வரும். 'என்ன செய்யலாம்?' என்று யோசித்துக் கொண்டே இருந்தவள் ஒரு முடிவிற்கு வந்தாள்.

செவலவத்தை வழியாகக் குறுக்கு வழியில் நடந்தால், இங்கே பஸ் வருவதற்குள், ஆறு மணிக்கெல்லாம் வீட்டையே அடைந்து விடலாம். கால்கள் தான் நோவெடுக்கும்.

கால் வலியைப் பார்த்தால் வீட்டுக்குப் போய் விளக்கேற்ற வேண்டாமா? கூட்டம் முடிந்து பசியோடு வருகிற புருஷனுக்கு சுடு சோறு ஆக்கிப் போட வேண்டாமா? சூ...கால்வலியென்ன; பெரிய கால்வலி; வீட்டுக்கு போனதும் சுடு தண்ணி ஒத்தடம் கொடுத்தால் எல்லாம் சரியாகி போகும்!

வள்ளியம்மை வேகமாக நடக்கத் தொடங்கினாள். கையிலிருந்த பை சிறியதாக இருந்தாலும் அதிலிருந்த ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை இவற்றால் கனம் அதிகமாகவே இருந்தது. 'ஆரஞ்சு என்றால் அத்தானுக்கு உயிர். ஆசை ஆசையாச் சாப்பிடும். வீட்டுக்குப் போனதும் பழத்தை சுளை சுளையாக உரித்து வைத்து, சோறு சாப்பிட்ட பிறகு தின்னக் கொடுக்க வேண்டும்.

கிழங்கு கிழங்கான ஆப்பிளை மட்டும், அத்தானை விட்டு நறுக்கித் தரத் சொல்லிச் சாப்பிடணும்; அதுதான் அழகா நறுக்கும். திராட்சை ஒண்ணுக்குத்தான், உரிக்கவோ, நறுக்கவோ வேண்டாம். தண்ணி ரொப்பின கோலிக் குண்டு கணக்கா—

தளதளன்னு குலையோடு இருக்கு. ஒவ்வொண்ணா—அப்படியே பிச்சு அத்தான் வாயிலே

போடணும்—பதிலுக்கு அதுவும், ஒண்ணை எடுத்து என் வாயிலே போடும் போது கையை...

வழியெல்லாம் வள்ளியம்மையின் மனம் தன் அன்புக் கணவனைப் பற்றியே சுற்றி சுற்றி எண்ணிய வண்ணமிருந்தது. செல்லச் சீமாட்டியாக வாழ வேண்டிய வள்ளியம்மை, பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக, ஏழை கனக விஜயனை விரும்பி மணந்து கொண்டாள். அதனாலேயே குடும்பத்தினரின் வெறுப்புக்கு ஆளாகி, அவளுக்கு இந்த ஏழ்மை நிலை ஏற்பட்டது.

அதனால் என்ன—இப்போதும் அவர்கள் வரையில் கண்ணியமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறரிடம் சென்று ஒரு வெள்ளிக் காசுக்காகக் கை நீட்டியது கிடையாது கணவன் எவ்வளவு சம்பாதித்துக் கொண்டு வந்தாலும், அதையே பெரிதாக ஏற்று ஒரு குறையும் இல்லாமல் சிக்கனமாகக் குடும்பம் நடத்தி; கணவன், மனைவி, குழந்தையோடு சந்தோஷமாகத்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் கண்களுக்கு ஏழையாகத் தோன்றினால் இருந்து விட்டுப் போகட்டுமே என்பது அவள் எண்ணம்.

ஆனால் இவளைப் போல், வள்ளியம்மையின் பெற்றோரால் நிம்மதியாக இருக்க முடியவில்லையே!

வள்ளியம்மையின் தாயார் ஞானம்பாளுக்கும் தனியாக ஆஸ்தி இருக்கிறது; அதுபோல தந்தைக்

கும் கொழும்புவில் பல தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. என்ன இருந்து என்ன? ஒரே மகளான வள்ளியம்மை சீரும், சிறப்புமாய் வளர்த்து வந்தனர் சிவபாதம் தம்பதியினர். வள்ளியம்மை மேற்படிப்பிற்காக அந்தப் பள்ளியில் சேர்ந்த போது அதே வகுப்பிற்கு கனக விஜயனும் வந்தான். சாதாரண குடும்பத்தில் பிறந்தவனாக இருந்தாலும், படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். பேச்சில் மிகவும் வல்லவன். பள்ளி பேச்சுப் போட்டியில் பல பரிசுகள் பெற்று வந்தான். அடக்கமும், பண்பும் உள்ளவனாக இருந்தான்.

இந்த சமயத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக நெஞ்சுவலியினால் சிவபாதம் காலமானார். அப்போது ஞானாம்பாள் சகோதரி லட்சுமி அம்மாளும் வேதனையில் இருந்தாள். அவளது மாமா மயில்வாகனம் இறந்து போய் அவள் பரம குருவோடு தங்கியிருந்தாள் எனவே, ஞானம்பாளே தன் சகோதரி மூலம் வள்ளியம்மைக்கு பல விதங்களில் உதவினாள். திருமணத்திற்காக பெரிய இடமாக பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் வள்ளியம்மை தான் "விஜயனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது!" என்று கூறி விட்டாள்.

இந்த விஷயம் ஞானாம்பாளின் இதயத்தில் பேரிடியாக விழுந்தது. கனக விஜயன் எவ்வளவு தான் நல்லவனாக இருந்தாலும், மிகவும் ஏழைக்

குடும்பத்து பையன். தங்களுடைய அந்தஸ்துக்கு சிறிதும் ஒத்துவராது வீணே உறவினர்களின் ஏளனத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என எவ்வளவோ ஞானாம்பாள் மகளுக்கு புத்தி கூறினாள் ஆனால், ஒரே பிடிவா இருந்தாள் வள்ளி.

அதற்கு மேலும் விஷப் பரீட்சை செய்ய ஞானாம்பாள் மனம் ஒப்பவில்லை "சரி வருகிற ஒரு முகூர்த்தத்தில் உனக்கும், விஜயனுக்கும் திருமணத்தை நடத்தி வைத்து விடுகிறேன். ஆனால், திருமணத்திற்குப் பிறகு, நீ, யாரோ நான் யாரோ. என் சொத்துக்களில் ஒரு காசும் கூட உனக்கு கிடைக்காது. இது நிச்சயம்!" என்றாள் ஞானாம்பாள். அப்படியும் வள்ளியம்மையின் மனம் மாறவில்லை.

இதயத்தினுள் பொங்கியெழுந்த எல்லையற்ற துயரத்தை அடக்கிக் கொண்டாள் ஞானாம்பாள். உறவினர் யாரையும் அழைக்காமல், கதிர்காமம் முருகன் சன்னதியில், வள்ளியம்மை விஜயனுக்கு சிறப்பாக மணமுடித்துக் கொடுத்தாள். மறு நிமிஷமே யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கார் ஏறி ஊருக்குப் போய் விட்டாள் ஞானாம்பாள்.

அதன் பிறகு, வள்ளியம்மை வீட்டிற்கு ஞானாம்பாள் சென்றதில்லை. இனி தன் மனைவிக்கு அந்த உறவு இல்லை என்பதை விஜயன் உணர்ந்து கொண்டு விட்டான். கனகவிஜயன் தன் தாயாருடன் தனதுமனைவி வள்ளியம்மையை

அழைத்துச் சென்றான். பல மாதங்களுக்குப் பிறகு, ஒரு சமயம் விஜயன் கண்டிக்கு சென்றிருந்தான். அப்போது ஞானாம்பாள் தன் சொத்துக்களையெல்லாம் பொன்னம்பலம் மூலம் விற்றுக் கொண்டு சிங்கப்பூரிலுள்ள தம்பியிடம் சென்று விட்டதாக தகவல் கிடைத்தது.

விஜயனின் படிப்பிற்கு தகுந்த வேலை உள்ளூரில் கிடைக்கவில்லை. சரியான வருமானம் இல்லாமல் குடும்பம் வறுமையில் கஷ்டப்பட்டது, தன் தாயார் மனைவியுடன் பிழைப்பிற்காக கொழும்பிற்கு வந்து விட்டான்.

அருணகிரி பிறந்த பிறகு விஜயன் குடும்பத்திற்காக மட்டுமே அதிகமாக உழைத்தான். அதுவும் சிறிது காலத்தில் மாறிவிட்டது. இப்போதெல்லாம் விஜயனின் முழு மூச்சும் ஈழத் தமிழர்களை மேம்படுத்துவதிலேயே இருந்தது. இதற்கிடையில் விஜயனின் தாய் காலமானாள்.

தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்க இரவு பகல் உழைப்பது நாள் தவறாமல் கூட்டம், பேச்சு என்று ஒவ்வொரு நிமிடமும் உயிருடன் விளையாடுகிற போராட்டம்தான் விஜயனுக்கு.

இவ்வாறு சிந்தித்தபடி பாதி வழிக்குமேல் நடந்து, செம்மண் மேட்டருகே வரும்போது, எதிரே வந்த ஜீப் ஒன்று வேகமாக அவளை கடந்து

சென்றது. அதில் ராணுவ வீரர்கள் போல் தோற்ற மளித்த சிலர் இருந்தனர்.

வள்ளியம்மை, தனக்கு முன்னால் தூரத்தில் சென்று கொண்டிருக்கும் ஆளுடன் துணை சேர்ந்து விடவேண்டுமென எண்ணி வேகமாக நடந்த போது, சற்று முன் அவளைக் கடந்து சென்ற ஜீப்பி லிருந்தவர்கள் வள்ளியம்மையை நோக்கி சரமாரி யாக சுட்டனர். இலங்கை மண்ணிற்கு, ரத்த தானம் செய்து கொண்டே அவள் உயிர் பிரிந்தது.

# 9

# மனைவியைத் தேடி

**பொ**துக் கூட்டம் முடிந்ததும், கும்பலாக பலர் மேடை ஏறி வந்து விஜயனை வாழ்த்தினர். அன்றைய அவனது பேச்சு ஈழத் தமிழர்களின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்று இளைஞர்கள் பலர் பாராட்டிச் சென்றனர்

பேச்சை முடித்ததிலிருந்தே விஜயனுடைய சிந்தனையெல்லாம் வீட்டிற்குப் போக வேண்டுமென்பதிலேயே இருந்தது விமான நிலையத்திற்கு போன மனைவியும், மகனும் இந்நேரம் வந்திருப்பார்கள். அண்ணனிடமிருந்து புதிது புதிதாக ஏதாவது சேதி கேட்டுக்கொண்டு வந்து மணிக் மணக்கில் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பாள் வள்ளியம்மை. தன் தாயாரைப் பற்றிக் கூட பேசுவதில்லை, பரமகுருவினிடம் அவளுக்கு அப்படியொரு பாசம் ஏற்பட்டு விட்டது

உண்மையில், பரமகுருவும் அப்படி ஒரு உன்னதமான மனிதன்தான். உறவு முறைகளைக் கடந்து, மனிதர்களை நேசிக்கத் தெரிந்தவர்.

வள்ளியம்மை பரமகுருவை வீட்டிற்கு வரும்படி அழைக்காமல் இருக்க மாட்டாள். இந்தத் தடவை பரமகுருவிடம் தன் செய்கைகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டு பரமகுருவின் அன்பிற்கும் நான் அடிமை என்பதை வள்ளிக்கு புரிய வைத்து அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும்.

"விஜயன் அண்ணே," என்று யாரோ பின்னால் இருந்து அழைக்கிற குரல்கேட்டு விஜயன் திருப்பிப் பார்த்தான். வந்தவன், வழியெல்லாம் ஓடி வந்தவன் போல் மூச்சிறைக்க, விஜயன் காதருகே குனிந்து ரகசியமாகக் கூறினான்.

"மனோகரனை கைது செய்து லாரியில் தூக்கிக்கொண்டு போய் விட்டார்களாம்! உங்களை உடனே அலுவலகத்துக்கு வரும்படி செல்லத்துரை அண்ணன் சொல்லி அனுப்பியிருக்காரு!"

"அப்படியா?" விஜயன் சிங்கத்தைப்போல் கர்ஜித்தான். மறுகணம் அவன் சிந்தனையிலிருந்து வீடு, வள்ளியம்மை, அருணகிரி, பரமகுரு அனைவருமே மறைந்து விட்டனர்.

உடனே விஜயன், அவனோடு கட்சி அலுவலகம் நோக்கி விரைந்து சென்றான்.

கட்சி அலுவலகத்திற்குள் விஜயன் சென்ற நேரம் அங்கே அவனுடைய நண்பர்கள் பலர் சோகமாக உட்கார்ந்திருந்தனர்.

மனோகரன் கைதானது அவர்களுக்கு மிகுந்த மனக் கலக்கத்தை உண்டு பண்ணியது. அவர்கள் கூட்டத்தில் மனோகரன் ஒரு மல்யுத்த வீரனைப் போல் விளங்கியவன். தனி ஒருவனாகவே, ஆயுதங் களின்றி பல பேரை சமாளிக்கும் வலிமை படைத் தவன். எப்போதும் எச்சரிகையாகவும் செயல் படக் கூடியவன், ஒரு கட்டிடத்தின் வலுவான தூண் ஒன்றை இழந்தது போலவே விஜயனும் உணர்ந்தான்.

போலீஸ் லாரியைத் தொடர்ந்து சில தொண் டர்கள் சென்றிருப்பதால், எப்படியும் அவனை மீட்டுக் கொண்டு வருவார்கள் என்று அனைவரும் நம்பி இருந்தனர்.

அந்த நீண்ட இரவும், காலைப் பொழுதில் பெரும் பகுதியும் கடந்து விட்டன. விஜயனுக்கு அதற்குமேல்அங்கு பொறுமையுடன் இருக்க முடிய வில்லை. சொல்லிக் கொண்டு வீட்டிற்குப் புறப் பட்டான்.

கூட்டத்தில் பேசியதும்; இரவு தூக்கமின்மை யம்; நீண்ட நடையும் விஜயனை தள்ளாடச் செய் தன. அப்படியும் வேகமாக அவன் வீட்டை அடைந்தபோது அவனை வரவேற்க யாருமே

இல்லாமல் கதவில் அவன் பூட்டிய பூட்டு அப்படியே தொங்கிக் கொண்டிருந்தது.

இதை சற்றும் எதிர்பாராத விஜயன் வேகமாக மாரியம்மாள் வீட்டை நோக்கிச் சென்றான் அவள் வேலைக்குப் போயிருந்தாள். ஒரே ஓட்டமாக குமரேசன் வீட்டிற்கு சென்று விசாரித்தான். அவன் தன்னைத் தேடிக்கொண்டு சென்றிருப்பதாக குமரேசன் மனைவி கூறினாள்.

என்ன செய்வது என்று தோன்றாமல் நேரே தன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த ஒரு பையன் "ஏன் மாமா அருணகிரி இன்னிக்கு ஸ்கூலுக்கு வரலே? டீச்சர் கேட்டாரு" என்று கூறிக் கொண்டே சென்றான்.

விமான நிலையத்திற்கு சென்ற அருணகிரி, வள்ளியம்மை இருவரும் ஏன் இன்னும் வீடு திரும்பவில்லை? எங்கே போனார்கள் இவர்கள். ஒரு வேளை பரமகுரு எல்லாரையும் தன்னோடு அழைத்துக்கொண்டு போய் விட்டாரோ? ஆனால், பொன்னம்பலம் வீட்டிற்கெல்லாம் வள்ளியம்மை போகக் கூடியவள் அல்லவே!

முதல் நாள் மீட்டிங் முடிந்ததிலிருந்து அவன் ஒன்றும் சாப்பிடவில்லை. நேரம் செல்லச் செல்ல அவன் கவலை அடைந்தான். அதற்கு மேலும் அர்த்தமில்லாமல் அந்தத் திண்ணையில்

உட்கார்ந்து கொண்டிருக்க அவன் விரும்பவில்லை. பஸ்ஸைபிடித்து நேராக பொன்னம்பலம் வீட்டிற்கு வந்தான்.

உயரமான இரும்பு கேட்டிற்கு வெளியே நின்றபடி உள்ளே எட்டிப் பார்த்தான். யூனிபார்ம் அணிந்திருந்த சிங்கள கூர்க்கா அரைத் தூக்கத்தில் பீடி பிடித்துக் கொண்டிருந்தான்.

விஜயன் கேட்டை திறந்தபோது பட்டென்று விழித்துக்கொண்டு, "யாரு?" என்று வழி மறித்தான்.

"எஜமானைப் பார்க்கணும்," என்றான் விஜயன்.

"ஊரில் இல்லை", என்றான் கூர்க்கா.

"எஜமானி அம்மாளை பார்க்க வேண்டும். ஊரிலிருந்து உறவினர்கள் வந்திருக்கிறார்கள்," என்றான் விஜயன்.

"யாரும் வீட்டில் இல்லை. அப்புறம் வா," என்று சிடுசிடுத்தான் அவன்.

திரும்பவும் கேட்டை மூடப் போன கூர்க்காவிடம், "எல்லாரும் எப்ப திரும்பி வருவாங்க தெரியுமா?" என்று விஜயன் கேட்டான்.

''சீக்கிரமா ஊர் சுற்றி முடிச்சிட்டா சீக்கிரமா வருவாங்க; மெல்ல ஊர் சுற்றிப் பார்த்தா மெல்ல வருவாங்க!'' என்று கிண்டல் செய்தான் அவன்.

ஆனால் தொடர்ந்து விஜயனால் சமாதான மாக இருக்க முடியவில்லை. தன் மனைவியும், மகனும நூற்றுக்கு ஒரு சதம்தான் இந்த வீட்டில் இருக்கக் கூடும் என்று எதிர்பார்த்தான். எனினும், மாலை வரை வெளியே சென்றவர்களுக்காக அங்கேயே காத்திருந்து பார்த்தான். அவர்கள் யாரும் வராமல் போகவே ஏமாற்றத்துடன் திரும்பவும் தன் வீட்டிற்கே பஸ் ஏறினான்.

## 10

# ஒரு மலர் உறங்குகிறது

மனைவியையும், மகனையும் தேடி விஜயன் அலைந்தான். அவனுக்கு பசி வயிற்றை கிள்ளியது.

இலங்கை கார்பரேஷன் விளக்குகள் எரியத் துவங்கி இரவை பகலராக்கிக் கொண்டிருந்தன.

விஜயன், தான் இருக்கும் தெருவிற்குள் நுழைந்தபோது அவனை சிலர் வித்தியாசமாக பார்த்தார்கள். எல்லார் வீட்டு வாசல்களிலும் விளக்கு எரிந்து கொண்டிருந்தன. விஜயன் வந்து விட்டதைக் கேட்டு உள்ளேயிருந்து சிலர் வெளியே வந்து பார்த்தபடி நின்றார்கள்.

தூரத்தில் அவன் வருவதைப் பார்த்ததும், குடிரேசனும், சில நண்பர்களும் வேகமாக ஓடி வந்து அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள், அவனுடன் எதுவும் பேசாமல் மவுனமாக வந்து கொண்டிருந்தனர். எல்லார்

முகத்திலும் ஒரே சோகம் அல்லது யார் மீதோ ஆத்திரம்.

தன் வீட்டு வாசலை மிதித்தபோது விஜயன் அங்கே கண்ட காட்சி அவனை குலை நடுங்கச் செய்தது. தெருவே அவன் வீட்டு வாசலில் கூடி யிருந்தது. அவனது நண்பர்கள், அழுதபடி விஜய னிடம், "அண்ணே! பாவிங்க நம்மை பழிவாங்கிட் டாங்க," என்று கதறியபடி வள்ளியம்மையை காட்டினர். வீட்டின் நடுக்கூடத்தில் தலைமாட்டில் அகல் விளக்கெரிய வள்ளியம்மையின் உடல் கிடத் தப்பட்டிருந்தது. அவளருகே ஒரு பையும் இருந் தது.

அவனைக் கண்டதும் மாரியம்மாள் தான் முதலில் குரல் கொடுத்தால். "விஜயா, வள்ளி யம்மை இப்படி நம்மை எல்லாம் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டோளே," என்று வயிற்றிலும், தலையிலும் அடித்துக்கொண்டு அழுதாள்.

அவனது கண்கள் நெருப்புத்துண்டு போல் அந்த மங்கலான வெளிச்சத்திலும் பிரகாசித்தன. நரம்புகள் எல்லாம் வெடித்துச் சிதறி விடும்போல் உடலுக்குள் துவம்சம் செய்தன.

பிரமை பிடித்தவன் போல் எதுவுமே பேசாமல் மனைவியையே பார்த்து கொண்டிருந்த விஜயன், இடி முழக்கம் போல் 'வள்ளி' என்று அலறியபடி அவள் கால்களில் தன் முகத்தைப் புதைந்து கொண்டு அழுதான்.

தன்னுடைய வாழ்நாளில் விஜயன் அன்று தான் முதன் முதலாக அப்படிக்கதறி அழுதான். 'இதுவே எனது முதலும் கடைசியுமான அழுகை' என்பது போல அப்படி அழுதான்.

'என்ன நடந்தது? என் மகன் அருணன் எங்கே?'' என்று விஜயன் கனவிலிருந்து விழித்தவன் போல் கேட்டான்.

குமாரசாமி, விஜயனது தோளைத் தட்டியபடி சமாதானப்படுத்தி விஷயத்தைக் கூறினான்.

''இன்னிக்குக் காலையில் செம்மண்காடு வழியே வந்த நம்ம ஊருக்காரர் ஒருவர் வந்து என் கிட்டே வள்ளியம்மையை யாரோ வழியில் சுட்டுப் போட்டிருப்பதாகச் சொன்னார்!''

''இதைக் கேட்டதும், மாரியம்மா, நானும் வர்றேன்னு புறப்பட்டாள். யாருமே வேலைக்கு போகல்லே. ஆரோக்கியம், அசோகன், தமிழ்நம்பி, நான், மாரியம்மா எல்லோருமா மாரியம்மையைத் தேடிப் போனப்போ அங்கே வள்ளியம்மை இந்த கோலத்தில் மரித்து ஓரமாகக் கிடந்தாள்!'' என்றார்.

''இனிமே என்ன செய்யலாம் தம்பி!

''அருணகிரியை தேடி கண்டுபிடிக்க முடியுமா? வள்ளியம்மை விஷயத்தை தெரிஞ்சவங்களுக்கெல்லாம் சொல்லி அனுப்ப வேண்டாமா? எவ்வளவு அழுதாலும் இனிமே என் ராசாத்தி எழுந்திருந்து

வரப் போவதில்லை. பாவிங்க! என் உசிரைச் கேட்டாலும் கொடுத்திருப்பேனே. நான் யாருச் காக தனியே வாழ்ந்து கொண்டு இருக்கேன்!" என்று புலம்பியபடியே ஆக வேண்டிய காரியங் களையும் நினைவுபடுத்தி விட்டாள் மாரியம்மாள்.

"வள்ளியம்மைக்கு இந்த ஊர்லே எத் தனையோ பணக்கார உறவுக்காரர்கள் இருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். என்னை கல்யாணம் செய்து கொண்டதினால், அத்தனை பேருடைய உறவையும் அவள் விட்டவள். ஆனால், அவள் உயிருக்குயிராய் தன் அண்ணன் பரமகுருவைத் தான் எண்ணிக் கொண்டிருந்தாள். அவர்கள் இப் போதுசென்னையிலிருந்து, இங்கு பொன்னம்பலம் வீட்டிற்கு வந்து தங்கி இருக்கிறார்கள்," என்று கூறிக்கொண்டே வந்த விஜயன் நிறுத்திவிட்டு ஒரு முறை திரும்பப் பார்த்தான்.

குமரேசன் ஒருமூலையில் நின்றபடி அழுது கொண்டிருந்தான். குமரேசனை வள்ளியம்மை தன் சொந்தத்தம்பி மாதிரி எண்ணி நடத்தியவள். தாய், தந்தை இல்லாத அவன், தன் தூரத்து உற வினர் வீட்டில் தங்கி ஒரு மில்லில் வேலை செய்து வருகிறான். பாதிநாள் அவனுக்கு சாப்பாடு விஜய் னோடுதான். லீவுநாள் என்றால் குமரேசன் இங்கே வந்துவிடுவான். கட்சி வேலையால் விஜயன் வீட்டில் இருப்பதே அபூர்வம். அருணகிரி யையும், வள்ளியையும் கோயிலுக்குக் கூட்டிப்

போவதும், கடைக்குச் சாமான்கள் வாங்க துணை யாகப் போவதும் குமரேசன்தான்.

இனி அவனுக்கு வள்ளியைப் போல் உடன் பிறவா சகோதரி எங்கே கிடைக்கப் போகிறாள்!

"குமரேசா!" என்று தாழ்ந்த குரலில் விஜயன் அவனை அழைத்தான்.

"பொன்னம்பலம் வீட்டில் அவர்கள் எல்லா ரும் இலங்கையைச் சுற்றிப் பார்க்கப் போயிருக் கிறார்கள். வீட்டில் யாருமே இல்லை. இந்நேரம் எல்லாரும் வந்திருப்பார்கள். குமரேசா நீ தான் அதற்கு தகுந்த ஆள். பரமகுருவை வெளியே தனியே அழைத்து வள்ளியம்மை இறந்த விஷ யத்தையும், அருணகிரி காணாமல் போன விஷயத் தையும் சொல்லிவிட்டு வந்து விடு. அதன் பிறகு தான், நாம் வள்ளியம்மையின் இறுதிச் சடங்கை நடத்த வேண்டும்," என்று ஒரே முச்சில் கூறி முடித்தான் விஜயன்.

# 11

## இலங்கைச் சுற்றுலா

அன்று அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் பொன்னம்பலத்தின் 'நைட்டிங் கேல்' பங்களா விழித்துக் கொண்டு விட்டது. வெளி எங்கும் இருள் சூழ்ந்திருக்க, அந்த பங்களாவில் மட்டும் அறைக்கு அறை விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் பம்பரமாக சுழன்று தங்கள் காரியங்களில் மும்மரமாயிருந்தனர்.

காந்திமதி, தானும் குளித்துவிட்டு குழந்தைகளையும் குளிப்பாட்டி டிரஸ் செய்து விட்டாள். பாபு, ராதா, தங்கமணியும் தாயார் உதவியோடு செய்து கொண்ட அத்தனை காரியங்களையும் அருணகிரி தானே முடித்துக் கொண்டு தங்கமணி முன்தினம் வாங்கிக் கொடுத்த உடையை அணிந்து கொண்டான்.

சமையல் அறையில் விதம் விதமான சித்ரான்னங்களையும், வறுவல்களையும், சுவீட் வகைகளை

யும் செய்து வரிசையாக பாத்திரங்களில் அடுக்கி வைத்தனர்.

வாசலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தயார் நிலையில் ஒரு வேனும், பெரிய காரும் நின்றன. இரு டிரைவர்களும் குறியிட்டுக் கொண்டு பளிச்சென்று 'யூனிபாரம்'மில் காட்சியளித்தனர்.

கைடு கனகசபை வீட்டிலேயே குளியல் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வந்து விட்டார். பஸ் ஸ்டாண்டில் ஐம்பத்தைந்து சதத்திற்கு வாங்கி வந்த 'ஈழகேசரி' நாளிதழை வராண்டாவில் உட்கார்ந்தபடி புரட்டிக் கொண்டிருந்தார்.

மிஸஸ். பொன்னம்பலம் நேரத்தை அனுசரிப்பதில் கண்டிப்பானவர். சரியாக ஆறு மணிக்கு எல்லாரும் கிளம்பிவிட வேண்டுமென்பது எஜமானியம்மாவின் ஏற்பாடு. எனவே அதை உணர்ந்து வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

சமையற் கூடத்தில் செய்து வைத்திருந்த உணவு வகைகள், குடி தண்ணீர் ஜாடிகள், உட்காருவதற்கான விரிப்புகள் எல்லாவற்றையும் ஒரு தனி காரில் ஏற்றினர். அவர்களோடு கூட உதவிக்குச் செல்ல வேண்டிய சிங்காரமும் தன்னை ரெடி செய்து கொண்டார்.

கல்யாணி அனைவரையும் அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தபோது மணி ஆறு. எல்

லோரும் பளிச்சென்று ஆடைகள் அணிந்து அழகாக காட்சியளித்தனர், சாப்பிடுவதற்கான பாத்திரங்களையெல்லாம் காரில் ஏற்றிவிட்டு ஒரு சமையல்காரரும் வேலையாளும் அதில் ஏறிக் கொண்டனர்.

மற்றவர்கள் எல்லாம் பெரிய வேனில் ஏறிக் கொண்டனர். டிரைவருக்குப் பக்கத்து சீட்டில் முன்தினம் போலவே கைடு கனகசபையும், பாபு வும் ஏறிக்கொண்டனர். பின்புறம் மற்றவர்கள் எல்லாம் அமர்ந்து கொண்டனர்.

டிரைவர் வேல்சாமியிடம் புறப்படும்போதே எந்த ஊர்கள் வழியாகச் செல்ல வேண்டும்; எந்த ஊர்களை பார்த்துக் கொண்டு போக வேண்டும் என்பதையெல்லாம் முன் கூட்டியே விளக்கி விட்டார் கனகசபை. அதனால் வேல்சாமி வண்டியை அதன்படி ஓட்டிக் கொண்டிருந்தார்.

அவர்கள் புறப்படும்பொழுது கொழும்பு நகரம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. தெருவெங் கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தாலும், மனி தர்கள் நடமாட்டம் இல்லை.

கொழும்பு நகரத்தைக் கடந்து சுமார் பதி னைந்து மைலில் உள்ள 'கலனிய' என்னும் ஊரில் அவர்கள் முதலில் இறங்கினார்கள்.

"தனது வாழ்நாளில் ஒருமுறை புத்தர் இங்கு வருகை தந்ததாக மக்கள் கூறுகின்றனர். இங்கு

'கலனிய-கங்கா' என்னும் நதி ஓடுகிறது!" என்றார் கனகசபை.

"இலங்கையில் நீங்கள் எல்லா இடங்களிலும் புத்தர் ஆலயங்களைப் பார்க்கலாம். இருப்பினும் கலனியாவும், அனுராதபுரமும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்!" என்று கூறி அனைவரையும் ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். மூலவர் ஸ்தானத்திற்கு முன்னால் இருக்கும் புத்தர் இக்கோயிலில் படுத்திருக்கும் கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

"இதைப் பார்க்கும்போது ஸ்ரீரங்கம் ரங்கநாதரும், அனந்த பத்மனாப சுவாமியும் நினைவிற்கு வருகிறது," என்று காந்திமதி லட்சுமி அம்மாளிடம் கூறினாள்.

அனைவரும் ஏறிக் கொண்டவுடன் கார் புறப்பட்டது. அப்போது கனகசபை கூறினார்:

"நாம் இந்த ஒருநாள் இலங்கைப் பயணத்தில் எல்லா ஊர்களிலும் இறங்கிச் சுற்றிப் பார்த்து விட முடியாது. எனினும், முக்கியமான இடங்களை நாம் அவசியம் பார்க்கப் போகிறோம். நாம் இறங்கிப் பார்க்காத வழியிலுள்ள ஊர்களைப் பற்றி நான் விளக்கி விடுகிறேன்," என்றார்.

"அது போதும் கனகசபை. முக்கியமாக நான் கதிர்காம முருகனை தரிசனம் செய்ய வேண்டுமென்றுதான் புறப்பட்டு வந்திருக்கிறேன். இருந்

தாலும், குழந்தைகளுக்காகத்தான் இப்போது சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்," என்றாள் லட்சுமி அம்மாள்.

"இப்போது நாம் கதிர்காமத்திற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம். வழியில் காலி, களுத்துறை ஆகிய ஊர்களை நாம் கடந்து வந்து விட்டோம். காலியில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அதுதான் விசேஷம்," என்றார் கனகசபை.

காடுகள் நிறைந்த வழிகளைக் கடந்து கதிர்காமம் வந்ததும், அனைவரும் இறங்கினார்கள். கோயிலில் ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர்.

எடுத்து வந்திருந்த கூடையில் ரோஜா மாலை, தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, ஊதுபத்தி, சூடம் எல்லாம் இருந்தன.

"கதிர்காம முருகன், திருச்செந்தூர் முருகன் மாதிரி மிகவும் அழகாக இருப்பாரா பாட்டி?" என்று பாபு கேட்டான்.

"நீதான் பார்க்கப் போகிறாயே," என்றாள் லட்சுமி அம்மாள் வேறு எதையும் விளக்காமல்.

கோயிலைச் சுற்றி அழகான மதில்சுவர் எழுப்பி இருந்தார்கள். நுழைவாயில் ஒரு கோட்டையின் முகப்புபோல் இருந்தது. பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டு சன்னதியை அடைந்த போது, அங்கு கண்ட காட்சி பாபுவிற்கு வியப்பை அளித்தது.

கோயிலில் இரு சன்னதிகள் இருந்தன. ஒன்று முருகன் சன்னதி; மற்றொன்று விநாயகர் சன்னதி. இரு சன்னதிகளிலும் கனமான இரண்டு திரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன, முருகன் சன்னதி, திரையில் முருகப்பெருமானின் படமும், விநாயகர் படமும் வரைந்திருந்தது.

பாபு, ராதா, தங்கமணி, அருணகிரி, காந்திமதி எல்லாரும் திரையை எப்போது விலக்குவார்கள் சுவாமியை எப்போது தரிசிக்கலாம் என்று ஆவலோடு காத்திருந்து கேட்டபோது, லட்சுமி அம்மாள் கூறினாள்:

"இங்கே திரையை விலக்க மாட்டார்கள். அர்ச்சனை, நைவேத்யம், தீபாராதனை எல்லாம் இந்த திரைக்கேதான். அர்ச்சகரைத் தவிர யாரும் திரைக்கு உட்பக்கம் செல்லக் கூடாது, அனுமதிக்க மாட்டார்கள்," என்று கூறிக் கொண்டிருந்தபோது மணி ஓசை கேட்டது.

சில நிமிஷங்களில் உள்ளே இருந்து திரை ஓரமாக கோயில் அர்ச்சகர் வெளியே வந்தார். அவர் வாயில் வெள்ளைத் துணி கட்டியிருந்தார். லட்சுமி அம்மாள் தன்னுடைய பூஜை சாமான்களை எதிரில் வைத்தாள். அதேபோல் பலபேர் பூஜைக்கு எல்லாம் வாங்கி வந்திருந்தனர்.

அர்ச்சகர் எல்லோரும் கொண்டு வந்திருந்த தேங்காய்களையும் திரைக்கு முன்னால் உடைத்து மலர் மாலைகளை திரைக்கு முன்னால் பரப்பி,

திரையிலுள்ள முருகனுக்கும், விநாயகருக்கும் தீபாராதனை செய்தார்.

அர்ச்சகர் எல்லாருக்கும் விபூதி பிரசாதங்கள் வழங்கினார். லட்சுமி அம்மாள் திரையின் முன்னால் கண்களை மூடி மெய்மறந்து சிறிது நேரம் பிரார்த்தனை செய்தாள், பிறகு வெளியே வந்ததும் பாபு கேட்டான்: "ஏன் பாட்டி அந்த அர்ச்சகர் வாயில் வெள்ளைத் துணி கட்டியிருக்கிறார். இங்கு எல்லாமே அதிசயமாக இருக்கிறது. கடைசியில் உள்ளே இருக்கும் முருகனை காட்டவே இல்லையே" என்று குறைபட்டுக் கொண்டான்.

"திரைக்கு உள்ளே முருகன் சிலை வடிவில் இருக்கிறானா? அல்லது வேல் வடிவில் இருக்கிறானா? என்பதுபற்றி யாருக்குமே தெரியாது. அதுதான் ரகசியம். உள்ளே இறைவன் அறுகோண வடிவில் இருப்பதாகவும், அங்குள்ள சுவாமி அருகில் போகும்போது பேசாமலும், உமிழ்நீர் வெளியே வராது இருக்கவுமே அப்படி அர்ச்சகர் வாயைக் கட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கேன்," என்று கூறிய லட்சுமி அம்மாள். கனகசபையை பார்த்து, "நான் சொன்னது சரிதானா?" என்று கேட்டாள்.

"ரொம்ப சரி!" என்றவர், "இங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் 'செல்லக்கதிர் காமம், உள்ளது, இங்குள்ள விநாயகர் ஆலயத்தில்

சிங்களக மொழியில் அர்ச்சனை செய்கிறார்கள்,'' என்று விளக்கினார்.

இங்கே மாணிக்க கங்கை என்னும் புண்ணிய நதி ஓடுகிறது. நீராடினால் விசேஷம். இங்கு ராம கிருஷ்ணா மடமும் இருக்கிறது. விவேகானந்தர் மேலை நாடுகளில் பயணத்தை முடித்துக்கொண்டு இங்கே வந்ததன் நினைவாக அமைக்கப்பட்ட 'விவேகானந்த சபை' இங்கு உள்ளது என்றார்.

கோயிலைக் கடந்து மரங்கள் அடர்ந்த விசால மான புல் தரையில் நடந்து கொண்டிருந்தபோது ராதாவும், தங்கமணியும் ''பசிக்கிறது பாட்டி'' என்றனர்.

அந்த இடத்தின் அழகைப் பார்த்ததும், ''சரி நிழலாய் இருக்கிறது, இங்கேயேஉட்கார்ந்து எல்லா ரும் சாப்பிடலாம்,'' என்று கூறிய கல்யாணி, பணி யாளிடம் சாப்பாடு கொண்டு வரச்சொன்னாள்.

எல்லாரும் வட்டமாக உட்கார்ந்து கொண்ட னர். அவரவர்களுக்கு வேண்டியவற்றைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டு வயிறு நிறைந்ததும் புதுத்தெம் போடு புறப்பட்டனர்

கார்வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அப் போது கனகசபை, ''நாம் இப்போது 'யாலர்' காட்டை கடந்து திரிகோணமலைக்குச் சென்று கொண்டிருக்கிறோம்.

"யாலர் காட்டில் நிறைய வன விலங்குகள் இருக்கின்றன. புலிகளும், யானைகளும் கூட்டம் கூட்டமாக இருக்கின்றன. அழகிய மான்கள், மயில்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த காட்டிற் குள் செலவதானால், வன அதிகாரியிடம் உத்தரவு பெற்றுச் செல்ல வேண்டும், அவர் ஒரு வேட்டைக் காரரை உதவிக்கு அனுப்புவார். அல்லாமல் மனி தர்கள் தனியே போனால் உயிருக்கு ஆபத்து," என்று கனகசபை விளக்கிக் கொண்டிருந்தபோதே "பாட்டி! நாம் இங்கே இறங்கி யானை, புலி, மான் மயில் எல்லாம் பார்த்துவிட்டுப் போகலாம் பாட்டி," என்றான் பாபு.

உடனே காந்திமதி, "ஏண்டா பாபு, மானை யும், மயிலையும் பார்க்கவா இலங்கைக்கு வந்திருக் கிறோம். சமயமிருந்தால் சரி, இன்னும் முக்கிய மாய் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து விட்டு வீடு திரும்ப வேண்டாமா?" என்றாள்.

முன்னும் பின்னுமாய் போய்க் கொண்டிருந்த கார், திரிகோணமலைக்கு போகும் வழியில் நின்றது.

"நாம் இப்போது கன்யா என்கிற சிற்றூரில் இறங்கப் போகிறோம்! அங்கிருந்து ஐந்து மைல் தொலைவில்தான் திரிகோண மலை இருக்கிறது. குழந்தைகளுக்கெல்லாம் நான் இப்போது ஒருகதை

சொல்லப் போகிறேன்," என்று ஆரம்பித்தார் கனகசபை.

'கதை' என்றதும் பாபு, ராதா, தங்கமணி மூவரும் "சொல்லுங்கள் மாமா" என்று கோரசாகக் கெஞ்சினார்கள். கனகசபை கூறப்போகும் கதையை கேட்க குழந்தைகளோடு பெரியவர்களும் தயாரானார்கள்.

# 12

# தாமரைக் குளத்தில் தங்கமணி

கதையை ஆரம்பித்தார் கனகசபை. "உங்களுக்கெல்லாம் ராவணனைத் தெரியும் என்று நினைக்கிறேன். அவன் இலங்கையை ஆண்ட அரசன் அவனுடைய தாயார் இறந்து விட்டாள். இறுதிச் சடங்குகளை நடத்தும்போது, விடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. குளிர் நடுங்கிற்று எல்லாரும் குளிக்க வேண்டுமே! உடனே மகா விஷ்ணு வெந்நீர் ஊற்று ஒன்றை உருவாக்கி இறுதிச் சடங்கு நடத்த உதவினார்.

இவ்வாறு வந்தவைதான் 'கன்யா ஊற்றுகள்' என்று கூறப்படுகிறது. இந்த நீரூற்றைச் சுற்றி ஆறு கிணறுகள் உள்ளன. நடுமத்தியில் உள்ள நீரூற்றில் இப்போதும் கொதிக்கும் வெந்நீர் ஊறிக் கொண்டிருக்கிறது. அதில் தண்ணீர் கலக்காமல் அப்படியே குளிக்க முடியாது அவ்வளவு சூடாக இருக்கும்." அனைவரும் அங்கிருந்த விநாயகரை

வழிபட்டனர். கன்யா நீரூற்று அருகே விநாயகர் கோயிலும் இருந்தது.

"கன்யா ஊற்றுக்கு ஆறு மைல் தூரத்தில் திரிகோணமலையில் 'ராவணன் வெட்டு' என்கிற வெட்டுண்ட பாறை இருக்கிறது. ராவணன் தன் அன்னை இறந்தவுடன் கோபமும், துயரமும் கொண்டு வாளை எடுத்து வீசியதாகவும், அது இந்தப் பாறையின் மீது பட்டு பாறை இரண்டாகப் பிளந்ததாகவும் சிலர் கூறுகிறார்கள். "ராவணன் பாறையை சென்றுச் பார்க்க நமக்கு சமயம் இல்லையாதலால், நாம் இப்போது திரிகோண மலைக்குப் போகலாம்," என்றார் கனகசபை.

"இந்த மலையின் தெற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய பாகங்கள் கடலால் சூழப்பட்டு மூன்று கோணமாக ஊர் அமைந்திருக்கிறது. ஒரு கோணத்தில் திருகோணேசுவரர் கோயில் கொண்டிருக்கிறார். தெய்வீகச் சிறப்பு வாய்ந்ததோடு இலங்கையின் கிழக்குப் பகுதியிலே இயங்கும் பெரும் துறைமுகமாகத் திரிகோணமலை திகழ்கிறது. இங்குள்ள கடற்கரை உலகில் உள்ள அழகிய கடற்கரைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கொழும்பு நகரிலிருந்து 160 மைல் தொலைவில் நாம் இப்போது இருக்கிறோம். வாருங்கள் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்யலாம்," என்று கனகசபை அழைத்துச் சென்றார்.

அப்போது பாபு, "என்ன மாமா கோயிலுக்கு என்று கூறிவிட்டு பீரங்கிக்கோட்டைக்கு அழைத்து

வந்து விட்டீர்களே?" என்று கேட்டான். அந்த இடம் அச்சமாகத்தான் இருந்தது.

நெடுஞ்சுவர்களுடன் கூடிய நீளக் கோட்டையும், கோட்டை வாயிலில் வரிசையாக பீரங்கிகளும் இருந்தன.

"இந்தக் கோட்டைக்குள் நுழைந்தால் கோயிலைக் காணலாம். புராதனப் பெருமை மிக்க திருகோணமலை திருகோணேசுவரர் ஆலயத்தை இடித்துவிட்டு போர்ச்சுக்கீசியர் தங்களுக்கென இக்கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். அவர்களுடைய நினைவுச் சின்னமாக இக் கோட்டை இருந்தாலும், உள்ளே திருக்கோணேசுவரர் எல்லாருக்கும் அருள் பாலித்துக் கொண்டு தான் இருக்கிறார்," என்று கூறி கோயிலுக்குள் அழைத்துச் சென்றார்.

எல்லாரும் திருகோணேசுவரரை வணங்கி பிரார்த்தித்துக் கொண்டனர்.

"திருகோணமலை இலங்கை நாட்டின் சிறப்பான நகரம் என்பதோடு, தமிழர் அதிகம் வாழும் பகுதியாகவும் விளங்குகிறது," என்றார் கனகசபை.

"அடுத்து நாம் காணப்போகும் இடம் நுவாரலியா. நுவாரலியா 7500 அடி உயரத்தில் உள்ள மலைப் பிரதேசம். தமிழகத்தில் ஊட்டி இருப்பதைப் போல் இலங்கையில் இந்த இடம் குளிர்பபிரதேசமாக விளங்குகிறது. ராமாயண

காலத்தில் வரும் சீதா தேவிக்கு இங்கு கோயில் கட்டியுள்ளார்கள்.

"ராமாயண காலத்தில் இந்த நுவாரலியா விற்கு 'அசோகவனம்' என்று பெயர். இங்குதான் சீதையை ராவணன் சிறை வைத்திருந்தான். சீதையைத் தேடி வந்த அனுமான், இலங்கைக்கு தீ வைத்ததாக வரலாறு கூறுகிறது. நுவாரலியாவில் பல மைல் பரப்பளவிற்கு இன்றும் அது கறுப்பாக இருக்கிறது. இதற்குக் காரணம் ஆஞ்சநேயர் வைத்த தீதான் என்று பலர் வழிவழியாகக் கூறு கிறார்கள்.

"இயற்கை அழகு கொஞ்சும் அந்த இடத்தை கோடை வாசஸ்தலமாக; அழகிய சாலைகள் அமைத்து உருவாக்கியவர்கள் ஆங்கிலேயர்கள் தான்.

"இங்கே தமிழர்கள் தங்கள் உடல் வருத்தம் பாராது, காலம், நேரம் இன்றிய தோட்டங் களில் வேலை செய்து வருகிறார்கள். தேயிலையும் பீன்ஸ் முட்டை கோஸ், கீரை, காய்கறிகளும் பயிராகின்றன.

பாக்கு ஏராளமாகப் பயிராக்கப்படுகிறது கொழும்புப் பாக்கு மிகவும் பிரசித்தம். இலங் கைக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவ தில் தேயிலைப்போல, பாக்கிற்கும் முக்கிய பங்கு உண்டு.

காசி, ராமேஸ்வரம் என்று தமிழர்கள் இணைத்துக் கூறுவதேபோல, 'கண்டி, கதிர்காமம்' என்று இலங்கையர் கூறுவது வழககம். முருகன் பெருமையை விளக்குகிறது கதிர்காமம்: புத்தர் சிறப்பை உணர்த்துகிறது கண்டி.

கண்டி நகரம் மலைகளுக்கிடையே கிண்ணம் போல் அமைந்திருக்கிறது. ஊருக்கு முன்னால் நான்கு மைல் சமவெளிப் பரப்பில், எண்ணிக்கை யில்லா, வண்ண வண்ணப் பூக்களைக் கொண்டு, பொட்டானிக்கல் கார்டன் என்ற தோட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் இங்குள்ள மிகச் சிறந்த பூங்காக்களில், கண்டியும் ஒன்று, என்று விளக்கிய கைடு கனகசபை. இதோ தெரிகிறதே இதுதான் புகழ் பெற்ற கண்டிபுத்தர் ஆலயம். 'புத்தமாளிகை' என்று இந்த ஆலயத்திற்குப் பெயர்.

புத்தர் பாதம்பட்டு 'ஸ்ரீபாத', என்று அழைக் கப்படும் இந்த இடம் புத்தர் வழிபாட்டுத் தலமா கத் திகழ்கிறது

மறைந்த புத்தரின் உடல், 'குசி' என்னும் நகரில் எரிக்கப்பட்டு, அந்த அஸ்தி எட்டு பாகங்க ளாகப் பிரிக்கப்பட்டு, எட்டு இடங்களில் புதைக் கப்பட்டு ஆங்காங்கே புத்தர் ஆலயங்கள் எழுப்பப் பட்டன.

இந்த எட்டு புனிதஸ்தலங்களையும், 'சேதியங் கள்' என்று அழைக்கின்றனர். புத்த துறவிகள் தங்கியுள்ள இடங்கள், 'புத்த விஹார்' என்று

அழைக்கப்படுகின்றன. கிண்டியில் 'தலதா' மாளிகையில் புத்தரின் பல்லை தங்கத்தில் பதித்து வைத்திருக்கிறார்கள். கிண்டியிலுள்ள இந்தப் புனித மாளிகை இலங்கைக்கே பெருமையூட்டுவதாகும என்றார் கனகசபை.

அழகிய வேலைப்பாடு கொண்ட புத்தர் ஆலயத்தைச் சுற்றிப் பார்த்த பிறகு பரந்த புல்வெளியில் உட்கார்ந்து அனைவரும் உண்டனர்.

அடுத்து நாம் காண வேண்டிய இடம் அநுராதபுரம் என்னும் அழகிய நகரமாகும்.

"இலங்கைத் தீவிலேயே சிறப்பானதொரு இடம் பெற்றது; பாரதத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது; பௌத்தர்களின் தலைநகராக விளங்கும் சிறப்பைப் பெற்றுள்ளது இந்த அநுராதாபுரம்!" என்றார்.

கனகசபை குழந்தைகளைப் பார்த்து, "முதலில் போதி மரத்தையும், புத்தரையும் வழிபட்டு விட்டு வந்து விடலாம் என்று கூறி எல்லோரையும் போதி மரத்திற்கு அழைத்துச் சென்றார். 'இங்கு வருபவர்கள் முதலில் போதி மரத்தை தரிசிப்பது வழக்கம். நாமும் அப்படியே செய்யலாம்" என்றார் கனகசபை,

தங்கமணியும், ராதாவும் அழகிய படிக்கட்டுகளை உடைய புனித நீர்க்குளம் ஒன்றைக் கண்டனர். அதில் அழகான தாமரை பூத்திருந்தது.

இருவரும் அழகிய படிக்கட்டுகளில் இறங்கி குளத்தின் அழகையும், தாமரைப் பூவையும் ரசித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ராதா தன் கைக்கெட்டிய தாமரைப் பூ ஒன்றைப் பறித்து வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். தங்கமணியும் தனக்கு ஒரு பூ பறிக்கப் போன போது இடறி குளத்தில் விழுந்து விட்டாள். இதைக் கண்டு பயந்து போன ராதா படிக்கட்டுகளின் மேல் நின்று கொண்டு "அம்மா...அம்மா..." என்று பலமாக கத்தி அழுதாள்

ராதாவின் அழுகுரலைக் கேட்ட அருணகிரி நிமிஷ நேரத்திற்குள் அங்கு ஓடிச் சென்றான். ராதா அருணகிரியிடம். தங்கமணி குளத்தில் விழுந்து விட்டதைக கூறி படிக்கட்டிற்கு இழுத்துச் சென்றாள்.

வழுக்கி குளத்திற்குள் விழுந்து விட்ட தங்கமணி, தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தாள் இதைக்கண்ட அருணகிரி உடனே குளத்தில் குதித்து தங்கமணியை மீட்டு படியேறி மேலே வந்தான்.

இதற்குள், குளக்கரையிலிருந்து கத்தின ராதாவின் கூக்குரலைக் கேட்டு, லட்சுமி அம்மாள். கல்யாணி, காந்திமதி, பாபு, கனகசபை எல்லாரும் பதறியபடி ஓடி வந்தார்கள்.

தங்கமணியை தோளில் சுமந்தபடி வெளியே வந்த அருணகிரி அவளை தரையில் படுக்க வைத்து

இப்படியும் அப்படியும் புரட்டினான். இதற்குள், கனகசபை தங்கமணியின் முதுகில் தட்டி, சில முதல் உதவிகளை செய்ததில், தங்கமணி குடித்த தண்ணீர் வாய் வழியாக வெளியே வந்தது.

பயந்து பதறியபடி லட்சுமி அம்மாள் முருகன்வீபூதி பிரசாதத்தை எடுத்து தங்கமணியின் நெற்றியில் பூசி, ''முருகா குழந்தையைக் காப்பாற்று! நல்லபடியாக நாங்கள் ஊர் போய்ச் சேர நீதான் எங்களுக்குத் துணை" என்று கண்ணீருடன் பிரார்த்தனை செய்தாள்.

சிறிது நேரத்தில் தங்கமணி கண்விழித்து எல்லாரையும் பார்த்தாள்.

"நல்லவேளை எங்கள் வயிற்றில் பால் வார்த்தாய் தங்கமணி கண்ணு," என்று கல்யாணி அழுதாள்.

''ஒன்றுமில்லை, கவலைப்பட வேண்டாம். குளத்தில் கொஞ்சம் ஆழம் அதிகம் இருப்பதால் ஒருவாய் தண்ணீர் குடித்து விட்டாள் நல்ல சமயத்தில் முருகன், அருணகிரி உருவில் வந்து காப்பாற்றி விட்டான். நாம் எல்லோரும் அருணகிரிக்குதான் நன்றி சொல்லவேண்டும்" என்ற கனகசபையின் வாய் திரும்பத் திரும்ப, 'முருகா' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அனைவரும், "அருணகிரியால்தான் தங்கமணி இந்த கண்டத்திலிருந்து தப்பினாள்," என்று அவனை புகழ்ந்து கொண்டிருந்தனர்.

ஈரமாகிவிட்ட அவளது சட்டையை கழற்றி விட்டு வேறு துணிகளை அணிவித்து, அருணகிரிக் கும் வேறு துணிகளைக் கொடுத்தாள் லட்சுமி அம்மாள். பிளாஸ்கிலிருநத பாலை மட்டும் தங்கமணிக்குக் கொடுத்துவிட்டு, காரில் படுக்க வைத்து தூங்க வைத்தாள் காந்திமதி.

எல்லோரும் உண்டுவிட்டு காரில் ஏறிக்கொண் டதும். கொழும்பை நோக்கி புறப்பட்டார்கள்.

# 13

# ஒரு புதிய லட்சாதிபதி உருவாகிறான்

இரவு மணி எட்டு. காலையில் சுற்றுலாவுக்கு சென்றவர்கள் இன்னும் வந்து சேரவில்லை, பங்களாவில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. காலை பத்து மணிக்கு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பரமகுரு அப்போது தான் வீடு திரும்பியிருந்தார்

போன் அடித்தது. சட்டென்று எழுந்து சென்று போனை எடுத்தார் பரமகுரு. எதிர் முனையில் சிங்கப்பூரிலிருந்து மாமா பேசினார். சற்று உரக்கவே தெளிவாக காதில் விழும்படியே பேசினார்.

"பரமு, இரண்டு தடவை உனக்கு நான் 'கால்' போட்டேன். என்னுடைய மகிழ்ச்சியை உன்னோடு உடனே பகிர்ந்து கொண்டுவிட வேண்டும் என்றுதான் அப்படிச் செய்தேன். பிசினசை 'பார்க்கெய்ன்' பண்ணி 58 லட்சத்திற்கு முடித்து

விட்டேன். எல்லாம் உன்னுடைய வாழ்த்துக்கள் தான்" என்று தன்னுடைய திறமையையும் அதே சமயம் மகிழ்ச்சியையும் ஒரே வரியில் மாமா வெளியிட்டார்.

பரமகுரு "ரொம்ப சந்தோஷம் மாமா! எப்பொழுது திரும்புகிறீர்கள்" என்று கேட்டார்.

உடனே பொன்னம்பலம், "அதற்குள் சந்தோஷத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடாதே, இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லப் போகிறேன். இதை நீ என்ன; யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டோம்!"

"சஸ்பென்ஸ் இல்லாமே சீக்கிரமா சொல்லுங்கள் மாமா!"

"ஏண்டா அவசரபபடறே! டிரங்கால் பில்லை உன் கம்பெனியா கொடுக்கப் போகிறது. கால் மணி உன்னோடு சந்தோஷமாக பேச வேண்டுமென்று மூன்று மணியிலிருந்து முயற்சி பண்ணுகிறேன். நீ ஆளே அகப்படலே. உன் மகாநாடு நல்லபடியா நடந்துதா?"

"அது நல்லா நடந்தது மாமா! நீங்க விஷயத்தைச் சொல்லுங்க," என்று பரமகுரு அவசரப்படுத்தினார். மாமா ஒரே குஷியில் இருக்கிறார் என்பதை அவருடைய குரலிலிருந்தே பரமகுருவால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"உன் அம்மா எல்லாரும் சுற்றுலா முடிந்து வந்து விட்டார்களா?"

"இன்னும் வரவில்லை! அவர்களை எதிர் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்!"

"சரி, நீ என்னிடம் புறப்படும்போது ஞானாம்பாளைப் பார்த்துவிட்டு வரச் சொன்னால் அல்லவா? அது மிகவும் நல்லதாகி விட்டது. அவளே எனக்கு கடிதம் எழுதி வரவழைப்பதாக இருந்தாளாம். ஞானாம்பாளுக்கு உடம்பு ரொம்பவும் மோசமாகி விட்டது. சமீபத்தில் விஷ ஜுரம் வந்து பிழைத்திருக்கிறாள். தன் தம்பியை நம்பி இருந்தாள்; அவன் இவளை பார்ப்பதே இல்லையாம். என்னைக் கண்டதும் கதறி அழுது விட்டாள்.

"வள்ளியம்மைக்கு நான் செய்த துரோகம் தான் இங்கே வந்து அனுபவிக்கிறேன்!" என்று கண்ணீர் விட்டு அழுதாள். உடனே நான் "உன் பேரன் அருணகிரியை பார்த்தேன். பரமகுருவோட வீட்டில்தான் இருக்கிறான். பையன் கெட்டிக்காரன். முகச் சாயலில் உன்னையே உரித்து வைத்திருக்கிறது. பேச்செல்லாம் சிவபாதம் மாதிரி தோரணையில்தான் பேசுகிறான்," என்று நான் சொன்னதுமே முகம் பிரகாசமாகி விட்டது.

அதிலிருந்து அருணகிரியையும், வள்ளியம்மையையும் பார்க்க வேண்டுமென ஆசைப்படுகிறாள். நான் இங்கு வருவதற்கு முன்னமேயே, தன்

னுடைய சொத்து முழுவதையும் சுமார் 50 லட்சம் தேறும்! வள்ளியம்மைக்குப் பிறகு பேரன் அனுபவிக்க வேண்டியது" என்று எழுதியிருக்கிறாள்.

அந்த உயிலை என்னிடம் கொடுத்து 'உன்னை அருணகிரிக்கு கார்டியனாக எழுதி இருப்பதாகவும்" கூறினாள்.

"யார் அந்தப் பயல்? அங்கே இருக்கிறானா? கொஞ்சம் கூப்பிட்டுப் பேசச் சொல்லேன். நான் ஞானாம்பாள் பிளாட்டிலிருந்துதான் பேசுகிறேன்," என்று பொன்னம்பலம் பேசிக் கொண்டிருக்கும்போதே வாசலில் கார்கள் வந்து நிற்பதைப் பரமகுரு கவனித்தார்.

உடனே சட்டென்று, "மாமா போனை வைத்துக் கொண்டிருங்கள். அவர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். அருணகிரியை கூப்பிடவா?" என்று கேட்டார்.

"கொஞ்சம் இரு, நான் இன்டர்காமில் ஞானாம்பாளைக் கூப்பிடுகிறேன்," என்று கூறி விட்டு அடுத்த சில நொடிகளில் "பரமு! பயலைக் கூப்பிடு! ஞானம் டெலிபோன் லைனில் இருக்கிறாள்," என்றார்.

அப்போது காருலிருந்து இறங்கி ஒவ்வொருவராக உள்ளே வந்துக் கொண்டிருந்தனர். பரமகுரு ஹாலிலிருந்தப்டியே, "அருணகிரி!" என்று உரக்கக் குரல் கொடுத்து அழைத்தார்.

"என்ன மாமா?" என்று அருணகிரி ஓடி வந்தான்.

"உன்னுடைய பாட்டி சிங்கப்பூரில் இருப்பது உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டார்.

"ஓ! அம்மா சொல்லி இருக்காங்க," என்றான் அருணகிரி.

"இப்போ! அந்த பாட்டிக்கு உன் குரலைகேட்கணுமாம்; உன் கூட பேசணும்னு ஆசையாக இருக்காம்" என்று கூறி போனை அவன் கையில் கொடுத்தார் பரமகுரு.

அருணகிரி ரிசீவரை எடுத்து காதில் வைத்துக் கொண்டு "ஹலோ!" கூப்பிட்டான். "பாட்டிஎன்று கூப்பிடு!" என்று பரமகுரு மெல்லச் சொல்லிக் கொடுத்தார். உடனே "பாட்டி" என்று அருணகிரி அழைத்தான்.

"யார் அருணகிரியா?" என்று எதிர்முனையிலிருந்து ஞானாம்பாள் கேட்டாள்.

"ஆமாம் பாட்டி! நான்தான் அருணகிரி பேசறேன்! நீங்க நல்லா இருக்கீங்களா? உங்களை எனக்குப் பார்க்கணும் போல ரொம்ப ஆசையா இருக்கு பாட்டி!" என்று கணீரென்று கூறினான்.

"நான் நல்லாத்தான் இருக்கேன் அருணகிரி. உன்னை இத்தனை காலம் நான் பார்த்துக் கொஞ்சக் கொடுத்து வைக்காத பாவியாய் இருந்து விட்

டேன். உங்க அம்மா ரொம்ப நல்லவள். நான் அவளுக்கு துரோகம் பண்ணிட்டேன். நீ அம்மாவைப் பார்த்ததும், பாட்டி உன்னையே நெனச்சு உருகிக்கொண்டு இருக்கா; பாட்டியை மன்னிக்கச் சொன்னா என்று சொல்லுவியா? அவள் மன்னித்தால் தான் என் மனம் சமாதானம ஆகும்! மீதியெல்லாம் பொன்னம்பலம் மாமா ஊருக்கு வந்ததும் உங்கிட்டேச் சொல்லுவாங்க. சாப்பிட்டியா? கொழும்பு எல்லாம் சுற்றிப் பார்க்கப் போயிருந்தாயாமே!''

''ஆமாம் பாட்டி. நாங்க எல்லாருமா போயிட்டு இப்பத்தான் வந்தோம் கதிர்காம முருகன்கிட்டே, 'கன்யா'விலே இருக்கிற, ராவணனோட பிள்ளையார்கிட்டே, திருகோணேசுவரர் கிட்டே, கண்டியிலேயும்; ரூவான்வெலிசா புத்தர் கிட்டேயும் வேண்டிக்கிட்டேன் பாட்டி!''

''என்ன வேண்டிக் கொண்டாய் அருணகிரித் என்று ஞானாம்பாள் ஆசையோடு கேட்டாள்.

''பாபு, ராதா, தங்கமணி எல்லாருக்கும் இருக்கிற மாதிரி எனக்கும் ஒரு பாட்டி சிங்கப்பூர்லே இருக்காளாமே. அந்த பாட்டிக்கு ஏன் என்னைப் பார்க்கணும்னு ஆசையில்லை, என்று எல்லா கடவுளையும் கேட்டேன். இப்போ இங்கே வந்தவுடனே, நீங்க இப்படி கூப்பிட்டுப் பேசுவீங்க என்று நான் நினைக்கவே இல்லை பாட்டி. எனக்கு

உங்களைப் பார்க்கணும்னு ஒரே ஆசையா இருக்கு பாட்டி!" என்றான் அருணகிரி.

அதன் பிறகு சில நொடிகள் போன் மவுனமாக இருக்கவே, அருணகிரி, "பாட்டி...பாட்டி..." என்று கூப்பிட்டான்.

"அருணகிரி எனக்கு இப்போ உடம்பு சரியில்லை! குணமானதும் நான் உன் கூடவே வந்து இருக்கப் போறேன். சந்தோஷம்தானே? அம்மாவையும், அப்பாவையும் நான் ரொம்ப விசாரித்ததாகச் சொல்லு!" என்று கூறிவிட்டு பரமகுருவைக் கூப்பிடச் சொன்னாள் பாட்டி.

பரமகுரு போனை கையில் வாங்கிக் கொண்டு "என்ன பெரியம்மா?" என்றார்.

"ஒன்றுமில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அருணகிரி, வள்ளியம்மை, விஜயன் எல்லாருடைய போட்டோவிலும் ஒரு காப்பி எடுத்து எனக்கு அனுப்பி வைக்கிறாயா? உன் மாமாகிட்டே எல்லா விபரமும் சொல்லி இருக்கிறேன். வள்ளிக்கும் அருணகிரிக்கும் நீதான் துணையாய் இருக்கணும். என்னாலே அதிகம் பேச முடியவில்லை. போனை மாமாவிடம் கொடுக்கறேன்," என்று கூறினாள்

பொன்னம்பலத்திடம் பரமகுரு பேசும்போது, "மாமா! நீங்க வருகிறவரை உங்க போன் நம்பரை

யும் கொடுங்கள். குறித்துக் கொள்கிறேன்,'' என்றார்.

பொன்னம்பலம் நம்பரைக் கொடுத்துவிட்டு, "வேறு விசேஷம் ஒன்றுமில்லையே? வைத்து விடவா?'' என்றார்.

''வைத்து விடுங்கள் மாமா! குட்நைட்!'' என்றார் பரமகுரு.

போனை கீழே வைத்த பரமகுரு, அப்படியே பிரமித்துப் போய் அருகிலிருக்கும் சோபாவில் உட்கார்ந்து விட்டார். அவருக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது

ஒரு டெலிபோன் மணி ஒலிக்க ஆரம்பித்து அது முடிகிற நேரத்திற்குள், "அருணகிரியை ஐம்பது லட்சத்துக்கு அதிபதி என்று உணர்த்திய அதிசயத்தை எண்ணியபோது, 'ஓ மை காட்...யூ ஆர் கிரேட்'என்பதைத் தவிர அவரால் வேறு எதையும் சிந்திக்க இயலவில்லை!

செல்வந்தர் வீட்டுப் பெண்ணாய் பிறந்தும் வாழ்நாள் முழுவதும் வறுமையோடு போராடும் வள்ளியம்மைக்கு, இத்தனை காலம் கடந்தாவது கந்தன் கருணை புரிந்தானே என்று பரமகுரு எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்தார்.

## 14

# உயிர்காத்த உத்தமன்

அந்த மகிழ்ச்சியான விஷயத்தை முதலில் யாரிடம் சொல்லுவது? அம்மாவிடமா? கல்யாணியிடமா? ஆனால், நிச்சயமாக வள்ளியம்மையிடம் இந்த இனிப்பான செய்தியைச் சொல்லுகிற முதல் நபர் நானாகத்தான் இருப்பேன்.

"மாமா! சாப்பிடக் கூப்பிடறாங்க!" என்று அருணகிரியின் குரலைக் கேட்டுத் திரும்பினார் பரமகுரு. அவனுடைய குரலில் பணிவோடு அன்பும் கலந்திருப்பதை அவர் ஒரு போதும் கவனிக்கத் தவறியது இல்லை.

அருணகிரியைத் தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்ட பரமகுரு, "நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டார்.

"இல்லை! உங்களுக்காகத்தான்" எல்லோரும் காத்திருக்கிறார்கள்!" என்றான்.

சற்றுமுன் சமையற்காரரிடம் கூறியது நினைவிற்கு வந்தது. உண்மையிலேயே அவர் வெளியே சாப்பிட்டு விட்டாலும், என்னமோ அருணகிரியோடு சேர்ந்து மறுபடியும் சாப்பிட வேண்டும் போல் ஆசை எழுந்தது.

அருணகிரியோடு போனார். எல்லோரும் ஒன்றாய் சாப்பாட்டு மேஜையில் இருக்கும்போது பரமகுரு ஒரு தடவை எண்ணினார்; போன் விஷயத்தைச் சொல்லி விடலாமா என்று.

"ஏண்டா பரமு, சாப்பிடாமல் அப்படி உட்கார்ந்திருக்கிறாய்? பசி இல்லையா?" லட்சுமி அம்மாள் கவலையோடு கேட்டாள் அதன் பிறகு பெயருக்கு சாப்பிட்டுக் கொண்டே பரமகுரு, கல்யாணியைப் பார்த்து, "ஏன் மாமி எல்லா இடங்களையும் நன்றாகச் சுற்றிப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

உடனே கல்யாணி, "ஏண்டா பரமு, உன் பொண்டாட்டியைக் கேட்பதற்கு பதில், இப்படிச் சுற்றி வளைத்து என்னைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறாயா?" என்று கேட்டபோது எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள்

அப்போது தங்கமணி குறுக்கிட்டு, "மாமா! இன்னிக்கு நான் செத்துப் போயிடத் தெரிஞ்சேன்! அருணகிரி இல்லேன்னா என்னை நீங்க இப்போ உயிரோட பார்த்திருக்கவே முடியாது!" என்று

இன்னும் தன்னுள் இருக்கும் பயத்திலிருந்து விடுபடாதவளைப் போல் படபடப்பாகக் கூறினாள்.

இதைக் கேட்ட பரமகுரு திடுக்கிட்டார். "என்ன நடந்தது?" என்று எல்லோருக்கும் பொதுவாகக் கேட்டார்.

கல்யாணி நடந்த விஷயம் எல்லாவற்றையும் விவரமாக சொன்னாள்.

"அருணகிரி தன் உயிரையும் மதிக்காமல் குளத்திலே குதித்து தங்கமணியை காப்பாற்றினான்," என்றாள்

பரமகுரு எண்ணிக் கொண்டார் 'எத்தனை பெரிய விஷயம் நடந்திருக்கிறது; இதைப்பற்றி பெரிதாகச் சொல்லவேண்டுமென்று மாமிக்கு தோணவில்லை. அம்மா கூடச்சொல்லவில்லையே!' என்று நினைத்துக் கொண்டார்.

தங்கமணி சொன்ன பிறகுதானே அருணகிரியைப் பற்றி மாமி சொன்னாள். இந்த அலட்சியம் ஏன்? வள்ளியம்மை மகன் ஏழை அருணகிரிதானே என்கிற நினைப்பா!

அருணகிரியின் வீரச்செயல் ஒரு மனிதாபிமான அடிப்படையில் எழுந்ததுதான். என்றாலும் அதனால் பயன் பெற்றவர்களுக்கு அவனை பலர் முன்னிலையில் பாராட்டக் கூட மனம் வரவில்லை!

ஓ! இதுவே நாளையானால்? அருணகிரியின் மதிப்பு ஐம்பது லட்சத்திற்கு மேல்

என்று அறிந்தவுடன், பத்திரிகையில் விளம்பரம் கொடுத்துக் கூட தங்கள் அன்பையும், நன்றியையும் இவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

பரமகுருவிற்கு அதற்குமேல் எதுவும் சாப்பிடப் பிடிக்கவில்லை. "அருணகிரி! என்னோடு வா!" என்று அழைத்தபடி கை கழுவ எழுந்து சென்று விட்டார்.

"மாமிக்கு 'ஒரு குட் நியூஸ்' சொல்லிவிடப் போகிறேன்!" என்று பேச்சைத் துவக்கினார் பரமகுரு!

"என்ன" என்கிற பாவனையில கல்யாணி தலைநிமிர்ந்தபோது, "கையைக் கொடுங்கள்,' என்று பரமகுரு மாமியின் கையைக் குலுக்கினார்

"மாமா சிங்கப்பூர் பிசினசை ரொம்ப லாபத்துக்கு முடித்து விட்டார்!"

"அப்படியா? போன் பண்ணினாரா?" என்றாள் கல்யாணி மகிழ்ச்சி பொங்க.

"ஆமாம்!"

"எப்போ? மத்தியானமே பண்ணிவிட்டாரா?'.

"இல்லை! நீங்கள் எல்லாம் வந்த பிறகுதான். சிங்கப்பூரில் ஞானம் பெரியம்மாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாக இருக்கிறதாம்," என்று அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே பாபு, ராதா, தங்கமணி எல்லோரும் சேர்ந்து வந்து, "அப்பா

எங்களுக்குத் தூக்கம் வருகிறது நாங்கள் மாடிக்கு படுக்க போகிறோம்!" என்று கூறியபடி, "வா அருணகிரி போகலாம்!" என்றான் பாபு.

"பாபு நீங்கள் எல்லாம் முதலில் போய் படுத்துக் கொள்ளுங்கள்; அருணகிரி பின்னால் வருவான்," என்று அவர்களை அனுப்பிவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்:

எல்லாரையும் பார்த்தபடி, அருணகிரிக்கும் புரியும் வண்ணம் சிங்கப்பூரில் பெரியம்மாவை மாமா சந்தித்ததிலிருந்து, வள்ளியம்மை மேலும், அருணகிரி பேரிலும் உயில் எழுதி வைத்திருக்கிற அத்தனை விஷயத்தையும் விளக்கமாகக் கூறி முடித்தார்.

இதைக் கேட்டதும்,"உண்மையாகவா ஞானம் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறாள்?" என்று லட்சுமி அம்மாள் தன்னை மீறிய ஆச்சரியத்துடன் கேட்டாள்.

எல்லாருடைய கண்களும் அருணகிரியை மேயத் துவங்கின.

"பொன்னம்பலம் வீட்டிற்கு வந்ததும் இப்படி ஒரு அதிர்ஷ்டம் வரணும்னு கடவுள் உன் தலையில் எழுதியிருக்கிறார் போலிருக்கு அருணகிரி," என்று லட்சுமி அம்மாள் அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

"எப்படியோ வள்ளி இத்தனை காலம் பட்ட துன்பங்களுக்குக் கடவுள் இப்போதாவது கண்ணைத்திறந்து பார்த்து, ஒரு விடிவு காலம் ஏற்பட்டதே!" என்றாள்.

அணகிரி எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு படுக்கச் சென்று விட்டான்.

இரவு சரியாக மணி 11 இருக்கும், அரைத் தூக்கத்திலிருந்த பரமகுருவின் காதில் காலிங் பெல் மணி ஒலித்தது.

விளக்கைப் போட்டுக் கொண்டு கதவைத் திறந்தபோது, எதிரே கூர்க்கா நின்று கொண்டிருந் தான். பரமகுருவைப் பார்க்க வேண்டுமென்று யாரோ வந்திருப்பதாகச் சொன்னான், உள்ளே அனுப்புமாறு கூறிவிட்டு பரமகுரு காத்திருந்தார்

## 15

# தாயில்லாப் பிள்ளை

வந்தவனுக்கு கிட்டத்தட்ட விஜயனின் வயது இருக்கும். தோற்றத்தில் அவன் மிகவும் சோர்ந்து போய் வந்திருப்பது தெரிந்தது.

"என்ன விஷயம்? யாரைப் பார்க்கவேண்டும்?" என்று கேட்டார் பரமகுரு.

"கனக விஜயன் உங்களிடம் ஒரு முக்கியமான விசயம் சொல்லிவிட்டு வரும்படி அவசரமாக அனுப்பினார்.

நான் அவரது நண்பன். அவருக்குப் பக்கத்துத் தெருவில் இருக்கிறேன், பெயர் குமரேசன்!" என்று தன்னைப்பற்றிய குறிப்பைத் தெளிவாக விளக்கினான்.

"உள்ளே வாருங்கள்." என்று பரமகுரு அவனை அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்தார்.

"விஜயன் என்ன சொல்லி அனுப்பினார்?" என்று பரமகுரு கேட்டார்.

அவருடைய அந்த கேள்விக்கு குமரேசனுடைய வாயிலிருந்து எந்தவிதமான பதிலும் உடனடியாக வரவில்லை. சிறிது நேரம் மவுனமாக தலை குனிந்து கொண்டிருந்தவன் சட்டென்று வெடித்தாற்போல் குலுங்கி அழுதான். கணக விஜயனுடைய பெயரைச் சொல்லி வந்தவனுடைய இந்த திடீர் அழுகை பரமகுருவை மிகுந்த குழப்பத்திற்கு உள்ளாக்கியது.

"என்ன விஷயம் குமரேசா? ஏன் அழுகிறாய்? விஜயனுக்கோ, வள்ளியம்மைக்கோ ஏதாவது உடம்பு சரியில்லையா?" கவலையுடன் விசாரித்தார் பரமகுரு.

"எப்படிச் சொல்வது என்றுதான் ஐயா புரியவில்லை; விஜயன் அண்ணனுடைய குடும்பத்திற்கு கடவுள் பயங்கர கொடுமை இழைத்து விட்டான்!" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே துக்கம் தாளாமல் தடுமாறினான்.

பிறகு அவனே தன்னைத் தேற்றிக் கொண்டு வள்ளி இறந்த கதையை பரமகுருவிடம் கூறினான்

முருகா, முருகா என்று இடிந்து போனாற்போல் கத்தினார் பரமகுரு. அவரது குரலைக் கேட்டு லட்சுமி அம்மாளும், கல்யாணியும் தூக்கம் கலைந்து எழுந்து வந்தார்கள்.

குமரேசன் தொடர்ந்து கூறினான் ''வள்ளியம்மைக்குத்தான் இந்த கதி என்றால் அவளுடன் சென்ற அருணகிரியைப் பற்றி இதுவரை ஒரு தகவலும் தெரியவில்லை. அவனையும் பாவிகள் கொன்று கொளுத்திப் போட்டிருப்பார்களோ! என்று தெரியவில்லை. ஒரே சமயத்தில் மனைவியையும் மகனையும் இழந்து விட்டேன்; இனி நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்'' என்று கத்திக் கதறி விஜயன் தற்கொலைக்கே துணிந்துவிட்டார்.

''அவரை எங்களால் சமாதானப்படுத்தவே முடியவில்லை. எங்கள் கவலையெல்லாம் அருணகிரியை யாராவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான்'' என்று குமரேசன் கூறிக் கொண்டிருக்கும்போதே பரமகுரு இடைமறித்துக் கூறினார். ''அருணகிரி எங்களுடன்தான் இருக்கிறான். விமான நிலையத்தில், வள்ளியும், அருணகிரியும் எங்களைப் பார்த்துப் போக வந்தார்கள். வள்ளி அருணகிரியுடன் திரும்பிப் போகப் புறப்பட்ட போது என் மகன் பாபு, அருணகிரி தன்னுடன் தங்க வேண்டும், ஊர் எல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டான், அதேபோல் அருணகிரியும் விரும்பினான். வள்ளிதான் புருஷன் கோபிப்பான் என்று தயங்கினாள். நான்தான் அவளைச் சமாதானம் செய்து அனுப்பினேன்.

புறப்படும்போது, பையில் ஆரஞ்சுப் பழமும், ஆயிரம் ரூபாய் பணமும் கொடுத்தேன். வாங்கிக் கொள்ள ரொம்ப மறுத்தாள். ரொம்பவும்

பிடிவாதமாக அவள் கையில் திணித்து அனுப்பினேன். என்ன செய்வது, எங்களைப் பார்க்க வந்ததற்காக இந்தத் தண்டனையா அவளுக்கு; கடவுளே!" என்று கதறினார்.

அனைத்தையும் கனவு போல் கேட்டுக் கொண்டிருந்த லட்சுமி அம்மாளுக்கு, "சற்று முன் படுக்கப் போகும் போது, இனி இந்தப் பெண்ணிற்கு எல்லாம் விடிஞ்சு போச்சு என்று சந்தோஷப் பட்டுக் கொண்டே படுத்தேனே; வள்ளி உனக்கு விடிவு இந்த உருவிலா வர வேண்டும்? அதிர்ஷ்டமே இல்லாமல் நீ என்ன வரம் தான் வாங்கிக் கொண்டு வந்தாயோ," என்று புலம்பினாள்.

இந்த ஐநூறு ரூபாயை விஜயனிடம் கொடு. இது வள்ளியினுடைய பணம்தான். காலையில் அவளது காரியங்களுக்கு அவளது பணமே உதவட்டும். காலையில் நாங்கள் சீக்கிரமாகவே வந்துவிடுவோம் என்றார் பரமகுரு.

"சரி ஐயா! நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்," என்று புறப்படத்தயாரான குமரேசனை மாமாவின் காரிலேயே ஏற்றி விஜயன் வீட்டிற்கு அனுப்பி வைத்தார் பரமகுரு.

குமரேசனை அனுப்பிவிட்டு அன்று முழுவதும் லட்சுமி அம்மாளும், பரமகுருவும் "இனிமேல் என்ன செய்வது?" என்று யோசித்துக் கொண்டே இருந்தனர்.

"அம்மா, இந்த விசயத்தை மாமா மூலம் பெரியம்மாவுக்குச் சொல்லலாமா? சொன்னால் கேட்ட உடனேயே இருக்கிற குறை உயிரும் போய் விடும்! என்ன செய்வது என்று புரியவில்லை," என்றார் பரமகுரு.

உடனே லட்சுமி அம்மாள், "ஞானாம்பாளைப் பொருத்த வரை வள்ளி என்றோ இறந்து விட்டாள். என்னமோ கடைசி காலத்தில் கண் திறக்கிற போது இந்தப் பெண் கதி இப்படி ஆகி விட்டது. இதைப் போய் சொல்லி என்ன செய்ய? எதற்கும் உன் மாமாவை கேட்டு செய்யலாம் என்றாள்,"

"சரி," என்றார் பரமகுரு.

உடனே கல்யாணி "காந்திமதியிடம் மட்டும் விஷயத்தை இப்பொழுதே சொல்லிவிடு. இந்த அருணகிரியைத்தான் என்ன செய்வது என்று புரியவில்லை! எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறானோ? எதற்கும் தூங்குகிறவனைப் எழுப்பிச் சொல்ல வேண்டாம். காலையில் புறப்படுகிற போது சொல்லிக் கொள்ளலாம்" என்றாள் கல்யாணி.

பரமகுருவிற்கும் அதுவே சரியாகப்பட்டது மனைவியை எழுப்பி செய்தியைச் சொல்ல அவர் மாடியை நோக்கி விரைந்தார்.

# 16

# இதயம் வெடித்தது

விஜயனின் மனைவி வள்ளியம்மைக்கு நேர்ந்த கதியை கேள்விப்பட்டு, அவனது நண்பர்கள் பலரும் அன்றிரவே அவனைப் பார்க்க வீட்டிற்கு வந்து விட்டனர். யாருடைய ஆறுதலான வார்த்தைகளுக்கும் அடங்காமல் விஜயன் வள்ளியம்மையின் உடல் அருகே அமர்ந்து கதறி அழுது கொண்டிருந்தான்.

ஒவ்வொரு நிமிஷமும் அவனுடைய மனம குமரேசனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

குமரேசன் வந்து விட்டதாக விஜயனிடம் ஒரு நண்பன் கூறினான்.

அவன் உள்ளே நுழைந்ததுமே, "அண்ணே! நம்ம அருணகிரி உங்க பரமகுரு வீட்டிலேதான் இருக்கிறான்," என்று கூறி பரமகுரு சொன்ன சொத்து விபரத்தையும் கூறினான். தனியாக விஜயனை அழைத்து, 'இது வள்ளியம்மையி

னுடைய பணம்! அவள் காரியத்தை ஆரம்பி யுங்கள் என்று பரமகுரு பிடிவாதமாகக் கொடுத்து அனுப்பினார்,'' என்றான் குமரேசன்.

"அருணகிரி பரமகுருவுடன் இருக்கிறான்," என்பதற்கு மேல் எந்தச் செய்தியுமே கனக விஜயன் காதில் விழவில்லை.

சரியாக ஆறு மணிக்கு தன் தாயார், மனைவி, கல்யாணி அம்மாள், அருணகிரி ஆகியோருடன் பரமகுரு காரில் வந்து சேர்ந்தார்.

வள்ளியம்மை இறந்து இரண்டு நாட்கள் ஆகி விட்டதால் அதற்கு மேலும் கால தாமதமாகாமல் காரியத்தை நடத்திவிட வேண்டுமென்பது தெரு வில் உள்ள பெரியவர்களின் கருத்து. அதன்படி வள்ளியம்மையின் இறுதிப் பயணத்திற்கான ஏற் பாடுகள் விரைவாக நடந்து கொண்டிருந்தன.

உறங்குவது போல் நீண்டு படுத்திருந்த வள்ளி யம்மையை அந்தக் கோலத்தில் கண்டதும், லட்சுமி அம்மாளுக்கும், பரமகுருவிற்கும் துக்கம் தாள வில்லை.

குமுறிக் குமுறி அழுதனர்.

அருணகிரி தாயின் மீது புரண்டு புரண்டு அழு தான். "நான் தான் அம்மா உன்னுடைய மரணத் திற்கே காரணம். நான் அவர்களோடு போக ஆசைப்பட்டது தவறு. உன்னை விட்டு நான் பிரிந்து போயிருக்கவே கூடாது. நீயாவது என்

ணைப் போக வேண்டாம் என்று தடுத்து நிறுத்தி யிருந்தால் நான் உன் வார்த்தையை மீறி போயிருக்க மாட்டேன்!'' என்று அவன் மனதில் பட்டதையெல்லாம் கூறி அழுதான்.

வள்ளியம்மையின் உடல் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது விஜயனின் ஏராள மான நண்பர்கள் அதில் கலந்து கொண்டனர் பரமகுரு அருணகிரியை அணைத்தபடி அழைத்துச் சென்றார். லட்சுமி அம்மாள், காந்திமதி கல்யாணி எல்லோரும் காரிலேயே தொடர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் தங்கி விட்டனர்.

இடுகாட்டில் வள்ளியின் உடலுக்கு அருணகிரி தீ மூட்டுகிற வேளையில் தூரத்தில் ஒரு போலீஸ் ஜீப் வந்து கொண்டிருந்தது. வெளியே லட்சுமி அம்மாளின் கார் அருகே நின்று கொண்டி ருந்த மாரியம்மாள் இதைப் பார்த்து விட்டாள்.

உடனே மாரியம்மாள் ஒரே ஓட்டமாக ஓடிச் சென்று விஜயனிடம் விஷயத்தைக் கூறிவிட்டுத் திரும்பினாள். விஜயன் இதை எதிர்பார்த்துத் தயாராய் வந்திருந்தான்.

அருணகிரி அழுது கொண்டே தீ மூட்டி விட்டு நிமிர்ந்தபோது—

விஜயன், தூரத்தில் போலீஸ் ஜீப் அருகே நிற்பதையும், அதிலிருந்து மூன்று பேர் துப்பாக்கி

களுடன் இறங்குவதையும் கண்டான். அவ்வளவு தான் அரசு விரோத காரியங்களில் ஈடுபட்டதற்காக விஜயனை கைது செய்தனர் போலீசார். அருணகிரியை பரமகுருவின் கையில் ஒப்படைத்தான் விஜயன்.

அழகிய கொழும்பு நகரம் சிலரது கோபத்தினால் அணு, அணுவாக பற்றி எரிந்து கொண்டிருந்தது.

புகழ் பெற்றிருந்த பழைய லங்கா தகனக் காட்சிகளை அப்பாவி இலங்கைத் தமிழர்கள் நிதர்சனமாக அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

பத்திரிகைகளைப் புரட்டவே பரமகுருவிற்கு பயமாக இருந்தது. வானொலியில் கேட்ட வடிகட்டிய செய்திகளே வயிற்றைக் கலக்கின. யாழ்ப்பாணத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே வைரம் மூண்டது. தமிழர்களின் வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள் ஆகியவைகள் கொளுத்தப்பட்டன.

பரமகுருவிற்கு தாம் பெரிய தவறு செய்து விட்டதாக உள் மனது உறுத்தியது. ஆரம்பத்தில் திட்டமிட்டபடி மாநாட்டிற்கு தான் மட்டும் தனியேப் புறப்பட்டு வந்திருந்தால் இந்த தொல்லைகள் எல்லாம் ஏற்பட்டிருக்காது.

அம்மாவின் ஆசையை நிறைவேற்ற வந்த இடத்தில் குடும்பத்தோடு வசமாக அகப்பட்டுக்

கொண்டு விட்டோமே என்ற கவலைகள் அவரைப் பற்றிக் கொண்டன.

தங்கள் குடும்பத்தோடு இப்போது அருணகிரியைப் பற்றிய புதிய பொறுப்பும் சேர்ந்துள்ளது. இந்த வேளையில், அத்தனைபேரும் பத்திரமாக உயிரோடு ஊர் போய் சேர முடியுமா? என்பதே கேள்வியாக இருநதது

சரியான பந்தோபஸ்துடன் புறப்படாவிட்டால், எந்தசமயத்திலும் அசம்பாவிதம் நிகழலாம். எதற்கும் யாரும் பொறுப்பாளிகள் அல்ல யாரும் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை.

அப்போது மாமாவிடம் இருந்து போன் வந்தது.

'பரமு! இரண்டு நாட்களாக உனக்கு டிரை பண்ணிக் கொண்டிருக்கிறேன். நம்முடைய லைனைத் துண்டித்திருப்பதாக இங்கே எக்ஸ் சேஞ்சில் உள்ள பெண் கூறினாள். அவளிடம் சொல்லிவைத்திருந்தேன் இப்போது லைன் கிடைத்திருப்பதாக அவள் சொன்னதும் உடனே உன்னை கூப்பிட்டேன். நீங்கள் அங்கே எப்படி இருக்கிறீர்கள்? நான் இங்கு இருந்தாலும் அங்கு நடக்கிற கலவரங்களைப் பற்றியெலலாம் தெளிவாக அவ்வப்போது தெரிந்துக் கொண்டுதான் இருக்கிறேன். தைரியமாக இருங்கள். இடமாதிரி கலவரங்களைப் பலமுறை நான் சந்தித்திருக்கிறேன்

இம்முறை சற்று பயங்கர வடிவில் பெரிதாக உரு வெடுத்துள்ளது. அதுதான் சற்று கவலையாக இருக்கிறது.

எனது கம்பெனியிலிருந்தோ, மில்லிருந்தோ உனக்கு தகவல் ஏதாவது கிடைத்ததா? என்னு டைய மாத்தளை பாக்டரி மனேஜருக்கு போன் பண்ணியிருக்கிறேன். அவர் பெயர் குணரத்னா. அவர் உங்களை இன்று அல்லது நாளை வந்து சந்திப்பார். அவர் உதவியுடன் துறைமுகப் பகுதியிலுள்ள நமது ஓட்டல் எலிசபெத்திற்கு எல்லோரும் போய் விடுங்கள். அது மிகவும் பாது காப்பான இடம்.

"திற்க, ஒரு துயரமான செய்தி பரமு! உனக்கு நான் போன் செய்த மறுநாளே ஞானாம்பாள் இறந்து விட்டாள். இறக்கும்போது நான் அவள் அருகில் இருந்தேன். 'சாவதற்கு முன் நான் செய்த ஒரு நல்ல காரியம் வள்ளியம்மைக்கு உயில் எழுதி வைத்தது ஒன்றுதான் அண்ணா. அவளையும், பேரனையும் நான் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன்' என்று கூறிக்கொண்டே இருந்து உயிரை விட்டாள்.

"நான் உடனே புறப்பட முடியாமற் போன தற்கு இது ஒரு காரணம். இனி ஞானாம்பாள் நம்பருக்கு என்னை கூப்பிட வேண்டாம். தேவை யானால் என் ஓட்டலுக்கு போன் பண்ணு. நான் எப்படியும் புதன் கிழமை அங்கு வந்துவிடுவேன்.

வந்ததும், உங்களை அனுப்பி வைக்கிறேன். வேறு என்ன விசேஷம்?" என்று எதிர் முனையில் காத்திருந்தார்.

பரமகுரு சுருக்கமாக வள்ளி இறந்தது பற்றி கூறினார்.

அன்று மாலை ஆறு மணிக்கு மாமா சொன்ன குணரத்னா வந்தார். பரமகுரு அவரைப் பார்த்த தில்லை, ஆதலால் கல்யாணிதான் பேசி என்ன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

எல்லாருக்கும் வேண்டிய துணிமணிகளையும் அவசியமான சாமான்களையும் மட்டும் கல்யாணி எடுத்துக் கொண்டாள். முக்கியமான அறைகளை எல்லாம் பூட்டிக்கொண்டு வேலைக்காரர்களிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டு, எல்லாரும் ஒரே காரில் ஓட்டலுக்கு கிளம்பினர்.

ஓட்டல் எலிசபெத்திற்குள் நுழையும்போதே அதன் அதிபர் தேவநாயகா, குணரத்னாவையும், மற்றவர்களையும் அன்புடன்வரவேற்றார். பொன்னம்பலம் போன் பண்ணியதாக பெருமையுடன் கூறியபடி அவர்கள் தங்குவதற்கு வசதியான அறைக்கு ஏற்பாடு செய்தார்.

குணரத்னா பரமகுருவிடமும், மிஸஸ் பொன் னம்பலத்திடமும் விடைபெற்றுச் சென்றார். போகும்போது தனது பாக்டரியின் போன் நம் பரையும், பொன்னம்பலத்தின் மற்ற இரண்டு நிறுவனங்களின் விலாசத்தையும் கொடுத்தார். "தங்களுக்கு எந்த சமயத்தில் உதவி தேவையானா லும், இந்த இடங்களிலிருந்து என்னைப்போல் யாரும் வந்து உதவுவார்கள்," என்று கூறி எல்லா ரிடமும் விடைபெற்றுச் சென்றார்.

# 17

## வேட்டை

**போலீஸ்** பிடியிலிருந்து தப்பிய விஜயனின் மனம் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தது.

நாட்டிற்கு உழைக்கும் தான் என்றாவது ஒரு நாள் வள்ளியை அனாதையாக்கி விட்டு இறக்க நேரிடும் என்றுதான் அவன் எண்ணிருந்தான். ஆனால் இன்று—அவனை அனாதையாக்கி, அவள் சென்று விட்டாள்.

அவனது கவலையெல்லாம் இடுகாட்டிலிருந்து காரில் ஏற்றி அனுப்பிய அருணகிரியும், மற்றவர்களும் பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்திருப்பார்களா? என்பதுதான்.

இதைத் தெரிந்து கொள்ள ஒரு முறை அருணகிரியை நேரில் பார்த்து விட்டால் போதும். அதன் பிறகு என் உயிர் போவதைப்பற்றி நான் கவலைப் பட மாட்டேன் என்று விஜயன் எண்ணிக் கொண்டான்.

திடீரென்று அவள் உள்ளத்தில் ஒரு புதிய யோசனை தோன்றியது. போலீஸ் கண்ணிலிருந்து தப்ப ஒரு புத்த பிட்சுவைப் போல வேடமணிந்து தன் மகனைத் தேடிப் புறப்பட்டான் விஜயன் பொன்னம்பலம் வீட்டிற்கு வந்ததும் அங்கிருந்த அனைவரும் எலிசபெத் ஓட்டலுக்குச் சென்றதை அறிந்து அங்கு விரைந்தான் விஜயன். அங்கு அருணகிரியை சந்தித்தான்

"அப்பா நான் உன்கூட சிறிது தூரம் வருகிறேன்," என்று மிகவும் கெஞ்சுகிற குரலில் கேட்டுவிட்டு அருணகிரி பரமகுருவின் முகத்தைப் பார்த்தான்

"சரி விஜயா...அருணகிரி ஆசைப்படுகிறான்; பத்திரமாக போய்விட்டு வாருங்கள்," என்றார்.

கொழும்பு நகரத்துத் தெருககள் நியான்விளக்குகள் ஒளியில் மினுக்கிக் கொண்டிருந்தன.

அருணகிரி, விஜயன் இருவருமே ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து கூடியிருப்பதால் அந்த மகிழ்ச்சியில் பேசிக்கொண்டே வந்து விட்டனர்.

"சரி, திரும்பலாமா அருணகிரி?" என்று விஜயன் கேட்கும்போது, எதிரில் நெரிசலான ஒரு தெருவிலிருந்து தங்களை நோக்கி வரும் ஒரு கூட்டத்தை துரத்திக்கொண்டு; சிலராணுவத்தினர் ஓடிக் கொண்டிருந்தனர்.

ராணுவத்தினரைப் பார்த்ததும் விஜயன் உள்ளத்தில் ஒருவித பயம் இயற்கையாக எழுந்தது. ஆயினும் தான் அணிந்திருந்த புத்த பிட்சு உடையின் மீதுள்ள நம்பிக்கையினால், சட்டென்று அருகிலுள்ள ஒரு சிறிய சந்திலுள் நுழைந்தான்.

சிறிது தூரம் நடந்து பல தெருக்களைக் கடந்து சென்று வெளியே வந்தான். அங்கே பல வீடுகள் பற்றி எரிந்து கொண்டிருப்பதை இருவரும் கண்டனர்.

முன்னேயும் பின்னேயும் செல்ல முடியாத நிலையில் ஒரு மூலையில் வந்து நின்ற போது; விஜயன் மனதில் திடீரென்று, இந்தத் தெருவிற்கு ஒரு தெரு தாண்டி உள்ள ஒரு வீட்டில் தானே லிஸியா இருக்கிறாள்' என்பது நினைவிற்கு வந்தது. அந்த வீட்டின் அடையாளம் அவன் நினைவிற்கு வந்ததும், அருணகிரியின் கையைப் பற்றிக்கொண்டு வேகமாக லிசியாவின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான்.

கதவு திறக்கப்பட்டு, கவுண் அணிந்திருந்த மூப்பது வயதுச் சிங்களப் பெண் ஒருவள் எட்டிப் பார்த்தாள். நிற்கும் புத்த பிட்சுவை முதலில் பார்த்துவிட்டு, "உங்களுக்கு யார் வேண்டும்?" என்று பணிவோடு கேட்டாள்.

அன்பான குரலில், "மகளே நீ, விக்கிரம சிங்காவின் மனைவி லிஸியாதானே" என்று கேட்டான்.

விஜயன். இதைக் கேட்டவுடன், "உள்ளே வாருங்கள் ஐயா" என்று உள்ளே அழைத்துச் சென்று கதவைத் தாழிட்டாள். பிட்சுவிற்கும், உடன் வந்துள்ள அருணகிரிக்கும் ஆசனமிட்டு விட்டு அறையின் ஓரத்தில் தூளியில் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் அருகில் சென்று நின்று கொண்டிருந்தாள்.

"பரவாயில்லை; நீயும் உட்காரு லிசியா, நான் உன் கணவர் விக்ரம சிங்காவின் உயிர் நண்பன் கனக விஜயன். உன்னைச் சில நிமிஷங்கள் இந்த பிட்சு வேடத்தில் ஏமாற்றி விட்டதற்கு மன்னிக்க வேண்டும். இது என் மகன் அருணகிரி," என்று விஜயன் கூறி முடிப்பதற்குள்,

லிசியா வியப்பின் எல்லைக்கே சென்று திரும்பினாள்.

"எதற்கு இந்த வேடம் அண்ணா? என்னால் நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்ளவே முடியவில்லை. வள்ளியம்மை சவுக்கியமாக இருக்கிறாளா என்று விசாரித்தாள்.

லிஸியாவின் கணவர் விக்ரமசிங்காவிற்கு, பாக்கு பாக்டரியில் வேலை. பெண் குழந்தை பிறந்து ஆறு மாதமாவதற்குள் ஒரு லாரி விபத்தில் இறந்து விட்டான். விஜயனும் அவனும் நீண்ட நாளைய நல்ல நண்பர்கள். அவனுடன் விஜயன் இங்கு அடிக்கடி வருவான்.

இவளிடம் வள்ளியம்மையின் துயரக்கதையை எப்படிக் கூறுவது என்று விஜயன் தயங்கிக் கொண்டு இருந்தான். அவள் மீண்டும் வள்ளி யைப் பற்றிக் கேட்கவே வேறு வழியின்றி அனைத் தையும் கூறி முடித்தான்.

வள்ளியம்மையின் பிரிவைக் கேட்டு நீண்ட நேரம் அழுதாள் லிஸியா. பிறகு தன்னைத் தேற் றிக்கொண்டு அவர்கள் இருவருக்கும் உண்பதற்கு சில பலகாரங்களைக் கொண்டுவந்து வைத் தாள். இதற்குள் துாளியில் இருந்த குழந்தை அழுதது. அதை எடுத்து பால் கொடுத்து விட்டு திரும்பவும் தூளியிலிட்டு ஆட்டி னாள் குழந்தை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

ஆட்டிக் கொண்டே "லிசியா, நான் இங்கு வரவேண்டும் என்று திட்டமிட்டு வரவில்லை. குழந்தைக்கு ஏதும் வாங்காமல் வந்து விட்டேன். வருகிற வழியில பக்கத்துத் தெருவிலே ராணுவத் தினர் சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பைத்தேடித்தான் உன்னை தேடிக் கொண்டு சட்டென்று இங்கு வந்து விட்டேன்?" என்றான் விஜயன்.

பரவாயில்லை அண்ணா! இரவு தங்கிப் போகி றீர்களா? உங்கள் சவுகரியம் எப்படி?" என்று கேட்டாள் லிஸியா.

நான் இரவு தங்குவதற்கு இல்லை முன்னைப் போல என் நிலைமை இப்போது இல்லை எந்த நிமிடமும் போலீசில் சிக்கலாம் சிக்கினால் எனக்கு சிறைதான் அதனால் அருணகிரியை, மனைவியின் அண்ணன் பரமகுருவிடம் ஒப் படைத்து விட்டேன். அவர்கள் சென்னையி லிருந்து வந்திருக்கிறார்கள். இரண்டு நாளில் ஊருக்குப் போய் விடுவார்கள்.

அருணகிரியை பார்க்க வேண்டுமென்று வந்தேன். பிறகு நாங்கள் எங்கேயோ புறப்பட்டு எப்படியோ இங்கு வந்து விட்டோம். நீ எனக்காக ஒரு உதவி செய்ய வேண்டும் லிசியா," என்றான் விஜயன்.

ஒரு தென்னந் தோப்பில் தலைமறைவாக இருந்து வருகிறேன் இரவு அங்கு போய்ச் சேரா விட்டால் நண்பர்கள் கவலைப்படுவார்கள்

அருணகிரியை உன் பொறுப்பில் விடுகிறேன். இன்று ஒரு இரவு இங்கு தங்கியிருக்கட்டும். விடிந்து அவனை ஹார்பர் ரோடில் உள்ள எலிசபெத் ஓட்டலில் கொண்டு போய் விட்டு விடு. நான் புறப் படலாமா லிசியா." என்றான் விஜயன்.

லிசியா, "நீ தைரியமாக போய் வா அண்ணா. நீ சொன்னபடியே செய்கிறேன்; கவலைப் படாதே," என்று சொன்னாள்.

விஜயன் அருணகிரியை முத்தமிட்டு விடை பெற்றுக் கொண்டு, திறந்த கதவு வழியே வெளியேறி விட்டான்.

அருணகிரியின் மனமெல்லாம் தந்தை திடீரென்று தோன்றி திடீரென்று மறைந்து விட்டதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

எந்த நிமிடமும் தன் தந்தையின் உயிருக்கு ஆபத்து என்பதை அவர் லிஸியாவிடம் பேசிக் கொண்டதிலிருந்து அருணகிரி உணர்ந்து கொண்டான். இதை நினைக்கையில் அவனுக்கு தன்னையும் மீறித் துக்கம் வந்து விட்டது.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்ததும் "அருணகிரி சீக்கிரமாக படுத்துக் கொள். காலையில் உன்னை சீக்கிரம் ஓட்டலில் கொண்டுபோய் விடுகிறேன். அங்குள்ளவர்கள் வெளியே போன உன்னைக் காணாமல் கவலைப்படுவார்கள் அல்லவா?" என்று கூறி அவனைப் படுக்கச் செய்தாள்.

இரவு மணி இரண்டு இருக்கும். திடீரென்று வெளியில் அழுகையும், இரைச்சலுமககக் கேட்கவுமே சட்டென்று விழித்துக் கொண்ட லிஸியா ஜன்னலை திறந்து பார்த்தாள், எதிர் வரிசையில் உள்ள சில வீடுகள் தீப் பற்றி எரிந்து கொண்டிருந்தன. நிமிட நேரத்தில் அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அவளைப் போலவே ஒன்றிரண்டு சிங்களவர்களைத் தவிர ஐம்பதுகுக்கம் மேற்பட்ட வீடுகளில் தமிழர்களே

இருந்தனர். அத்தனை பேரும் தோட்ட வேலைக் காரர்கள். அவர்களைத் தான் ஒழித்துக்கட்டி கொண்டிருந்தனர் கலவரக்காரர்கள். லிசியா விற்கு புரிந்து விட்டது. இனி அவர்கள் மத்தியில் சிக்கிக்கொண்டுள்ள தன் கதி என்ன? தன்னை யாருக்கு தெரியும் தப்புவிக்க. ஐயோ இந்த பிள்ளை இந்த சமயத்திலா என்னிடம் வந்து சேர வேண்டும் என்றெல்லாம பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தாள். கதவு தட்டப்படும் ஓசை கேட் டதும் திடுக்கிட்டுப் போனாள்.

அசந்து தூங்கிக் கொண்டிருந்த அருணகிரியை அப்படியும் இப்படியும் அசைத்து எழுப்பினாள். வாசற் கதவு தட்டப்படும் ஓசை வர வர அதிக ரித்தது.

லிஸியா வாயின்மேல் ஆள்காட்டி விரலை வைத்து மவுனமாக அருணகிரியை அழைத்துச் சென்று ஒரு பத்திரமான இடத்தில் ஒளித்துவிட்டு வந்து,கையில் குழந்தையை எடுத்துக் கொண்டபடி சென்று கதவைத் திறந்தாள்.

எதிரே இரண்டு ராணுவத்தினர்கள் நின்று கொண்டு, "உள்ளே யார் இருக்கிறார்கள்," என்று கர்ஜித்தார்கள்.

"என்னையும் குழந்தையும் தவிர வேறுயாரும் இல்லை. என் கணவர் கூட இறந்துவிட்டார்," என்று சிங்கள மொழியில் கூறினாள்.

அதையும் நம்பாத அவர்கள் தங்களது பூட்ஸ் காலால் நாற்காலிகளையும், மேஜைகளையும் உதைத்தபடி அங்குமிங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு ஒன்றும பேசாமல் வெளியேறி விட்டனர்.

அவர்கள் போனதும் வேகமாக சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்தாள் லிஸியா. ஒரு கண்டத்திலிருந்து தப்பினோம். இனி அருணகிரியை அழைத்து வரலாம் என்று அவள் உள்ளே திரும்பினாள்.

சிறிது நேரத்தில் மூங்கில்கள் வெடித்துச் சிதறுவது போன்ற ஓசையும், புகைநாற்றமும் எழுந்தது. அப்படியே 'வீல்' என்று தன்னையும் மீறி அலறிவிட்டாள் லிஸியா, அவளது வீட்டுக்கூரைபாதிக்கு மேல் பக்கத்து வீட்டோடு சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

லிஸியாவின் அலறலைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்த அருணகிரி வீடு பற்றி எரிவதைப் பார்த்து பயந்து நடுங்கினாள்.

லிஸியா தன் குழந்தையை மார்போடு அணைத்தபடி சுவர் ஓரமாக ஒட்டி நின்று கொண்டிருந்தாள்.

என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்த லிசியாவிற்கு

அருணகிரி தைரியம் சொன்னான். அங்குமிங்கும் தாறுமாறாக எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைத் தாண்டிச் சென்று வாசற் கதவை அகலத் திறந்து வைத்துவிட்டு வந்தான்.

குழந்தையை சுமந்தபடி ஓரமாக நிற்கும் லீசியாவின் கரத்தைப் பற்றி இழுத்தபடி "தைரியமாக வாருங்கள்; நாலே எட்டில் வாசல் வழியாக ஓடி வெளியே போய்விடலாம்" என்று அவளையும் இழுத்தபடி முன்னே சென்றான்.

அப்போது—

# 18

## வள்ளியம்மை வந்தடைந்தாள்

சற்றும் எதிர்பாராமல் மேலே பாதி எரிந்து கொண்டிருந்த பெரிய உத்திரம் ஒன்று தடா லென்று லிஸியாவின் மேல் விழுந்து விட்டது.

அடியற்ற மரம் போல் அப்படியே சாய்ந்து விட்ட லிஸியாவின் கையிலிருந்த குழந்தை எட்டச் சென்று விழுந்து 'வீல்' என்று அலறியது. பளிச் சென்று தாவி குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்ட அருணகிரி, ஒரு கையால் லிஸியாவின் மீது விழுந்துவிட்ட உத்திரத்தைப் பலம் கொண்ட மட்டும் நகர்த்திப் பார்த்தான்.

லிஸியாவும் சுயமாக முன்று எழுந்திருக்க முடியாமல்; அவளது இரு கைகளுமே உத்தி ரத்தின் அடியில் சிக்கிக்கொண்டிருந்தன. தலையில் அடிபட்ட இடத்திலிருந்து ரத்தம் வழிந்தோடியது.

அருணகிரியின் போராட்டத்தைக் காணச் சகி யாத லிஸியா முனகிய குரலில், "என்னை மறந்து

விடு அருணகிரி. நான் போனால் போகிறேன். என் குழந்தை லீனாவை மட்டும் எப்படியாவது காப்பாற்றி வெளியே கொண்டு சென்று விடு. அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். என் இறுதி ஆசையை நிறைவேற்றுவாயா அருணகிரி?" என்று அழுதாள்.

"சத்தியமாக உங்கள் குழந்தையை நான் காப்பாற்றுவேன். என்னை முற்றிலும் நம்புங்கள் லிசியா!" என்று அருணகிரியும் அழுதான்.

அவனது உறுதிமொழியில் நம்பிக்கை அடைந்து விட்டவளைப் போல் சில நொடிகளில் லிஸியா இறந்து விட்டாள்.

லேசாக கீழ்வானம் சிவந்து கிழக்கு வெளுக்கத் துவங்கியிருந்தது. இரவு முழுவதும் மிகவும் பொறுப்புடன் கடமைகளைச் செய்து களைத்த சிங்கள ராணுவத்தினர் ஓய்வெடுக்கச் சென்று விட்டார்களோ என்னமோ கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித நடமாட்டமே இல்லை.

நினைத்து நினைத்து அதிர்ச்சியில் அழும் குழந்தையை கையிலெடுத்துக் கொண்டு இரவு வந்த வழியை அரைகுறையாக நினைவிற்கு கொண்டு ஒரு வழியாக ஓட்டலை அடைந்தான் அருணகிரி.

துறைமுகப் பகுதியாதலால் அந்த அதிகாலை ஆறு மணிக்கே ஓட்டல் சுறு சுறுப்பாக இயங்கத் துவங்கியிருந்தது.

அருணகிரி வேகமாக லிப்டில் ஏறி தங்கள் அறை அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவைத் திறந்த லட்சுமி அம்மாளுக்கு எதிரே கையில் குழந்தையுடன் அருணகிரி நிற்பதைக் கண்டு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. ஆயினும் அதைப் பற்றி உடனே ஏதும் கேளாமல், "உள்ளே வா அருணா," என்று அழைத்தாள்.

அருணகிரி வந்து விட்டதை அறிந்த கல்யாணியும் காந்திமதியும் முன் ரூமிற்கு வந்தனர். பேப்பர் படித்துக் கொண்டிருந்த பரமகுரு அதை மடித்து விட்டு உள்ளே வந்தார்.

எல்லாருடைய பார்வையும் அருணகிரியின் கையிலிருந்த குழந்தையின் மீதே படிந்திருந்தது.

ஆயினும் அருணகிரியாகக் கூறும் வரை அதைப் பற்றிக் கேட்க வேண்டாமென்று எண்ணினார்கள்.

இரவு முழுவதும் அவனை காணாமல், அனைவரும் உறங்காமல் இருந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்ததை கூறிய லட்சுமி அம்மாள், "எங்கேடா போயிருந்தே அருணகிரி? ராத்திரி ஏன் வரவில்லை?" என்று கேட்டாள்,

அருணகிரி முதல்நாள் இரவு தந்தையுடன் புறப்பட்டதிலிருந்து லிஸியாவிற்கு சத்தியம்செய்து கொடுத்து விட்டு வந்தது வரை ஒன்று விடாமல்

கூறிவிட்டு பரமகுருவையும், காந்திமதியையும் பார்த்தான்.

சட்டென்று குழந்தையை காந்திமதியிடம் நீட்டினான்.

சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த பரமகுருவிற்கு, 'பகீர்' என்றது. அதில் கண்ட செய்தியை அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

மாமாவினுடைய மூன்று கம்பெனிகளையும் குண்டர்கள் தரைமட்டமாக்கி விட்டனர். எவ்வளவு பெரிய நிறுவனங்கள் நிமிட நேரத்தில் ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டன. வருத்தத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இந்த விஷயத்தை அம்மாவிடமும், கல்யாணியிடமும் எப்படித் தெரிவிப்பது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது டெலிபோன் மணி அலறியது. பரமகுரு அவசரமாக போனை எடுத்து "ஹலோ!" என்றார்.

எதிர் முனையிலிருந்து குணரத்னா குட்மார்னிங் கூறிவிட்டு, "பேப்பர் படித்தீர்களா?" என்று கேட்டார்.

"இப்போதுதான் பார்த்தேன் என்னால் நம்பவே முடியவில்லை. மிஸ்டர் குணரத்னா," என்றார் பரமகுரு தழுதழுத்த குரலில்.

"என்னாலும் இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கு விடியற்காலை மூன்று மணிக்கே தகவல் வந்து விட்டது. நேற்று மாலை ஐந்து மணி வரை எல்லா கம்பெனியிலும் ஷிப்ட் வேலை முடிந்து போன பிறகு திட்டமிட்டது போல இந்த சதி நடந்திருக்கிறது. பல நிறுவனங்கள் நம்முடையதைவிட பெரியவை பிரபலமானவை. நேற்று வேலை முடிந்து வந்தது; இன்று காலை டிரஸ் செய்து கொண்டு வேலைக்குப் போக, நிறுவனமே இல்லை.

எல்லாரும் சாப்பிட்ட பிறகு, பரமகுரு அவர்களிடம் பேப்பரில் வந்துள்ள செய்தியைப் படித்துக் காட்டினார்.

அதைக் கெட்ட கல்யாணி வெகுநேரம் கற்சிலை போல் அபபடியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

"ஐயோ இந்த வயதான காலத்தில் பொன்னம்பலத்திற்கு இப்படியொரு சோதனையா?" என்று லட்சுமி கண்ணீர் விட்டாள்.

கல்யாணி சிறிது நிதானத்திற்குப் பிறகு "மாமாவிற்கு நான் என்ன பதில் சொல்ல மாமி?" என்று பரமகுரு கேட்டார்.

கல்யாணி சட்டென்று தன்னை சமாளித்துக் கொண்டு, "இது என்ன பொய்யா; அல்லது

மறைக்கிற காரியமா? பேப்பரிலேயே, அழித்து நிர்மூலமாக்கப்பட்ட கம்பெனிகளின் விபரம் என்று பட்டியல் போட்டு பிரசுரித்திருக்கிறான். சீக்கிரமாகவே சொல்லி விடுவதுதான் நல்லது. உங்க மாமா இதையெல்லாம் கேட்டு ஒன்றும் கவலைப்பட மாட்டார்!"

சுமார் பன்னிரண்டு மணி இருக்கும். எல்லாரும் சாப்பிட்டு முடித்த பிறகு மாமாவிடமிருந்து டிரங்கால் வந்தது. பரமகுரு அதை எடுத்தார்.

"பரமு! குணரத்னா எல்லா விஷயத்தையும் எனக்கு சொன்னார். பேப்பர் படித்திருப்பீர்கள். சரி! இனிமேல் உன் புரோகிராம் என்ன? எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. யார் செய்த புண்ணியமோ ஒரு எஸ்டேட் வாங்கினேன் அறுபது லட்சமாவது இங்கே தங்கிச்சு. அதுவரைக்கும் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

"சரி! நீ உன் கூடவே, கல்யாணி, தங்கமணி இருவரையும் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போய்விடு. நான் இங்கிருந்து நேராக அங்கே வருகிறேன். அங்கே போன பிறகு என்ன செய்ய வேண்டுமென்று சேர்ந்து யோசிக்கலாம். கொஞ்சம் கல்யாணியைக் கூப்பிடு," என்றார் மாமா.

பரமகுரு கல்யாணியைக் கூப்பிட்டு கையில் போனை கொடுத்தார்

மாமாவைப் போலவே எவ்வித சலனமும் இல்லாமல், கல்யாணியும் மாமாவிடம் பேசிவிட்டு, "சரி நான் இவர்களுடன் சென்னைப் புறப்படு கிறேன். அங்கே சீக்கிரமா வந்து சேருங்கள். வீட்டை என்ன செய்ய? ஒரு தடவை போய் வேலைக்காரர்களிடம் நேரில் பார்த்து சொல்லி விட்டு வரவேண்டாமா?

"சென்னையிலிருந்து அதையெல்லாம் நான் சொல்லிக் கொள்கிறேன் சென்னை போனதும், மாப்பிள்ளைக்கும், பெண்ணிற்கும் லெட்டர் எழுது. தங்கமணியை, அவள் அம்மா, அப்பா. அழைத்துக் கொண்டு போகட்டும். நான் இந்தியா வந்து உன்னை அழைத்துக்கொண்டு சிங்கப்பூர் வரும் வரையிலும்நீ சென்னையில் பரமகுருவின் வீட்டிலேயே தங்கியிரு. முதலில் ஊருக்குப் போக எத்தனை டிக்கட் வேண்டுமோ அதை குணரத்னா மூலம் வாங்க ஏற்பாடு பண்ணிக் கொள்," என்று போனை கீழே வைத்தார்.

அவர்களை ஏற்றி வந்த கார் விமான நிலையத்தை வந்தடைந்ததும், எல்லாரும் இறங்கினார்கள்.

கையில் குழந்தையுடன் காரிலிருந்து இறங்கிய அருணகிரி, அந்த விமான நிலையத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளத்தில் மூண்டெழுந்த துக்கத்தை அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. சென்ற வாரம் இதே விமான நிலையத்திற்கு தன் தாயோடு வரும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தான்.

இந்த வாரம் அதே விமான நிலையத்தில் தாயை இழந்து அனாதையாக நிற்கிறான்.

உண்மையில் தாயை மட்டும்தானா?

லிஸியா வீட்டோடு, தந்தையையும் இழந்து விட்டான்.

மரணக் கூண்டினுள் நுழைபவனைப் போல் அன்று தன் தந்தை தன்னிடம் பிரியா விடை பெற்றுச் சென்ற காட்சியை இப்போது நினைத்தாலும் அவன் உடல் நடுங்குகிறது.

அன்று இதே விமான நிலையத்தில் செல்வந்தர்கள் மத்தியில் ஓர் ஏழையாய் தன் தாய் ஒதுங்கி நின்றாள்.

இன்று—

பல லட்சங்களுக்கு அதிபதியாக இதே இடத்தில் தன்னோடு நிற்பதற்கு அந்தத் தாய் இல்லை; அவள் அன்பு இல்லை!

அன்று ஏழையாக இருந்தாலும், தந்தை பாசமும், தாயன்பும் அவனுக்குப் பஞ்சமில்லாமல் வற்றாமல் கிடைத்து வந்தன.

இன்று அந்த ஜீவநதிகள் இரண்டுமே அவன் வரை வற்றி விட்டன. ஒரே காலகட்டத்தில், தாயையும், தந்தையையும் இழந்து நிற்கும் அவன் ஓர் அனாதை... அனாதை... அவனால் அதற்கு மேல் சிந்திக்க முடியாமல் தலையே சுழல்வது போலிருந்தது. துயரம் பெரும் உருண்டையாகத் தொண்டையை அடைத்தது, "அம்மா...அம்மா..." என்று உள்ளம் கதறியது.

அந்தக் கதறலைக்கேட்டு ஆறுதல் கூறுவதைப் போல், "அருணகிரி நீ அனாதை இல்லை, உன்னை விட்டு நான் எங்குமே போய் விடவில்லை. என்னால் போகவும் முடியாது. நான்தான் ஒரு குழந்தையாக உன் கையில் தஞ்சம் அடைந்திருக்கிறேனே. இனி நீ வருந்தலாமா? இந்தப் பரிசுத்த மான அழகில், கபடமில்லாத உள்ளத்தில், கள்ள மில்லாத சிரிப்பில் நான் உன் கண்களுக்குத் தெரிய வில்லையா? என்னைப் பார்," என்று அவனுள் யாரோ கூறும் குரல் கேட்டது,

கையில் இருக்கும் குழந்தை சிணுங்கியது.

அருணகிரி அந்தக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டபடி, "வள்ளியம்மா!" என்று தன்னை மறந்து கத்தி விட்டான்.

அவன் குரலைக் கேட்டு, பரமகுரு, லட்சுமி அம்மாள், காந்திமதி கல்யாணி, பாபு, ராதா, தங்கமணி எல்லாரும் திரும்பிப் பார்த்தனர்.

ஆனால் அவன், யாரையும் பாராமல் குழந்தையையே பார்த்தபடி, "வள்ளி... வள்ளி..." என்று கொஞ்சிக் கொண்டிருந்தான். அப்போது அவனது கண்களில் வழிந்தோடும் கண்ணீரைக் கண்டு யாருமே கவலைப்படவில்லை. ஆம்! அது ஆனந்தக்கண்ணீர் அல்லவா?



## ஆசிரியரின் சிறுவர் நூல்கள்

1. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரசா
2. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள்
3. கப்பு கான்வென்ட்டுக்குப் போகிறாள்
4. ஜேம்ஸ்பாண்ட் சங்கர்
5. காப்டன் குமார் அகலி
6. மாஸ்டர் ராஜா
7. மங்காபுரி வீரன்
8. நாடோடி இளவரசன்
8. நாடோடி இளவரசன்
9. கவிமணியின் கதை
10. பிள்ளையார் சிரித்தார்